விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 06 ஞாயிற்றுக்கிழமை (23.10.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 308

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஐ.நா. செயலாளரை கூட்டமைப்பு சந்திக்கிறது

## சமகால நிலைமைகள் தொடர்பில் விளக்கமளிக்கப்படுமாம்

(மட்டக்களப்பு)

வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனை நேரில் சந்தித்து விளக்கமளிக்கவுள்ளது.



இத்தகவலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

# கடாபி மரணம் விசாரணை அவசியம்

## ஐ.நா.,அமெ. வலியுறுத்து

(ஜெனிவா)

லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கேணல் கடாபி கொல்லப்பட்டவிதம் தொடர்பில் முழுமையான விசாரணைகள் இடம்பெற வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வலியுறுத்தியுள்ளார்.

கேணல் கடாபியின் சொந்த ஊரான சேர்ட் பகுதியில் வைத்து அவர் கைது செய்யப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்பதை வெளிப்படுத்தும் கைத்தொலைபேசி காணொளிக் காட்சிகள் மிகவும் சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கேணல் கடாபியின் மரணம் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் (19ஆம் பக்கம் பார்க்க)

# சரணடைந்த புலித்தலைவர்களின் கொலைக்கும் கேணல் கடாபி கொலைக்கும் ஒற்றுமையுண்டு

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவிப்பு

(நியூயோர்க்)

லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கடாபியின் கொலைக்கும் இலங்கையின் வெள்ளைக் கொடி சம்பவத்துக்கும் ஒற்றுமைகள் தென்படுவதாக நியூயோர்க்கை தலைமையகமாக கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

சேர்ட் நகரில் கேணல் கடாபி கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர் புரட்சிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்

எனினும் சண்டையின்போது அவர் கொல்லப்பட்டதாக இடைக் கால அரசு கூறி வருகிறது.

இலங்கையின் வெள்ளைக்கொடி சம்பவத்திலும் இவ்வாறான குற்றச்சாட்டுக்களே முன் வைக்கப்பட்டுள்ளன என்று கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களும் அவர்களது குடும்பத்தினரும் சரணடைய முற்பட்ட வேளையில் அரச படையினரால் கொல்லப்பட்டார்கள். அதற்கான சாட்சியங்களும் முன்வைக்கப்பட்டன.

எனினும் அதனை இலங்கை அரசாங்கம் மறுத்திருந்தது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் கூறியுள்ளார். (பா)

# முன்னாள் போராளிகள் 811 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளது

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் 811 முன்னாள் போராளிகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உலங்கு வானூர்திகள், கடற்படை படகுகள் மற்றும் இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டு விடுதலைப்புலிகளின் ஆறு முக்கிய தலைவர்கள் உள்ளிட்ட 811 பேருக்கு சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த நபர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல்செய்யப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

கிளிநொச்சி,வெள்ளமுள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு போன்ற புலிகளின் முக்கிய முகாம்களில் புலனாய்வு பிரிவு பொறுப்பாளர்களாக கடமையாற்றிய ஆறு பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த புலி உறுப்பினர்கள் அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் எனத் தெரிவித்து அவர்களை விடுதலை செய்வதற்கு சில சக்திகள் முனைப்பு காட்டி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குண்டு மற்றும் கிளைமோர் குண்டுத் தாக்குதல் நடத்தியவர்களும் இந்தக் குழுவில் அடங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (பா-9)

# ஜனாதிபதி அடுத்த வாரம் ஆஸி பயணமாகிறார்

பொது நலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் வாரம் அவுஸ்திரேலியா செல்லவுள்ளார்.

இம் முறை பொது நலவாய நாடுகளின் மாநாடு அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை இந்த மாநாடு நடைபெறவுள்ளது. கடந்த சில வாரங்களாக இந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகள் பேர்த் நகரில் இடம்பெற்றன.

இரண்டு (20ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகள் பயங்கரவாத அமைப்பு அல்ல

# ஹேக் நீதிமன்றத்தின் தீர்ப்பு சர்வதேச தாக்கத்தை ஏற்படுத்தும்

## வாஷிங்டன் போஸ்ட் சுட்டிக்காட்டு

தமிழீழ விடுதலைப்புலிகள் பயங்கரவாத அமைப்பு அல்ல என நெதர்லாந்தின் ஹேக் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு சர்வதேச ரீதியாக தாக்கம் செலுத்தும் என வாஷிங்டன் போஸ்ட் செய்தித்தாள் வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த ஐந்து ஈழத் தமிழர்களுக்கு இரண்டு முதல் 6 வருட சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்த வழக்கில் அவர்களுக்கு 20 வருடங்கள் வரையில் சிறைத் தண்டனை வழங்கப்படலாம் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. எனினும் குறைந்தளவு தண்டனையே அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகளாக கொள்ள முடியாது என்று ஹேக் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய கொள்கையின் அடிப்படையில் விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகளாக கருத முடியாது. விடுதலைப் புலிகள் கடந்த 27 வருடங்களாக உள்நாட்டு போரில் ஈடுபட்டிருந்தனர். தவிர சர்வதேச ரீதியிலான போரில் ஈடுபட்டிருக்கவில்லை.

இதன் காரணமாக அவர்கள் மீது மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை சுமத்தல்லாமே தவிர அவர்களை பயங்கரவாதிகள் என்று கொள்ள முடியாது என்று ஹேக் நீதிமன்ற 3 நீதிபதிகள் கொண்ட குழு தனது தீர்ப்பில் (20ஆம் பக்கம் பார்க்க)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு



SINGER யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காணி ஆணையாளரால் சட்ட விரோதமான உத்தரவு

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

காணிஆணையாளர்சட்டவிரோத மான உத்தரவுகளை பிறப்பித்துள்ள தாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுவாமி நாதன் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாணங் களைச் சேர்ந்த மாவட்டச் செயலா ளர்கள் மற்றும் அரசாங்க அதிபர் களுக்கு சட்டவிரோதமான சுற்று நிருபம் ஒன்றை காணி ஆணை யாளர் அனுப்பிவைத்துள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கை காணிப்பதிவுச்சட்டங் களுக்கு முரணான வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள் ளது.

வடக்குக் கிழக்கில் நீதிமன்றங் கள் சீராக இயங்கி வருவதாகவும் இதனால் தேவையற்ற உத்தரவு களை பிறப்பிக்க வேண்டிய அவசி யம் இல்லை எனவும் அவர் தெரி வித்துள்ளார். (பா)

# கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் 90ஆவது ஆண்டு நிறைவையொட்டி கல்விக் கண் காட்சி ஒன்றை நடத்தவுள்ளது.

இக் கண்காட்சி நாளை திங்கட் கிழமை ஆரம்பமாகி இருதினங்கள் காலை 9.00 மணி தொக்கம் மாலை 5 மணிவரை இடம்பெறவுள்ளது.

இக் கல்விக்கண்காட்சியை வட மராட்சி வலய பிரதி கல்விப்பணிப் பாளர் சி.நந்தகுமார் ஆரம்பித்து வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக் கது. (பா-9)

# யாழ்.பல்கலைக்கழக மாணவர் மீது தாக்குதல் உரிய விசாரணைக்கு வலியுறுத்தியுள்ளோம்

## பல்கலைக்கழக நிர்வாகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் தாக்கப்பட்ட சம் பவம் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் எடுத்துள்ள நடவடிக்கை குறித்து பல்கலைக்கழக நிர்வாகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்தஅறிக்கையின்விபரம்வருமாறு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பால சுப்பிரமணியம் தவபாலசிங்கம் 16.10.2011 ஞாயிற்றுக்கிழமை அன்று இனந்தெரியாத நபர்களி னால் தாக்கப்பட்டமையை தொடர்ந்து மாணவர்களிடையே அச்ச உணர்வு ஏற்பட்டது.

இதன் விளைவாக மாணவர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து கல்விசார் நடவடிக்கைகளை புறக் கணித்தனர்.

இதேவேளை தாக்கப்பட்ட மாண வர் ஒன்றியத்தலைவர் உரிய முறை யில் தேறவேண்டும் என்பதனை முதலில் எதிர்பார்த்த பல்கலைக் கழக நிர்வாகம் அதற்குரிய நடவடிக் கைகளை சிறப்பான முறையில் கவ னிக்குமாறு யாழ்.போதனா வைத்திய சாலை வைத்தியர்களிடம் வேண்டிக் கொண்டது.

பல்கலைக்கழக நிர்வாகத்தினர் பலர்நேரில்சென்று வைத்தியசாலை யில் குறித்த மாணவத் தலைவரை பார் வையிட்டனர்.

மேலும் நடந்த சம்பவம் பற்றி யும் மாணவர்களது நிலை அவர் களது எதிர்பார்ப்புக்கள் என்பன பற்றியும் ஆராய்ந்த பல்கலைக்கழக நிர்வாகம், சிரேஷ்ட மாணவ ஆலோச கர் தலைமையில் பீடாதிபதிகள், மாணவ சங்கங்களின் சிரேஷ்ட பொருளாளர்கள் மற்றும் மாணவ ஆலோசகர்களுடன் இணைந்து மாணவ ஒன்றிய பிரதிநிதிகளுடன் சந்திப்புக்களை ஏற்படுத்தியிருந்தது.

மாணவர் பாதுகாப்பையும் சுமுக மான கல்விச்செயற்பாடுகளையும் கருத்தில்கொண்டு பல்கலைக்கழக நிர்வாகம் வடமாகாண பாதுகாப்புக் கட்டளைத்தளபதி, யாழ்மாவட்ட பிரதி பொலிஸ் அத்தியட்சகர் மற் றும் சம்பந்தப்பட்ட பாதுகாப்பு உயர் அதிகாரிகளை 22.10.2011 சனிக் கிழமை துணைவேந்தர் தலைமை யில் சந்தித்து கலந்துரையாடியது. இதன்போது பல்கலைக்கழக மாண வர்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படுவதுடன் இவ்வாறான சம்பவங்கள் நிகழாத நிலை ஏற்படுத்தப்பட வேண் டும்எனகோரப்பட்டதுடன்மாணவர்களது கோரிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டன.

நடந்த சம்பவத்தையும் கோரிக் கைகளையும் அறிந்து கொண்டு மாணவர்கள் அச்சமின்றி கற்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்படும் என்ற உறுதிபாதுகாப்பு உயர் அதி காரிகளினால் வழங்கப்பட்டது.

மாணவர் தலைவர் தாக்கப்பட் டமை தொடர்பான அனைத்துத் தரப்பிலுமான விசாரணைகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கை கள் துரிதமாக முன்னெடுக்கப்படு மெனவும் உறுதியளிக்கப்பட் டது (ந)

# உலகம் முழுவதும் கடாபிக்கு 200 பில்லியன் சொத்துக்கள்

(திரிபோலி)

லிபியாவின் முன்னாள் ஜனாதி பதி கேணல் கடாபிக்கு சர்வதேசம் முழுவதும் 200 பில்லியன் அமெரிக்க டொலர்கள் சொத்து இருப்பதாக விசார ணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

வங்கிக் கணக்கு ரியல் எஸ்ரேட் முதலீடுகள் என்பன அடங்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கத்தேய நாடுகளில் அதிகள வான பணம், தங்கம், முதலீடுகள் ஆகியவற்றை பதுக்கிவைத்திருந்த தாக அமெரிக்க நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதனால் மேற்கத்தேய நாடு கள் கடாபியின் சொத்துக்கள் மட்டு மன்றி லிபியாவின் முதலீடுகளை கைப்பற்றவும் இந்தியா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளுடன் மோதலில் ஈடுபட்டதாக அந்த நாளி தழ் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவிலும் கடாபிக்கு 37 பில்லியன் மதிப்பில் சொத்துக் கள் இருப்பது தெரியவந்துள்ளது.

இதேவேளை பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, இங்கிலாந்து ஆகிய நாடு களில் உள்ள கடாபியின் 30 பில் லியன் சொத்துக்களை அந்த நாடுகள் கைப்பற்றி உள்ளதாக அந்த நாளிதழ் மேலும் தெரிவித்துள்ளது. (பா)


## சாயிநாதன் திருமணசேவை

எங்களிடம் உள்நாடு/ வெளிநாடு ஆண், பெண் இருபாலாரின் ஜாதகக் குறிப்புக்கள் ஏராளம் உண்டு. இந்து, கிறிஸ்தவ எல்லா குலத்தவரின் சாதகங்களும் உண்டு.

சாயிநாதன் திருமணசேவை
இல. 27, பெர்னான்டோ வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு 06.
T.P.:- 0112364146 Fax:- 0112363436
e.mail:- rathan_met@hotmail.com
(6664)



## All Kind of Mobile Phones Unlocking & Software Updating Repairing

அனைத்து வகையான கையடக்க தொலைபேசிகளுக்கும் Unlocking & Software Updating Repairing செய்து கொடுக்கப்படும்.

| | |
|---|---|
| I Phone 4G & 4GS | Factory Unlocking |
| Blackberry | All Model's |
| Nokia SL3 | All Model's |
| Samsung | All Model's |
| Sony Ericsson | " " |
| HTC | " " |
| NEC | " " |
| Panasonic | " " |
| Dongle | " " |

எவராலும் முடியாத அனைத்து கையடக்க தொலைபேசிகளுக்கும் இங்கே Unlocking & Software Updating Repairing செய்து கொடுக்கப்படும்.

R &R TELECOM JAFFNA (PVT) LTD
M.P.C.S Building, 127, K.K.S. Road,
Jaffna, Srilanka.
Contact person - Mohamed Zuhair (Razmi)
Contact No. - 0722441441 (சி-4796)



## காணி விற்பனைக்கு

இல. 62. V.S. Lane, மானிப்பாய் வீதியில் கிணற்றுடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு
கஜவதனன் ரேட் சென்ரர்
இல. 609, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல. 0770365770
(சி-4799)



## வேலையாள் தேவை

அச்சகத்திற்கு கணனி தெரிந்த. வைண்டிங் (புத்தகம் கட்டுதல்) அச்சக வேலை தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு
ஹக்ஷன் பிறின்டேர்ஸ்
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.
(செங்குந்தா சந்தை மேல்மாடி)
T.P.:- 0212224937 (சி-4797)



One World in Innovage Int. (Pvt) Ltd. நிறுவனத்திற்கு Marketing & Business ஆகிய துறைகளில் உடனடி வேலை வாய்ப்பு. 6 மாத பயிற்சியின் பின் நிரந்தர வேலை வாய்ப்பு. அத்துடன் EPF, ETF, மருத்துவ காப்புறுதி வசதி இலவசமாக வழங்கப்படும்.

- வயது எல்லை 18-24
- 30 பேர் மட்டும் இணைத்துக் கொள்ளப்படுவர்
- தங்குமிடவசதி இலவசம்

மேலதிக தகவல்களுக்கு
0771363797, 0756727292
(6637)



## சேவை முகவர்

காணி, வீடுகள் விற்பனைக்கு

மணல்தறை லேன், பழம் வீதி, றக்கா றோட், கொக்குவில், 1-ம் குறுக்குத் தெரு, நுணாவில் 21 பரப்பு, யாழ். நகரில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புக்கு: சுந்தரம்
0774819801, 0212229177



## கட்டாக்காலி மாடுகள் ஏலவிற்பனை

அரியாலை கிழக்கில் பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடுகள் எதிர்வரும் 25.10.2011 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அரியாலை கிழக்கு பகுதியில் ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்கள் உடனடியாகவே ஏலத்தொகையினை செலுத்துவதுடன், ஏலம் விடப்படும் இடத்திலிருந்து மாடுகளை தாமதிக்காமல் எடுத்துச் செல்ல வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தலைவர்
நல்லூர் பிரதேச சபை.
(சி-4798)



## உலக நாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகைகள்!

மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு).
கடல்உணவுகள், மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

DHL WORLDWIDE EXPRESS கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது 650/= ரூபாவிலிருந்து

மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள், CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL WORLDWIDE EXPRESS



திருமுருகன் கொம் நெற்
இல. 259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, பிரதான வீதி, கிளிநொச்சி.



## தீபாவளியை முன்னிட்டு நல்லி சில்க்ஸ் மற்றும் ராசி சில்க்ஸ் இன்



இம்மாதம் 15-ம் திகதி தொடக்கம் 28-ம் திகதி வரை அட்டகாசமான ஆடைத்தள்ளுபடி....

தீபாவளியை முன்னிட்டு இந்தியா மற்றும் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து தரப்பினருக்குமான ஆடை வகைகள் குறைந்த விலையில்....



MEGA SALE

ராசி சில்க்ஸ் கல்யாணப்பட்டுப்புடைவைகளின் மகராசியான நிறுவனம் நல்லி சில்க்ஸ்

70,71A, நவீன சந்தை, யாழ்ப்பாணம். T.P:021 222 5571 121/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P:021 222 5573

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 2011 ஆம் ஆண்டிற்கான பத்தாவது மாதாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 10 மணிக்கு மாநகர முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (4)

## ஆலயத்தில் திருட்டு

நல்லூர் அரசடி வீதியில் அமைந்துள்ள அருள்மிகு செல்லப்பிள்ளையார் ஆலயத்தில் தெய்வங்களை வைத்து காவும் வாகனங்கள் திருட்டுப் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவம் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. இதில் ஆலயத்திலிருந்த யானை, குதிரை, எலி வாகனங்கள் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் ஆலய நிர்வாகத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் இதுவரை பொலிஸாரால் எவரும் கைது செய்யப்படவில்லை. (4-6)

## பாட்டுப்போட்டி

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினரால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாலர் பாடசாலை மாணவர்களிடையே பாட்டுப் போட்டி நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நூலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களை குறித்த நேரத்திற்கு போட்டிக்கு சமுகமளிக்குமாறு நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (4-3-29)

## பூநகரி பிரதேசத்திற்கான குடிநீர் விநியோகத்தை துரிதப்படுத்த வேண்டும்

பூநகரிக்கு என்றுமுள்ள பிரச்சினைகளில் குடிநீர் பற்றாக்குறை நிலவி வருவதாக பூநகரி பிரதேசசபை செயலாளர் பொ.சிறீஸ்கந்தராசா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், இப் பிரதேச மக்கள் குடிப்பதற்கும் சமைப்பதற்கும் கனரக வாகனங்கள் மூலம் தருவிக்கப்படும் நீரையே பயன்படுத்தி வருகின்றனர்.

கனரக வாகனங்களின் திருத்தவேலை காரணமாக ஒழுங்கற்ற நீர் விநியோகம் இடம்பெறுவதால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, இவ்விடயம் தொடர்பாக நீர் விநியோக சபை அக்கறை செலுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்தோடு பல வீதிகளில் (கேரதீவு-சங்குப்பிட்டி உட்பட) திருத்த வேலைகளை ஆரம்பித்துள்ள வீதி அபிவிருத்தி சபை, மாரிகால மக்கள் போக்குவரத்தைக் கருத்திற்கொண்டு தமது பணியைத் துரித கதியில் செய்து தர வேண்டும்.

வறுமைக் கோட்டு மட்டத்தில் உள்ள மக்களுக்கு இவ்வருடம் பங்குனி மாதம் முதல் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படவில்லை. அத்தோடு கமக்கார அமைப்பின் மூலம் நடைபெறும் கடற்கரைமண் அணைக்கட்டு வேலையில் ஈடுபடும் மக்களுக்கு வேலை நாட்களுக்கு அரிசி, மா வழங்குவதென தீர்மானித்தபடி வழங்கப்படுவதில்லை. அரிசி மாத்திரமே வழங்கப்படுவதால் உணவுத் தேவையைப்பூர்த்தி செய்தலும் பிரச்சினையாகியுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

## கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த கோரிக்கை

காரைநகரில் கட்டாக்காலி கால்நடைகளினால் நெற்பயிர்கள் அழிக்கப்பட்டு வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது பெய்த மழையினையடுத்து காரைநகரில் சுமார் ஆயிரத்து இருநூறு ஏக்கரில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந் நிலையில் கட்டாக்காலி கால்நடைகள் பயிர்களை மேய்ந்து அழிவினை ஏற்படுத்துகின்றன.

கடந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டது.

மீறும் பட்சத்தில் அவை பிடிக்கப்பட்டு குற்றப்பணம் அறவிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

ஆனால், கால்நடைகளை பிடிப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் வீதிகளில் கால்நடைகள் காணப்படுகின்றன. அத்துடன் அவை பயிர்ச் செய்கையை சேதப்படுத்துகின்றன.

அத்துடன் கடந்த காலங்களில் விவசாய சம்மேளனங்கள் கால்நடைகளை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டனர். ஆயினும் இவ்விடயத்தில் உரியவர்கள் கவனம் எடுக்காமை குறித்து விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (4-246)

## சிறுவர் தினம்

(யாழப்பாணம்)

பருத்தித்துறையிலுள்ள அஞ்சலியகத்தில் சர்வதேச சிறுவர் தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அ.ம.தி.மாகாண முதல்வர் அருட்தந்தை போல் நட்சத்திரம், கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், எம்.ஜே.எவ். குழுத்தலைவர் எஸ்.கமலநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அத்தோடு பலகலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (4-12)

## இராசி பலன்

23.10.2011
(ஐப்பசி 6, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
ஏகாதசி முற்பகல் 11.31 மணிவரை
பூரம் பின்னிரவு 3.46 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
ஏகாதசி விரதம், சித்தாமிர்தம்

**மேடம்** இனிமையான நாள், பிள்ளைகள் குடும்பப்பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், எடுத்த முயற்சி வெற்றிபெறும், கண்ணன் வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**இடபம்** புதிய தகவல்கள் வந்துசேரலாம், தாய் வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் வந்து சேரலாம், விருந்தினர் வருகை அதிகரிக்கும், தொழில் நன்மை உண்டு.

**மிதுனம்** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், இழுபறியாக இருந்த காரியங்களில் வெற்றி கிடைக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கடகம்** உங்கள் நல்ல யோசனைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், புதிய பொருட்சேர்க்கை உண்டு, வாக்குமேன்மை உண்டு, புதிய திட்டங்களில் வெற்றி கிடைக்கும்.

**சிங்கம்** இறைவழிபாட்டால் இனிமைகாண வேண்டியநாள். குடும்பப் பொறுப்புக்கள் கூடும், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, போசன சுகம் உண்டு.

**கன்னி** கிருஷ்ணர் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் அதிகரிக்கும், வெளியூர்ப் பயணங்களால் அலச்சல்கள் காணப்பட்டாலும் சிறு ஆதாயமும் கிடைக்கும்.

**துலாம்** பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், தொழில் முன்னேற்றம் உண்டு, வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வருவர்.

**விருச்சிகம்** தூர தேச செய்திகளால் மனம் மகிழ்வீர்கள், பயணங்களால் பலன் உண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், உற்சாகமான நாள்.

**தனுசு** தன்னம்பிக்கையுடன் பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், திடீர்ப்பயணங்களால் நன்மை உண்டு, உதாசீனப்படுத்தியவர்கள் உதவி செய்ய முன்வருவர்.

**மகரம்** எதிர்பாராத வகையில் சில மனக் குழப்பங்கள் ஏற்படலாம், பிரயாணங்களில் விழிப்புணர்வு தேவை, ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் சில அச்சுறுத்தல்கள் ஏற்படலாம்.

**கும்பம்** வாழ்க்கைத் துணைவழியே வரவுகள் வந்து சேரலாம். மதி நுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மீனம்** பகையாக இருந்தவர்கள் மனம் மாறுவர், செய்தொழிலில் மேன்மை உண்டு, எடுத்தகாரியம் எளிதில் நிறைவேறும், போசன சுகம் உண்டு, ஆரோக்கியம் சீராக ஆனந்தம் அடைவீர்கள்.

வளவன்

## வாரம் ஒரு தகவல்

### தீபாவளித் திருப்பம்!

"என்ன சேர்? புதுச் சட்டையைப் போட்டுக்கொண்டு அதற்கு மேலே துணி ஒன்றைப் போர்த்துக் கொண்டு வருகின்றீர்கள்?"

"எல்லாம் உங்களாலே தான்"

"என்னாலேயா?"

"ஆமாம். நீங்கள் ஒரு நல்ல ரெய்லர் என்று நினைத்து புதிதாக ஒரு துணி எடுத்து உங்களிடம் தைக்கக் கொடுத்தேன். அதற்காக இப்படியா தைக்கிறது? இந்தச் சட்டையைப் போட்டுக் கொண்டு வெளியால் சென்றால் பார்க்கிறவர்களெல்லாம் சிரிக்கின்றார்கள் சேர்! அதுதான்... ஹி... போர்த்துக் கொண்டு வந்துவிட்டேன்"

"போர்த்துக் கொண்டு வருகின்ற அளவுக்கா இருக்கின்றது அது?"

"பின்னே? என்ன தையல் தைக்கின்றீர்கள்? இந்தக் காலத்திலே உடம்பிலயே பிரமாதமாக தையல் போடுகின்றார்கள்..."

"உடம்பிலேயா?"

"ஆமாம்! நமது உடம்பிலே வெட்டுக்காயம் ஏற்பட்டுவிட்டால் வைத்தியர்கள் தையல் போடுகின்றார்கள் தானே! அதிலேயே நவீன முறையெல்லாம் வந்துவிட்டது"

"என்ன முறை அது?"

"பொதுவாக துணியிலே தையல் போடுவது வழக்கம். அமெரிக்காவிலே ஒரு வைத்தியர் 'வெல்டிங்'கே செய்கின்றாராம்!"

"வெல்டிங்கா?"

"இரும்பை இணைக்க வெல்டிங் செய்கின்றோமல்லவா... அது மாதிரி இது கணனி வெல்டிங். காயம் பட்ட இடத்திலே உள்ள திசுக்கள் சம்பந்தப்பட்ட விடயங்களை முன்கூட்டியே கணனியிலே பதிவு செய்து விடுகிறார்! அதனாலே காயத்துக்குத் தகுந்த மாதிரி அளவான லேசர் கதிர்களை வெளியிட்டு காயத்திலே உள்ள திசுக்களை இளக்கி இணைத்து விடுகிறார்! காயம் வெகு விரைவிலே மாறியும் விடுகிறது. வடுக்களும் அதிகமாகத் தெரிவதில்லை!"

"நீங்கள் சொல்வது சரி சேர்... அதற்காக உங்கள் சட்டைத் துணியிலே நான் வெல்டிங் பண்ண முடியுமா?"

"உங்களை நான் என்ன வெல்டிங்கா செய்யச் சொல்கின்றேன்? ஒழுங்காகத் தைத்தால் போதாதா?"

"அப்படி நான் என்னதான் சேர் செய்துவிட்டேன்?"

"போர்வையை எடுங்கள்... பார்க்கிறேன்"

"பாருங்கள் சேர் எல்லோரும் சட்டையிலே பொத்தானை எங்கே வைப்பார்கள்? முன்பக்கம் தானே? நீங்கள் முதுகுப் பக்கம் வைத்திருக்கின்றீர்கள்"

"சேர்! நான் ஒன்று சொன்னால் நீங்கள் தப்பாக நினைக்க மாட்டீங்களே"

"சொல்லுங்கள்"

"நான் பொத்தானை முன்பக்கம் தான் வைத்திருக்கின்றேன். இது இப்பொழுது ஏன் முதுகுப்பக்கம் இருக்கின்றதென்றால்... நீங்கள் தான் அவசரத்திலே சட்டையைத் திருப்பி மாட்டியிருக்கின்றீர்கள்!"

"ஹி...!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 75 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 110 | 160 | 100 |
| தக்காளி | 50 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 20 |
| கோவா | 40 | 60 | 25 |
| கரட் | 80 | 120 | 60 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 45 | 40 | 50 |
| வாழைக்காய் | 35 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 100 | 60 | 100 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 70 |
| பாகற்காய் | 80 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 |
| கரணைக்கிழங்கு | 60 | 60 | 60 |
| பயற்றங்காய் | 80 | 100 | 50 |
| லீக்ஸ் | 40 | 40 | 40 |
| பீற்றூட் | 20 | 20 | 20 |
| கறிமிளகாய் | 40 | 90 | 60 |
| முருங்கைக்காய் | 25 | 100 | 50 |
| போஞ்சி | -- | 110 | -- |
| கத்தரி தம்புள்ள | 30 | 40 | 20 |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 10 |
| தேசிக்காய் | 250 | 240 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 20 | 30 |

# பொருளாதாரம், தொழில்நுட்ப துறைகளில் பின் நிற்கின்றோம்

## பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

**கொழும்பிலுள்ள பெறுமதியான காணிகளை தொடர்ந்தும் குடிசைகளாகவும் சாக்கடைகளாகவும் வைத்திருப்பது முழு நாட்டுக்கும் கேவலம். எனவே குடிசைகளை அழித்து மாடி வீடுகளை அமைத்து கொழும்பை அழகுபடுத்த வேண்டும். இதற்கு எதிர்க் கட்சியினது ஒத்துழைப்பும் தேவை என பிரதமர் டி.எம்.ஜயரத்ன கூறினார்.**

நாடாளுமன்றில் நடைபெற்ற வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி (திருத்தம்) சட்டமூலம் மற்றும் மதுவரி கட்டளைச் சட்டத்தின் கட்டளை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் மேலும் கூறியவை வருமாறு, காலி முகத்திடலில் இருந்த இராணுவத் தலைமையகத்தினால் எமக்குப் பெரும் செலவுகள் ஏற்பட்டு வந்தன. அதனால் அந்த இடத்தைப் பெரும் இலாபம் ஈட்டும் நோக்குடன் இடமாற்றினோம்.

அதுமட்டுமின்றி நவலோகவுக்கு முன்பாக இருக்கும் காணி சுமார் 25, 30 வருடங்களாக தரிசு நிலமாக காணப்பட்டது. அதையும் வெறுமையாக வைக்காமல் இலாபம் பெறும் நோக்கில் விற்பனை செய்வோம்.

நாம் பொருளாதாரம்,தொழில் நுட்பத்துறைகளில் பின் நிற்கிறோம். எனவே, நாமும் உலகுடன் இணைந்து செயற்பட வேண்டும். சீனா இன்று அமெரிக்காவுக்கு கடன் வழங்கும் நிலைமையில் உள்ளது. சீனா தன்னிடமிருந்த பெறுமதியான காணிகளை சுவிற்சர்லாந்திற்கு விற்பனை செய்து அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொண்டது. எனவே, நாமும் மாறி வரும் உலகுக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும்.

இந்த நிலையில் சமூகத்தில் காணப்படும் மது, புகைப்பிடித்தல் கலாசாரத்தை மாற்றிய மைக்க மதகுருமார்களின் ஒத்துழைப்பு வேண்டும். அவர்கள் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தேர்தலில் வாக்குறுதிகள் அளிப்பது சகஜமாகும்.

வாக்குறுதி அளிக்காவிட்டால் அது தேர்தலாகாது. ஆனால், வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்ற முடியாது. எனினும் மஹிந்த சிந்தனைத் திட்டத்தை அப்படி எண்ணக்கூடாது. அதனை நூறு வீதம் நிறைவேற்ற முயற்சி செய்து வருகிறோம்.

கொழும்பிலுள்ள அனைத்துக் குடிசை வீடுகளும் அழிக்கப்பட வேண்டும். இவற்றுக்கு எதிர்க்கட்சிகளது ஒத்துழைப்பும் எமக்கு வேண்டும். கொழும்பு நகரம் அவலட்சணமாக காட்சியளித்தால் வெளிநாட்டவர்கள் இந்த நகரத்தை பார்வையிட்டு நாடு திரும்பும் போது மிக கேவலமாகவே விமர்சிப்பர். இது எமது நாட்டுக்கே கேவலம்.

அதனால் கொழும்பைத் தொடர்ந்தும் அப்படியே வைத்திருக்காமல்மாடி வீடுகளை அமைத்து நகரை அழகுபடுத்த எம்முடன் இணையுங்கள் என்றார்.

(4-2)

## கிரிக்கெட் சுற்று போட்டி

தென்மராட்சி பிரதேச கிரிக்கெட் அணிகளுக்கிடையே 523 ஆவது படைப் பிரிவினரால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிச் சுற்றுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு சாவகச்சேரி நகரசபை மைதானத்தில் நடை பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எம். கத்துருசிங்க கலந்து சிறப்பிக்கவுள்ளார். (4-3-29)

## எங்களுக்கே இந்நிலை தமிழர்களின் நிலை?

### ரணில் தெரிவிப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாநகர சபையின் நிர்வாகத்தை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியிருந்தும் இன்னும் ஏன் நிர்வாகத்தை கையளிக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

எங்களுக்கே இவ்வாறானதொரு நிலை என்றால் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களுக்கு இந்த அரசாங்கம் எவ்வாறு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கப் போகிறது என்றும் கேள்வி எழுப்பினார். (4-2)

# நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சட்ட ஒழுங்குகள் மீறப்படுகின்றன

## விக்ரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு



(கொழும்பு)

அரச பயங்கரவாதத்திற்கு எதிராக நாட்டில் மக்கள் எழுச்சிகள் வெடிக்க ஆரம்பித்துள்ளன. சட்ட ஒழுங்குகள் அதிகாரவர்க்கத்தினரால் மிகவும் மோசமான முறையில் உதாசீனம் செய்யப்படுகின்றன. இதுவே மாற்று சக்திகள் உருவெடுப்பதற்கு காரணமாக அமைந்துள்ளது என்று புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

வடக்கு- கிழக்கில் மாத்திரம் அல்ல நாட்டின் அனைத்து பகுதிகளிலுமே அரசாங்கத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் விஸ்தரித்துள்ளது. எனவே, அரசின் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய தலைவர்களே இலங்கைக்கு தேவையென்றும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வெற்றிபெற்ற ஜனநாயக மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் சீனோர் விருந்தகத்தில் வைத்து வைபவரீதியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். தெஹிவளை கல்கிசை மாநகரசபை உறுப்பினரான விக்கிரமபாகு கருணாரட்ன சத்தியப்பிரமாணம் மேற்கொண்டதன் பின்னர் உரையாற்றுகையிலே மேற்கண்டளவாறு கூறினார்.

இவர் இங்கு தொடர்ந்து கூறுகையில், ஜனநாயகம் மற்றும் சுதந்திரமற்ற அச்சுறுத்தலான சூழலிலேயே தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றோம்.

ஆளும் தரப்பு முக்கியஸ்தர்களுக்கு இடையிலேயே துப்பாக்கிச் சூடுகள் கூட இடம் பெற்றன. பாதுகாப்பிற்கு வருபவர்கள் எவ்விதமான தயக்கம் இன்றி சுட்டுக் கொள்கின்றனர். அதேபோன்று அனுமதியின்றி அரசியல் முக்கி யஸ்தர்கள் வீடுகளை சோதனை இடுகின்றனர்.

நாட்டில் சட்ட ஒழுங்குகள் பாரியளவில் மீறப்படுகின்றன. பொது மக்கள் பொறுமையிழந்து சட்டத்தைக் கையிலெடுக்க ஆரம்பித்து விட்டனர்.

ஜனநாயகத்திற்கு எதிரான அரச பயங்கரவாதத்திற்கு எதிராக பாரிய சக்திகள் உருவாகியுள்ளன. இச் சக்திகள் வெளிப்படும் காலம் வெகு தொலைவில் இல்லை. வடக்கில் ஜனநாயக அரசியலை மேற்கொள்ள முடியவில்லை. தெற்கிலும் அதே நிலை தான் காணப்படுகின்றது. எனவே, நாட்டில் சட்ட ஒழுங்கினை பாதுகாக்க கட்சி பேதங்களை மறந்து செயற்பட வேண்டும் என்றார். (4-2)

# ௯0 ஆண்டுக்குள் கடல்நீர் மட்டம் 2 அடிவரை உயரும்

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

பூமி வெப்பமயமாகி வருவதால் அடுத்த 90 ஆண்டுகளுக்குள் கடல் நீர் மட்டம் 2 அடி உயரும் என கோபன்ஹேகன் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் கூறியிருப்பதாவது,

உலகம் முழுவதும் வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் வெளியிடும் காபனீர் ரொட்சைட் வேகமாக வெப்பமயமாகி வருகிறது.

இதனால் அட்லாண்டிக் கடல் பகுதியில் உள்ள பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் உயர்ந்து வருகிறது. இதைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்போது உள்ள நிலை தொடர்ந்தால் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் கடல் மட்டம் 2 அடியும் அதற்கடுத்த 4 ஆண்டுகளில் 6 அடியும் உயரும்.

இதனால் கடற்கரையை ஒட்டி உள்ள தாழ்வான பகுதிகள் கடலில் மூழ்கும் அபாயம் உள்ளது.

ஏற்கனவே கடல் மட்டம் சில இடங்களில் உயர்வதாலும் சுனாமி ஏற்படுவதாலும் சிறிய தீவுகள் காணாமல் போவதாக ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.

(4-2)








பூநகரி பிரதேச செயலகத்தில் சர்வதேச சிறுவர், முதியோர் மற்றும் வலுவுடையோர் தின விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சுவிஸ் அபிவிருத்தி நிறுவன கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்திற்கான திட்ட முகாமையாளர் திருமதி ஜெனிப் ஜென்ரிஸ் முதியவர் ஒருவருக்கு பரிசுப் பொதியொன்று வழங்குவதையும் பூநகரி மகாவித்தியாலய மாணவிகளின் கலைநிகழ்வுகள் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:- பூநகரிச் செய்தியாளர்)*

# காணிப்பதிவு குறித்து த.தே.கூட்டமைப்பின் அறியாமை எனக்கு கவலை தருகின்றது

## அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவிப்பு



(கொழும்பு)

காணிப்பதிவு நடவடிக்கை குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் சரியான தகவல் அறியாமை குறித்து தான் ஆச்சரியமடைவதாக காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் குறிப்பிடுகின்றார்.

அத்துடன் காணிப்பதிவு நடவடிக்கை என்பது வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மட்டுமல்லாது நாட்டின் சகல பகுதிகளிலும் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே சட்ட ரீதியாக முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கைகளுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படும் அத்துமீறிய இனப்பரம்பலைக் குறைக்கும் குடியேற்றங்கள், காணி பதிவு நடவடிக்கை உள்ளிட்ட தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத்தலைவர் இரா.சம்பந்தன் கொண்டு வந்த ஒத்திவைப்பு நேரப் பிரேரணை மீது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த பிரேரணை தொடர்பில் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

காணி பதிவு நடவடிக்கைகளை காணி அமைச்சு தான் தோன்றித் தனமாகவும் தன்னிச்சையாகவும் முன்னெடுக்கின்றது என மதிப்பிற்குரிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

காணிப்பதிவு குறித்து அவரின் அறியாமை எனக்கு கவலையளிக்கின்றது. 1998 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க உரிமைகளைப் பதிவு செய்யும் சட்டப்படியே தற்போது காணிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த சட்டத்தையும் பதிவு நடவடிக்கைகளையும் முறையாக விளங்கிக் கொள்ளாமல் இரா. சம்பந்தன் உரையாற்றியமை எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

இந்த காணி நடவடிக்கைகள் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மாத்திரமல்ல நாட்டின் சகல பகுதிகளிலும் முன்னெடுக்கப்படுகின்றது.

இதில் யாரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இந்த காணிப்பதிவு நடவடிக்கைகள் தொடர்பில் மும்மொழிகளிலும் படிவங்கள் அச்சிடப்பட்டு கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்டன. பகிரங்கமாகவே நாங்கள் இதனைச் செய்தோம்.

எதிர்வரும் இரண்டு வருடங்களில் இந்த நடவடிக்கைகளை பூர்த்தி செய்து விடுவோம். இப்போது இதனை எதிர்ப்பவர்கள் எதிர்காலத்தில் இதனால் நன்மையடைவார்கள் என்றும் அவர் கூறினார். (4-2)

# மீள்குடியேற்ற கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா பெற தவறியோருக்கு

(பூநகரி)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக் குடியேறியவர்களில் இதுவரை 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை பெற தவறியவர்களுக்கு மாவட்ட அரச செயலகத்தால் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பூநகரி பிரதேச செயலகத்தில் அப்பணம் வழங்கப் படவுள்ளதாக பூநகரி பிரதேச செயலர் கே. எஸ். வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் இக்கொடுப்பனவைப் பெற தவறியவர்கள் சமூகம் தந்து பெற்றுக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.(4-3-84)

# சிவில் பாதுகாப்பு குழுக்கள் குற்றங்களை கட்டுப்படுத்த முன்வருவது அவசியம்

## பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

சிவில் பாதுகாப்பு குழுக்களில் உள்ளவர்கள் சமூக நோக்குடனும் சமூக சிந்தனையுடனும் செயற்பட வேண்டும் என்று கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நீல் தளுவத்தை கூறினார்.

கிளிநொச்சி நகரில் உள்ள பொலிஸ் - பொதுமக்கள் பிரிவு அலுவலகத்தில் இடம் பெற்ற ஒன்றிணைந்த கூட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், கிளிநொச்சி குற்றச்செயல்களை கட்டுப்படுத்த பொலிஸார் பலவித நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். சட்டத்தை மீறும் பொலிஸார் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பதினைந்து சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் நீதிமன்றில் உள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறான சிறுவர்கள் துஷ்பிரயோகங்களை தடுக்க சிவில் பாதுகாப்பு குழுக்கள் முன்வர வேண்டும்.

திருட்டுத்தனமாக வானங்களை பதிவு செய்து பின்பு கைவிடப்பட்ட வாகனம் எனக் கூறி வாகன உரிமைகோரும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறானவர்களை நாங்கள் கைது செய்து சட்டத்தின் முன்பு கொண்டு வந்துள்ளோம்.

இதேவேளை காணிப்பிணக்குளுக்கு பொலிஸார் தீர்வு காண முடியாது. இதை தீர்ப்பதற்கு நீதிமன்றத்திற்கு அரச அதிபர், பிரதேச செயலருக்கும் தான் அதிகாரம் உண்டு. இதேவேளை பொலிஸாரால் முடியாத காரியத்தை சிவில் பாதுகாப்பு குழுக்கள் செய்ய முடியும். மக்களோடு மக்களாக இருந்து இவற்றை மேற்கொள்ள முடியும்.

வன்னியில் பிரபாகரன் பயன்படுத்திய 20 இலட்சம் ரூபா பெறுமானம் உள்ள தண்டவாளம் கடத்தப்பட்ட போது எம்மால் முறியடிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களும் சிவில் பாதுகாப்பு குழுக்களும் விழிப்பாக இருந்து குற்றச் செயல்களை கட்டுப்படுத்த முன்வர வேண்டும் என்றார். (4-2)


உங்கள் பொறியியல் கனவை நனவாக்கும்...

City & Guilds

சர்வதேச அங்கீகாரம் பெற்ற Engineering Qualifications



Civil Engineering | Quantity Surveying | Electrical & Electronics | Motor Vehicle | Mechanical



City & Guilds Progression Path

Postgraduate Diploma Level (IVQ Level 7) 12 months

Professional Engineer (Equivalent to BEng-UK)

Graduate Diploma Level (IVQ Level 6) 12 months → JOB

NCT/ NCIT → Advanced Diploma Level (IVQ Level 5) 12 months → JOB

A/L → Diploma Level (IVQ Level 3) 12 months → JOB

O/L → Certificate Level (IVQ Level 2) 5 months

City and Guilds UK
பொறியியல் பாடநெறிகளை
A/L வர்த்தகப் பிரிவு, கலைப் பிரிவு மாணவர்கள்
Certificate மட்டத்திலிருந்தும், கணிதப் பிரிவு, விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள்
Diploma மட்டத்திலிருந்தும் தொடரலாம்

ec Chartered Engineer ஆகவும், Engineering Council - UK உறுப்பினராகவும் குறுகிய வழி.

அனுபவம், தகைமை வாய்ந்த விரிவுரையாளர்கள் குழாம்.

இலகு தவணைக் கட்டண முறை.

City & Guilds மூலம் பரிந்துரைக்கப்பட்ட பாட விதிகளுக்கு உட்பட்டு பிரயோக முறையில் (Practicals) கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம்.

TVEC Reg. no.: P01/0414

மேலதிக விபரங்களைப் பெற உங்கள் [Name] [Address] [Course] போன்ற விபரங்களை 0777 762 283 க்கு SMS செய்யுங்கள் அல்லது

0214 66 66 99 / 0771 067 394

SCOT
SKILLS COLLEGE OF TECHNOLOGY
SKILLS INTERNATIONAL (PVT) LTD.
Jaffna Branch
இல. 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email : jaffna@skillsinternational.lk
Website : www.skillsinternational.lk

SIPL JOB NETWORK | LEARNING PLUS | WORK PLACE LEARNING

Colombo | Kandy | Jaffna தொழில்நுட்பக் கல்வியின் முன்னோடி

# பொலிஸ், இராணுவத்தின் ஒத்துழைப்புடன் திருட்டு சம்பவங்களை கட்டுப்படுத்த முடியும்

## சர்வமதக்குழுவினர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் ஒத்துழைப்பு பெறப்பட வேண்டும் என தேசிய சமாதான பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடலின் போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய சமாதான பேரவையின் யாழ். சர்வமதக் குழுவினரின் ஏற்பாட்டில் இந்து ஆலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் திருட்டு சம்பவங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கும் நோக்கில் நேற்று நாகவிகாரை மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் போது மேலும் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் வருமாறு, யாழ். குடாநாட்டில் அதிகரித்து வரும் இந்து ஆலயங்களை மையப்படுத்திய திரட்டுச் சம்பவங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இங்குள்ள இந்து ஆலங்களில் பல நூற்றாண்டு பழைமையான விக்கிரகங்கள், சிற்பங்கள் இன்னும் பல பொருட்கள் திருடப்பட்டு வருகின்றன.

பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்படுவதனால் ஆலய நிர்வாகத்தினர் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகிறது.

அத்தோடு ஆலயத்தில் திரட்டுச் சம்பவம் இடம்பெற்று விட்டது என முறைப்பாடு செய்யச் சென்றால் பொலிஸார் அதீத அக்கறை செலுத்த வேண்டும்.

ஆலயத்திலுள்ள சிலைகள், தங்கநகைகள், பித்தளைப் பொருட்கள் திருட்டுப்போவதை தடுக்க முடியவில்லை என்றாலும் தெய்வங்களைச் சுமந்து செல்லும் வாகனங்களையாவது திருடர்களிடமிருந்து காப்பாற்ற பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் முற்பட வேண்டும்.

வீதிகளின் ஊடாகவே அதனை எடுத்துச் செல்ல முடியும். மறைத்து எடுத்துச் செல்வது மிகவும் கடினம்.

இவ்வாறு ஆலயங்களில் மேற்கொள்ளப்படும் திருட்டுச் சம்பவங்களினால் மக்கள் மத்தியில் சமய நம்பிக்கையும் தெய்வ நம்பிக்கையும் குறைந்து செல்கிறது.

இங்குள்ள ஆலயங்களில் உள்ள பொருட்களை திருடி வெளிமாவட்டங்களுக்கு கொண்டு சென்று வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்காக ஆலயங்களில் மேற்கொள்ளப்படும் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் ஒத்துழைப்பை பெறுவதோடு இரவு வேளைகளில் ரோந்து நடவடிக்கையையும் அதிகரிக்க வேண்டும் என தீர்மானம் எடுக்கப்பட்டது. இவ்வாறு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. (4-6)



யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் கைகழுவுதல் தினம் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல நந்து கொண்ட மாணவர்கள் சுத்தமான முறையில் கைக ளைக் கழுவும் பயிற்சியினைப் பெறுவதைப் படத்தில் காணலாம்.

# தமிழ். தே.கூட்டமைப்பு தமிழ் மக்களை தவறான பாதைக்கு இட்டுச் செல்கின்றது

## பிரதியமைச்சர் முரளிதரன் குற்றச்சாட்டு

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசிவிட்டே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரச தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர் என மீள்குடியேற்றப் பிரதியமைச்சரான விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது மீண்டும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உயிரூட்ட முயற்சிப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வடக்கில் அரசாங்கம் பாரிய அபிவிருத்திப் பணிகளைச் செய்து வருகிறது. அங்கு சிங்களவர்கள் எவரும் குடியேற்றப்படவில்லை.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்மக்களை தவறான வழியில் நடத்திச் சென்று அவர்களை மிக மோசமான நிலைக்கு இட்டுச் செல்கிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (4-2)

# ஜனாதிபதியின் அவுஸ்திரேலிய விஜயத்தை தடுக்க முனைந்தவர் ஈழநதி என்ற போராளி

## அரசாங்கம் தெரிவிப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அவுஸ்திரேலிய விஜயத்தை தடுக்கும் வகையில் அந்த நாட்டின் சமஷ்டி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளவர் விடுதலைப்புலிகள் அமைப்பின் மாலகி படைப்பிரிவின் முன்னாள் பெண் போராளியான ஈழநதி என அரசாங்கம் குறிப்பிடுகின்றது.

மீனா கிருஷ்ணமூர்த்தி என்ற பெயரில் இலங்கைக்கு எதிராக போர் குற்றச்சாட்டுகளை சுமத்தி அவர் அவுஸ்திரேலியாவின் ஏ.பி.சி தொலைக்காட்சிக்கு 9 நிமிட செவ்வி ஒன்றை வழங்கியுள்ளார்.

இவர் குருபரன் என்ற புலிகளின் ஆயுதப்படைப் பிரிவின் உறுப்பினரை திருமணம் செய்துள்ளதாக பாதுகாப்பு படையினர் கண்டறிந்துள்ளனர். ஈழநதி என்ற இந்த பெண் அவுஸ்திரேலிய அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு தரப்பினரை தவறாக வழி நடத்தி இலங்கைக்கு எதிராக போர்க்குற்றவழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் இதற்கு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் ஆதரவு வழங்கியுள்ளதாகவும் அரசாங்க தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையை பொதுநலவாய அமைப்பில் இருந்து நீக்கும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கை விசாரணைக்கு எடுப்பதா இல்லையா என்பது குறித்து சமஷ்டி நீதிமன்றம் இன்னும் தீர்மானிக்கவில்லை.

ஜனாதிபதிமகிந்தராஜபக்ஷ,பாலிதகோஹன, அவுஸ்திரேலியாவுக்கான இலங்கை தூதுவர் அட்மிரல் திசர சமரசிங்க ஆகியோர் வழக்கின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.(4-2)

### தேசிய உளவளத்துறை தினம்

(பூநகரி)

தேசிய உளவளத்துணை தினம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பூநகரி பிரதேச செயலகத்தில் பூநகரி உதவி அரசாங்க அதிபர் கே.எஸ். வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி எம்.ஜெயராஜ், சிறப்பு விருந்தினராக பூநகரி 66 ஆவது படைப்பிரிவின் தளபதி சனத்கொடித்துவக்கு, பூநகரி 66 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி கோல் டைமல் ஜெயசூரியா, பூநகரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ. செல்வம், வண பிதா எவ்.ஆர். பிரியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (4-12-84)

# மத்திய கிழக்கில் பணிபுரிவோரின் சம்பள நிலுவைகள் பெறப்பட்டுள்ளன

## அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு

மத்திய கிழக்கில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளும் இலங்கைப் பணிப் பெண்களுக்கு உதவிகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருக்கலாம் என அரசாங்கத் தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.நடைமுறை சிக்கல்கள் காரணமாக நாம் எதிர்பார்த்தளவு விரைவாக பலருக்கு உதவிகளை வழங்க முடியாமல் போயிருக்கலாம் என அமைச்சர் கூறினார்.

எனினும் சம்பள நிலுவைகள் என்பவற்றை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கத்தினால் முடிந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். இலங்கைத் தூதரகங்களில் பணியாற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் பணிப்பெண்களுடன் மூர்க்கமாக நடந்துகொள்கின்றனர் எனவும் அவர்களுக்கு பொதுமக்கள் உறவு தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண குற்றம் சுமத்தினர்.

இக்குற்றச்சாட்டுக்கு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பதிலளிக்கையில், வெளிநாட்டுகளில் பணியாற்றும் ஊழியர்களின் பிரச்சினைகளை கையாள்வதற்காக இலங்கைத் தூதரகங்ளில் விசேட பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டுள்ளதாக அவர் கூறினார். (4-2)

# மாங்குளம் பகுதியில் வெடிபொருள் மீட்பு

(கொழும்பு)

வவுனியா மாங்குளம் பிரதேசத்தில் வெடி பொருள் தொகையொன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாங்குளம் மல்லாவி பிரதேசத்தில் இந்த வெடிபொருட்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் இருந்து 4.25 கிலோ கிராம் எடை கொண்ட ரி.என்.ரி.ரக வெடிப் பொருள் மீட்கப்பட்டதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மல்லாவி இராணுவ முகாமைச் சேர்ந்த படையினரால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார். (4-2)



# கட்சியின் இனவாதக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியவர் சந்திரிகா

## அமைச்சர் ராஜித புகழாரம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இனவாதக் கொள்கைகளில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவே மாற்றத்தை ஏற்படுத்தியதாக மீன்பிடித்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். தனிப்பட்ட ரீதியில் சந்திரிகாவை தமக்கு பிடிக்காத போதிலும் அவரது கொள்கைகளை ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இனவாத கோட்பாடுகளிலிருந்து சுதந்திரக் கட்சியை லிபரல் கோட்பாடுகள் நோக்கி நகர்த்தியவர் சந்திரிகாவே என அவர் தெரிவித்துள்ளார்.

சந்திரிகாவின் கணவர் விஜயகுமாரதுங்க லிபரல் கொள்கைகளில் அதீத நம்பிக்கை கொண்டிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

சந்திரிகாவின் தந்தையான எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவினால் அறிமுகம் செய்யப்பட்ட தனிச் சிங்கள கொள்கையினால் ஏற்பட்ட தவறுகளை சந்திரிகா திருத்தி அமைத்தார் என அவர் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மை மக்களுக்காக குரல் கொடுக்கும் தமது கொள்கைகளில் மாற்றம் ஏற்படுத்தப் போவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் சுயகௌரவம் நிலைநாட்டப்படும் வரையில் இலங்கையின் சுயகௌரவத்தை நிலைநாட்ட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# படுகொலையை மூடிமறைக்க இடமளிக்கப் போவதில்லை

## பாரதவின் மகள் தெரிவிப்பு

(கொழும்பு)

தந்தையின் படுகொலைச் சம்பவத்தை மூடி மறைக்க இடமளிக்கப் போவதில்லை என அண்மையில் முல்லேரியா பிரதேசத்தில் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் புதல்வி ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

மூளையற்ற, மனநிலை பாதிக்கப்பட்ட மனிதர் எனக் குறிப்பிட முடியாத நபர்களின் கைகளினால் நல்ல இதயம் கொண்ட தமது தந்தை கொல்லப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பான நீதிமன்ற விசாரணைகளைப் பார்வையிட்டதன் பின்னர் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

வழக்கு விசாரணை நடைபெறும் சகல நாட்களிலும் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்கப் போவதாகவும் தமது குடும்பத்திற்கு நியாயம் கிட்டும் வரையில் போராட்டம் தொடரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இறுதி மூச்சு இருக்கும் வரையில் நியாயத்திற்காக குரல் கொடுக்கப்போவதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த விசாரணை நடத்தி வந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளது எனவும் இது ஓர் துரதிர்ஷ்டவசமான சம்பவம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தந்தையின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் நீதிமன்ற விசாரணைகளில் நியாயம் கிட்டாவிட்டால் மாற்றுத் திட்டமொன்றின் மூலம் நியாயத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் சூளுரைத்துள்ளார். (4-2)

# வீடமைப்புத் திட்ட பயனாளிகளுக்கு வீடுகளை கட்டிமுடிக்க இறுதிச் சந்தர்ப்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் கீழ் பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டவர்கள் தமது வீடுகளை கட்டி பூர்த்தி செய்யும் இறுதிச் சந்தர்ப்பமாக எதிர்வரும் 31 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக நேர்ப் திட்டப் பதில் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி திட்டப் பயனாளிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் சில பயனாளிகள் இதுவரை தமது வீடமைப்பு பணிகளை முடிவுறுத்தவில்லை என்றும் எனவே, இவர்கள் மேற்சொன்ன திகதிக்கு முன்பு தமது கட்டுமானப் பணிகளை முடிவுறுத்தி உரிய கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளுமாறும் கேட்கப்கப்பட்டுள்ளது. (4-2)

# அரசகரும மொழிகள் தேர்ச்சி பரீட்சை 29 இல்

## ஆணையாளர் அநுர எதிரிசிங்க

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கான அரச கரும மொழிகள் தேர்ச்சிப் பரீட்சை எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறுமென பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், அரச ஊழியர்கள் சிங்கள மற்றும் தமிழ் மொழி அறிவை விருத்தி செய்யும் முகமாக வருடா வருடம் இப் பரீட்சை நடைபெற்று வருகின்றது. கடந்த இரு வருடங்களாக இப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடத்தப்பட்டு வருகின்றது.

2011 ஆம் ஆண்டுக்கான அரச கரும மொழிகள் பரீட்சை மேற் குறிப்பிட்ட திகதி நாடளாவிய ரீதியில் அமைக்கப்படும் 220 பரீட்சை நிலையங்களில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப் பரீட்சைக்கு 31 ஆயிரத்து 200 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளுக்கான இப் பரீட்சை I,II,III ஆகிய மட்டங்களுக்கு நடத்தப்படும் என்றார். (4-2)

# சட்ட ரீதியான ஆவணங்களை வழங்க நடவடிக்கை அவசியம்

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

30 வருடங்களுக்கு அதிகமாக நடைபெற்ற யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட தாக்கத்தினாலும் வேதனைகளினாலும் பாதிக்கப்பட்டு யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் வசிக்கும் அதிகமானோர் இன்னும் சமூகத்திற்கு அப்பால் பொது உரிமைகளோ அறிவூட்டல்களோ இன்றி வாழ்கின்ற நிலையில் அவர்களை மீண்டும் சமூகத்துக்குள் வரவழைப்பது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும் என்று தேசியமொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சமூக ஒருமைப்பாட்டை கட்டியெழுப்புவதற்காக தேசிய ரீதியாக நடத்தவுள்ள வேலைத்திட்டம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், நாட்டின் பிரஜைகள் என்ற ரீதியில் கட்டாயமாக ஒவ்வொரு நபர்களுக்கும் இருக்க வேண்டிய பிறப்பத்தாட்சிப் பத்திரம், திருமண அத்தாட்சிப் பத்திரம் மற்றும் தேசிய அடையாள அட்டை இன்றி பலர் இப்பிரதேசத்தில் இருப்பதனால் இந்த சட்ட ரீதியான ஆவணங்களை அந்நபர்களுக்கு வழங்குவதற்கு மிக விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இதுதொடர்பாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு இணைந்து விசேட நடமாடும் ஆவணச் சேவை வேலைத்திட்டங்களை வடக்கு- கிழக்கு பகுதிகளில் நீதி நியாயத்தினை சமமாக அணுகும் கருத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்துகிறது.

இதில் இன்னுமொரு நடவடிக்கையாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பட்டிபொலை பிரதேச செயலக காரியாலயப் பகுதியில் சட்ட ஆவணங்களை வழங்கும் நடமாடும் ஆவணச் சேவையானது நாளை மறுதினம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இங்கு குறிப்பிட்ட பிறப்பு , இறப்பத்தாட்சிப் பத்திரங்கள் வழங்குதல் , தேசிய அட்டை வழங்குதல், திருமண அத்தாட்சிப் பத்திரம் இல்லாதோருக்கு திருமண கையொப்பமிட்டு திருமண அத்தாட்சிப் பத்திரம் வழங்குவதோடு அது தொடர்பாக உள்ள செலவீனங்கள், முத்திரை கட்டணங்கள் , புகைப்படக் கட்ட ணங்கள் என்பனவும் அமைச்சினால் பொறுப்பேற்கப்படும் என்றார். (4-2)

# தீவக லயன்ஸ் கழகத்தின் மாபெரும் சேவை திட்டம்

(யாழ்ப்பாணம்)

தீவகத்தின் லயன்ஸ் கழகத்தினரால் முன்னெடுக்கப்படும் மாபெரும் சேவைத்திட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு புங்குடுதீவு சர்வோதய புஸ்பா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் மாணவர்களுக்கு பற்பசை, பற்தூரிகை மற்றும் சத்துணவு, தேநீர், மதிய உணவு வழங்கல், கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும் ,சலரோக இரத்தப் பரிசோதனை, உயர் குருதி அழுத்த பரிசோதனை, சலரோக விழிப்புணர்வும் தற்காப்பும் முதியோர்களுக்கு புதிய உடைகள், தேநீர், சிற்றுண்டி, மதிய உணவு வழங்கல், மரம் நடுகை, தொடர் சேவை ஆரம்பித்தல், அறநெறி பாடசாலை பிள்ளைகளுக்கு சத்துணவு வழங்கல் போன்றன நடைபெறவுள்ளதாக தலைவர் கே.கங்கைவேணியன் அறிவித்துள்ளார். (4-12)

STUDY IN UK
February 2012 Intake
University of Bedfordshire
Teesside University
Postgraduate / Undergraduate Courses
* IELTS / TOEFL Waived Off * Conditions Apply
flex Institute
Step Towards a Bright Future
(A Subsidiary of Flex Graphic)
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk

Minimum Qualification
G.C.E. (O/L)
Study in
GEORGIA
EUROPE



Hotel Management
(Duration 1 year)
Rs. 350,000/-
Course Fee
No IELTS
No Interview
No Bank Balance
flex Institute
Step Towards a Bright Future
(A Subsidiary of Flex Graphic)
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk

# ஐப்பசி மாத இராசி பலன்கள்




(மூலம், பூராடம், உத்தராடம் முதலாம் பாதம் வரை)

**செலவுகள் அதிகரிக்கும் நேரம்.**

***மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடந்து கொள்ளும் மகத்தான குணம் பெற்ற தனுசு இராசி நேயர்களே!***

நீங்கள் நன்கு சிந்தித்து செயல்படுவீர்கள். செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்வதில் வல்லவர்கள். வாழ்க்கையில் மிக வேகமாக முன்னேற வேண்டும் என்று எண்ணம் கொண்டிருப்பீர்கள். உங்கள் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறப் பின்னணியாகப் பலரும் இருப்பர். உங்கள் முன்னேற்றத்துக்கு காரணமே உடல் பலமல்ல. மூளை பலம் தான்.

உங்களுக்கு இம் மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது மாதத் தொடக்கத்திலேயே குரு வக்கிரம் பெறுகிறார். அஷ்டமாதிபதி சந்திரன் உங்கள் இராசியைப் பார்க்கிறார். மாதத்தின் தொடக்கம் இப்படி அமைவதால் வரவை காட்டிலும் செலவு கூடலாம். வருமானம் அதிகரிக்க வழி என்ன என்று யோசிப்பீர்கள்.

9 இற்கு அதிபதி சூரியன் நீச்சம் பெற்று, சுக்கிரனும் இணைந்திருப்பதால், பூர்வீக சொத்துக்களை விற்றுப் புதிய சொத்துக்கள் வாங்கும் அமைப்புக் கிட்டும். அரசு வழியில் சிக்கல்கள் ஏற்பட்டு அமைதியைக் குலைக்கலாம். வழக்குகள் இழுத்தடிப்பதோடு, பிணை தொடர்பான பிரச்சினைகளும் வந்து சேரும். எனவே குரு ப்ரீதி முறையாக செய்வது நல்லது. ஏதேனும் ஒரு வியாழக்கிழமை அல்லது பூராடம் நட்சத்திரம் அன்று குரு கோவிலுக்கு சென்று வானவர்கள் அரசனான வளம் தரும் குருவே என்ற குரு கவசம் பாடி குருவை வழிபட்டு வாருங்கள். குருவின் அருட்பார்வை உங்கள் மீது பதிவதால் சிக்கல்களில் இருந்து விடுபட இயலும். அதுமட்டுமல்ல 6 இல் கேது, 12 இல் இராகு இருப்பதால் உத்தியோக ஸ்தானம் பலம் இழந்து இருப்பதால், பணிபுரியும் இடங்களில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. இல்லையேல் சிக்கல்களைச் சந்திக்க நேரிடும்.

தைரியமும் தன்னம்பிக்கையும் தக்க விதத்தில் பெற்றிடும் நீங்கள், மாதத் தொடக்கத்தில் இருந்தே மனக் கட்டுப்பாட்டுடன் வேலை செய்வது மகத்தான பலனைத் தரும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி விருச்சிக இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக 4, 7 இற்கு அதிபதி 12 சஞ்சரிப்பது யோகம் தான். தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்து இணைவர். களஸ்திர ஒற்றுமை பலப்படும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகை கிடைத்து ஆச்சரியம் ஏற்படலாம்.

சுக்ரன் எதிர்வரும் 29 ஆம் திகதி விருச்சிகஇராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக 6 இற்கு அதிபதி 12 இல் சஞ்சரிப்பதால் விபரீத இராஜ யோகம் செயற்படப் போகிறது. திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். தெய்வத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரும். பெண் வழிச் சிக்கல்கள் நல்ல முடிவுக்கு வரும்.

எதிர்வரும் நவம்பர் 4 ஆம் திகதிக சிம்மஇராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக எந்தக் காரியமும் எடுத்தோம் முடித்தோம் என்று செய்து முடிக்க இயலும். பிள்ளைகளால் வந்த தொல்லைகள் அகலும், அடைமானம் வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வருவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றம் வந்து சேரும். பூர்வீகச் சொத்துக்கள் தீர்ப்புகள் மூலம் நல்ல முடிவுக்கு வரும்.இம்மாதம் வியாழன்தோறும் விரதம் இருப்பது நல்லது. செவ்வாய் தோறும் முருகப் பெருமான் வழிபாடு முன்னேற்றம் தரும்.

இம்மாதம் மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும். மங்களச் செலவுகள் அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் அனுசரிப்பு தேவை. புதிய நகை வாங்கி மகிழும் வாய்ப்பு கிட்டும். எண்ணங்களை செயலாக்க உறவினர்களைக் காட்டிலும் உற்ற நண்பர்கள் ஒத்துழைப்பர். உடன் பிறப்புகள் வழியே சுபகாரியப் பேச்சுக்கள் நல்லமுடிவுக்கு வரும். சர்ப்பசாந்தி செய்வது நல்லது.




(உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம்,அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்)

**அருகில் இருப்பவர்களை அனுசரித்து செல்ல வேண்டிய நேரம்!**

***ஏதாவது ஒரு சாதனை புரிய வேண்டும் என்ற எண்ணத்தில் செயற்படும் மகர இராசி நேயர்களே!***

கடுமையான உழைப்புக்குத் தயங்காதவர்கள் நீங்கள். முழுமையான கவனத்தை செலுத்தி ஒரு காரியத்தை முடித்துக் கொடுப்பதில் வல்லவர்கள். வம்பு சண்டைக்கும் போகமாட்டார்கள். உறவினர் பகை உங்களுக்கு அதிகமாகவே இருக்கும். கோபத்தால் பிறரைக் கடிந்துரைக்கும் வார்த்தைகள் உங்களையே பாதிக்கும் என்பதால் முன்னேற்றம் காண முன்கோபத்தை தவிர்ப்பது நல்லது.

உங்களுக்கு இம்மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது மாதத் தொடக்கத்திலேயே செவ்வாய் நீச்சம் பெறுகிறார். 4,11 இற்கு அதிபதியான செவ்வாய் நீச்சம் பெறுவதால் ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு அகலும்.

வருமானப் பற்றாக்குறை ஏற்படலாம். நினைத்த காரியத்தை நினைத் தபடி செய்ய அருகில் இருப்பவர்களின் ஒத்துழைப்புத் தேவைப்படலாம். இருப்பினும் இராசிநாதன் சனி இன்னும் சில மாதங்களில் செயல் ஸ்தானத்துக்கு பெயர்ச்சியாகப் போகிறார். அதுவரை கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

குருவின் வக்ர இயக்கம் அவ்வளவு நல்லதல்ல. சகோதர ஸ்தானாதிபதியாக குரு விளங்குவதால் உடன் பிறப்புக்கள் வழியே செலவுகள் அதிகரிக்கும். வீண் அலைச்சலும் விரயங்களும் ஏற்படுகின்றதே என்று கவலைப்படுவீர்கள். வழக்குகளில் தேக்க நிலை ஏற்படும். புதிய பொறுப்புகள் வந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளலாமா வேண்டாமா என்று சிந்திப்பீர்கள். 7 இற்கு அதிபதி சந்திரன் 6 இல் சஞ்சரித்து மாதம் தொடங்குவதால் வாழ்க்கைத்துணை அமைவதிலும் சிக்கல்கள் ஏற்படலாம்.

பொருத்தமற்ற வரன்கள் வந்து வருத்தத்தை உருவாக்கலாம். உறவினர் பகை உருவாகாமல் இருக்க அருகில் இருப்பவர்களை அனுசரித்துக்கொள்ளுங்கள். தொழிலில் போதிய கவனம் செலுத்தினால் தான் தொகை எதிர்பார்த்தபடி வந்து சேரும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி விருச்சிக இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக வருமானம் பெருகும். வளர்ச்சி கூடும். அந்நிய தேசத்தில் இருந்து அனுகூலச் செய்தி வந்து சேரும். எண்ணிய காரியங்களை எளிதில் முடித்துக் காட்டுவீர்கள். புண்ணிய ஸ்தல யாத்திரைகளை மேற்கொள்ளும் சூழ்நிலை அல்லது புண்ணிய காரியங்களுக்கு செலவிடும் சூழ்நிலை உருவாகும்.

இம்மாதம் 29 ஆம் திகதி விருச்சிக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாகப் பிள்ளைகள் வழியில் நல்ல செய்தி வந்து சேரும். சிக்கல்களில் இருந்து விடுபடுவீர்கள். தொழில் வளர்ச்சி மேலோங்கும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவார்கள். வெற்றிப்பாதையில் அடி எடுத்து வைக்கும் நேரம் இது.

எதிர்வரும் நவம்பர் 4 ஆம் திகதி சிம்ம இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. தடைகளும் தாமதங்களும் உருவாகலாம். தக்க சமயத்தில் உதவுவதாகச் சொன்ன நண்பர்கள் கையை விரிக்கலாம். உடல் ஆரோக்கியத்திற்கு என்று ஒரு தொகையை செலவிடும் சூழ் நிலை உருவாகும். அங்காரக வழிபாடு அல்லல்களைத் தீர்க்கும்.

இம்மாதம் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்ட வேண்டிய மாதமாக அமைகின்றது. உடல் ஆரோக்கிய குறைபாடு மாற்று மருத்துவத்தால் குணமாகும். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. உடன் பிறப்புகளால் விரயம் உண்டு.

பொருத்தமற்ற வரன்கள் வந்து தொல்லை தரும். குழந்தைகளை கூடுதல் கவனம் செலுத்திப் பார்த்துக் கொள்வது நல்லது. அருகில் இருப்பவர்களை அனுசரித்து செல்வதன்மூலம் ஆதாயம் அதிகரிக்கும் மாதம் இது.

சிவல்புரி சிங்காரம்

(தொடரும்)

# இம்மாதம் முதல் வாரத்தில் டெங்கினால் 299 பேர் பலி

## 19 ஆயிரத்து 774 பேர் பாதிப்பு

(கொழும்பு)

வருட ஆரம்பம் முதல் இம்மாதம் முதல் வாரம் வரை 299 பேர் டெங்கு காய்ச்சலினால் உயிர் இழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்கள் தடுப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து தொற்று நோய்கள் தடுப்பு பிரிவு குறிப்பிட்டுள்ளதாவது,

கட[illegible] செப்டெம்பர் மாதம் வரை நாடளாவிய ரீதியில் [illegible] ஆயிரத்து 774 பேர் டெங்கு நோய்க்கு ஆளாகியுள்ளனர்.

செப்டெம்பர் மாதம் மாத்திரம் 2 ஆயிரத்து 323 பேர் டெங்கு காய்ச்சலுக்கு ஆளாகியுள்ளமை பதிவாகியுள்ளது.

பருவ மழைப் பெயர்ச்சிக் காலம் ஆரம்பித்துள்ளதால் டெங்குக் காய்ச்சலை ஏற்படுத்தும் நுளம்புகள் பெருகி வளரும் என்பதால் நுளம்புகள் பெருகி வளரக்கூடிய இடங்களை அறிந்து நுளம்புகள் பெருகி வளராமல் தடுப் பதற்கான நடவடிக்கைகளை பொதுமக்கள் சிரத்தை கொ[illegible]டு மேற்கொள்ள வேண்டும். (4-2)

# வேலையற்றவர்களின் எண்ணிக்கை 4.3 வீதமாக குறைவடைந்துள்ளது

## புள்ளி விபரவியல் திணைக்களத்தின் அறிக்கையில் தகவல்

இவ்வாண்டில் காலாண்டு பகுதியில் இலங்கையில் வேலையற்றவர்களின் எண்ணிக்கை 4.3 வீதமாக குறைவடைந்துள்ளது என்று புள்ளி விபரவியல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு அரையாண்டு பகுதியில் இலங்கையில் வேலையற்றவர்கள் எண்ணிக்கை 3 இலட்சத்து 93 ஆயிரத்து 560 ஆக இருந்தது. இவ் எண்ணிக்கையானது 5.7 வீதமாக காணப்பட்டது.

இதேவேளை இலங்கையின் வேலையற்றோரின் எண்ணிக்கை குறைவுக்கு நாடு தழுவிய ரீதியிலான அபிவிருத்தி திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமையே பிரதான காரணமென தொடர்பாடல் தகவல் தொழில் நுட்ப அமைச்சின் செயலாளர் ஆனந்த அத்துகொரல குறிப்பிட்டுள்ளார்.

அதுதவிர அரச நிறுவனத்தில் அதிகளவிலான வெற்றிடங்கள் காணப்படுகின்ற போதிலும் தகைமையுள்ளதை கண்டுபிடிக்க முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் உதயம் மற்றும் வடக்கின் வசந்தம் ஆகிய அபிவிருத்தி திட்டங்கள் ஊடாக அதிகளவு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் வேலைவாய்ப்பிற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்க பெறுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-2)

# குருவின் பார்வையில்



**ஆன்மீகம் 11**

உங்கள் தன்மையை இன்னொருவருடன் ஒட்பிட்டுப் பார்பதால்தான் தாழ்வு மனப்பான்மை உருவாகிறது. இன்னொருவருடன் ஒப்பிட்டுப் பார்த்து, அவரை விடத்தாழ்வாக இருக்கிறேன். என்ற உணர்வு வரக் காரணமே, உங்கள் தன்மையைப் பற்றிய கவனம் உங்களுக்கு இல்லாமற் போனதால் தான். அதனால் தான் இன்னொரு வரைப் போல ஆக வேண்டும் என்ற முயற்சி நடக்கிறது.



தற்போது நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ, அதே போன்ற உடல், அதே போன்ற மனம், அதே போன்ற உணர்வில் உலகில் வேறு யாராவது இருக்கின்றார்களா? இதற்கு முன்னரும் யாரும் இருந்ததில்லை. இனிமேலும் வரப் போவதில்லை. நீங்கள் ஒரு தனித்தன்மையான உயிர். பார்க்கின்ற எல்லாமே தனித்தன்மையானதுதான். சுண்டு விரல்கூட தனித்தன்மையானது. உங்கள் சுண்டுவிரல் போல வேறொன்றை உலகில் நீங்கள் எங்கும் காண முடியாது. ஒவ்வொருவரின் கையில் இருக்கும் ரேகை கூட தனித்தன்மையானது. இது அற்புதமான படைப்பு. தனித்தன்மையான படைப்பு.

உங்களைப் போன்ற ஒரு மனிதர் பிரபஞ்சத்தில் இருந்ததில்லை.இனியும் வரப்போவதில்லை. இப்போதும் கூட அப்படியொருவரும் இல்லை. உங்கள் கணவர், உங்கள் மனைவி, உங்கள் குழந்தை, உங்களுக்கு விருப்பமானவர்கள், விருப்பமில்லாதவர்கள், உங்கள் மாமியார் என எல்லோருமே தனித்தன்மையானவர்கள்தான். இது தனித்தன்மையான உயிரென்று நீங்கள் உணரும்போது எதனையும் எதனோடும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியதில்லை. இது தனித்தன்மையான உயிரென்று நீங்கள் உணரும்போது தாழ்வும் இல்லை, உயர்வும் இல்லை. படைத்தலுக்கு மூலமாக எது இருக்கிறதோ அது படைத்தலை மிகவும் மதிப்புடன் உருவாக்கியதால்தான். ஒவ்வொரு உயிரும் தனித்தன்மையாக இருக்கிறது. படைத்தல் உங்களை தனித் தன்மையான உயிராக உருவாக்கியிருக்கும் போது, நீங்கள் உங்கள் தன்மையை இன்னொருவருடன் ஒப்பிட்டுப் பார்ப்பதில் ஒரு பயனும் இல்லை. உங்கள் தன்மையை முழுமையாக மலர வைப்பது எப்படியென்று மட்டுமே நீங்கள் பார்க்க வேண்டும்.

ஒரு ரோஜாச்செடி இங்கே இருக்கிறது. அருகே தென்னை ' மரமும் இருக்கிறது. ரோஜாச்செடி, தென்னை மரத்தைப் பார்த்து, "ஓ! அது மிக உயரமாக இருக்கிறதே, நான் அவ்வாறு இல்லையே" என்று நினைத்தால் ஒருபயனும் இல்லை. தென்னை மரத்திற்கென ஒருநோக்கம் இருக்கிறது. அதற்கென ஓர் அழகு இருக்கிறது. ரோஜாச் செடிக்கென ஒரு நோக்கம் இருக்கிறது. அதற்கென ஓர் அழகு இருக்கிறது. அதற்கான சூழலை, ஊட்டச்சத்தினை எப்படி வழங்குவது என்று மட்டுமே நீங்கள் பார்க்க வேண்டும். இதில் எந்த விதமான மலர்கள் மலர வேண்டும், காய்கள் வளர வேண்டும் என்பதை நீங்கள் நிர்ணயிக்கக் கூடாது. இயற்கை அதனை நிர்ணயிக்கும். உங்களுடைய வேலை உயிர்த்தன்மையோடு உள்ள இந்தச் செடியை எப்படி வளரச் செய்வது, மலரச் செய்வது என்பது தான். இந்தச் செடியில் ரோஜாப்பூ வரவேண்டுமா அல்லது தேங்காயா அல்லது மல்லிகையா என்பதை நீங்கள் நிர்ணயிக்கக் கூடாது.



உலகில் எல்லாமே ஒரே விதமாக, உலகிலுள்ள மனிதர்கள் எல்லோருமே ஒரே விதமாக இருந்தால் நாம் இங்கே வாழ முடியுமா? ஒவ்வொரு உயிரும் தனித்தன்மையான உயிர். படைத்தவர் ஒவ்வொன்றையும் தனித்தன்மையாக உருவாக்கியிருக்கும் போது நீங்கள் இதை மற்றவற்றுடன், மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து உங்களைத் தாழ்வாக எண்ணிக்கொள்ள வேண்டியதில்லை.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# நாட்டார் பாடல்களும் அவற்றின் இலக்கிய இரசனைகளும் 01

முதலில் நாட்டார் என்பவர்கள். யாவர்? என்ற கேள்விக்கு, விடை கண்ட பின்பு நாட்டார்பாடல்களையும் அவற்றின் இலக்கிய, இரசனைகளையும் இரசித்து இன்புறுவோம். இயற்கையின் எழில் ஓவியங்களாகும் இக்கிராமங்களுக்கே உரிய மரபு- பாரம்பரியம் பண்பாட்டு, கலாசாரம், பழக்க வழக்கங்கள், இறை வழிபாட்டு முறைகள், தொழில் முறைகளுக்கு ஏற்ப வாழுகின்ற சமூகக் குழுக்கள் எனக் கூறலாம். இவர்களுக்கே உரித்தான கலை இலக்கியப் பண்பாடுகளை உள்ளடக்கிய ஆய்வுத் துறையே நாட்டாரியல்(Folk lore) அல்லது அல்லது நாட்டுப்புறவியல் எனப்படும். நாட்டுப்புறவியல் என்ற சொல்லை 1846 ஆம் ஆண்டு வில்லியம் தோமஸ் என்பவரே முதல் முதலில் ஆங்கிலத்தில் ஃபோக்லோர் (Folk lore) எனப் பயன்படுத்தினார். இதனைத் தொடர்ந்தே ஆய்வாளர்கள் இச்சொல்லைப் பயன்படுத்தினர் எனலாம். இந்த நாட்டார் இலக்கியம் ஆனது. நாட்டார்கதைகள், பழமொழிகள், நாட்டார் பாடல்கள், நாட்டுக்கூத்து போன்றவற்றை உள்வாங்கியுள்ளது.

ஏட்டுக்கல்வி பெரும்பாலும் இல்லாத நாட்டுப்புற மக்களால் மரபு வழியாக்ப் பாடப்பட்டு வரும் பாடல்கள்தான் நாட்டர் பாடல்கள் எனலாம். இவற்றை வாய்மொழி இலக்கியம், கிராமியப்பாடல்கள் எழுதாக் கதைகள், பாமரர் பாடல்கள் என்றெல்லாம் அழைப்பார்கள். பாமர மக்களாற் பாடப்பட்ட போது இனிமையான இசை நயமும், கவி நயமும் எதுகை மோனையும் உவமை, உவமேயங்களும் தத்துவங்களும் மொத்தத்தில் நவரசங்களும் கரை புரண்டோடுவதால் அன்றோ இவை இலக்கியம் என்ற இலட்சினை குத்தப்பட்டுள்ளது. இப்பாடல்களை இயற்றியோரை இனங்காண முடியாது. இது ஒரு வாய்மொழி இலக்கியமாகும். நாட்டுப்புற இலக்கியம் முறைசாரா கல்வியின் முதற்படி என்றால் அது மிகையாகாது. இலக்கியங்களில் முன்னோடி இலக்கியம் நாட்டாரியலாகும். உலக இலக்கியங்களிலே ஒப்பற்ற பெரும் காப்பியங்களாகப் பேசப்படும் இலியட், ஒடிசி, இராமாயணம், மகாபாரதம் போன்ற இலக்கியங்கள் எல்லாம் ஒரு காலத்தில் நாட்டு மக்களிடையே புகழ் பெற்று விளங்கிய கதைப்பாடல்களில் இருந்தே உருவாக்கப்பட்டவை என்பதை இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். ஏட்டிலக்கியப் பாடல்கள் நாட்டுப்பாடல்களிலிருந்தே தோன்றியதாகக் கூறப்படுகின்றது. நாட்டார் பாடல்கள், தாலாட்டு, குழந்தைப் பாடல், நகைச்சுவைப் பாடல்கள், நையாண்டிபாடல்கள், தொழிற்பாடல்கள், காதல்பாடல்கள் தூதுவிடு பாடல்கள், பிரார்த்தனைப் பாடல்கள், சத்தியப்பாடல்கள், தத்துவப் பாடல்கள், பொல்லடிப் பாடல்கள் வழிநடைச் சிந்து என்று பரந்துபட்டுக் காணப்படுகின்றது. இவ்வாறு மலர்ந்துள்ள நாட்டார் பாடல்களின் சாயல்கள் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், திருவாசகம், கம்பராமாயணம், கந்த புராணம், சித்தர்களின் பாடல்கள், பாரதியார் பாடல்கள், பாரதிதாசன் பாடல்கள், வட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடல்கள் பாபநாசம் சிவம் பாடல்களிலும் கண்ண தாசன் பாடல்களிலும் காணப்படுவதாக ஆய்வாளர்கள் அதாரங்களையும் முன்வைத்துள்ளார்கள். நிதி மூலங்களையும் ரஷி மூலங்களையும் காணமுடியாது இருப்பதுபோல் இந்த நாட்டார் பாடல்களின் மூலங்களையும் காண முடியாதுள்ளது. பிறப்பில் ஆரம்பித்து, இறப்பு வரை இப்பாடல்கள் காணப்பட்டுள்ளது கண்கூடு. மருத்துவிச்சி பாடலின் சில வரிகள்:

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

அயலும் புடையும் வாழவேண்டும்
அன்னமும் சுற்றமும் வாழ வேண்டும்
ஆச்சியும் அப்பாவும் வாழ வேண்டும்
அம்மானும் மாமியும் வாழ வேண்டும்

இவ்வாறு மண்ணில் குழந்தை ஜனனமானதும் மருத்துவிச்சி பாடுகிறார். அதற்கு அடுத்த கட்டமாக "தாய்மை முதல்முதலாக உலகிற்கு வழங்கிய இலக்கியப் பரிசு தாலாட்டு" என்று தமிழ் அண்ணல் கூறுகிறார்.

குழந்தை முதல் முதல் செவி குளிரக் கேட்கும் பாட்டே தாலட்டுத்தான். தாலாட்டுப் பாடலில் இலயித்து இன்புறுகிறது குழந்தை.

ஆராரோ...ஆராரோ...என் கண்ணே -
நீ
ஆராரோ...ஆராரோ...ஆரிரரோ

ஆராடித்தார் நீயழுக என் கண்ணே- நீ
அடித்தாரைச் சொல்லியழு...
அடித்தாரைச் சொல்லியழு
ஆண்பனையின் நொங்கே
அணில் கோதா மாம்பழமே
அண்ணன் அடித்த துண்டோ...?

இவ்வாறு நீளுகிற இப்பாடல் இவ்வாறு குழந்தைகளை இசையால் மயக்கி வருடி அணைக்கும் அற்புதப் பாடல்கள் உவமை நயம் ஒப்பனை அழகு பூவிழுந்தாலும் தன் பிஞ்சுக்குழந்தையில் பஞ்சு வீழந்தாலும் மேனிபுண்ணாகும் என்ற பாச உணர்விற் பாடப்பட்ட இப்பாடல்களில் பாசம், கருணை, பரிதவிப்பு போன்ற இரசங்கள் இலக்கியச் சுவையோடு இழை யோடுவதைக் காணலாம்.

**வயலற் சரோஜா**

(தொடரும்)

## 2012ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முக்கிய செலவினங்கள் வருமாறு

பிரதமர் டி.எம்.ஜயரட்ணவால் நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்படி புதிதாக அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சிற்கே கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த அமைச்சிற்கு 2 இலட்சத்து 29 ஆயிரத்து 943 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

| | மீண்டுவரும் செலவினம் | மூலதனச் செலவினம் | மொத்தம் |
|---|---|---|---|
| ஜனாதிபதி | 2,850,100,000 | 33,111,600,000 | 6,161,700,000 |
| பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி | 215,427,000,000 | 14,516,000,000 | 229,943,000,000 |
| பொருளாதார அபிவிருத்தி | 18,547,440,000 | 86,023,890,000 | 104,571,330,300 |
| நிதி, திட்ட அமுலாக்கம் | 72,051,804,000 | 52,164,370,000 | 124,216,174,000 |
| பொது நிர்வாகம் | 111,623,815,000 | 2,000,000,000 | 113,623,89,000 |
| சுகாதாரம் | 54,999,998,000 | 19,000,000,000 | 73,999,698,000 |
| உயர்கல்வி | 15,716,000,000 | 8,754,000,000 | 24,470,000,000 |
| கல்வி | 27,250,000,000 | 6,016,010,000 | 33,266,010,000 |
| உள்ளூராட்சி | 95,059,139,000 | 34,714,000,000 | 129,773,139,000 |
| மீள்குடியேற்றம் | 272,555,000 | 209,050,000 | 481,605,000 |
| சிறைச்சாலை புனர்வாழ்வு | 3,769,000,000 | 553,000,000 | 4,322,000,000 |
| ஊடகத்துறை | 1,658,000,000 | 447,000,000 | 2,105,000,000 |
| துறைமுகங்கள் நெடுஞ்சாலை | 200,300,000 | 144,367,230,000 | 144,567,530,000 |

## தீபாவளி தினத்தன்று கொமர்ஷல் வங்கி திறந்திருக்கும்

(கொழும்பு)

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகை தினமான புதன்கிழமை கொமர்ஷல் வங்கி தனது 57 சேவை நிலையங்களை திறந்து வைக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்துக்களின் பண்டிகை தினமான இது ஒரு அரச, வங்கி, பொது விடுமுறை தினமாகும்.

வெள்ளவத்தை, கொள்ளுப்பிட்டி, கொட்டாஞ்சேனை, மகரகம, பொரளை, நுகேகொடை, நாரஹேன்பிட்டி, பத்தரமுல்ல, பஞ்சிகாவத்தை, யூனியன் பிளேஸ், வத்தளை, தெகிவளை, மொரட்டுவ, நிட்டம்புவ, கிரிபத்கொடை, அவிசாவளை, பிலியந்தல, கொழும்பு-1 இல் உள்ள வெளிநாட்டு வங்கி சேவை நிலையம், பிரதான வீதி , கொழும்பு 7, அம்பாறை, காலி நகரம், கண்டி நகர மத்தி, யாழ்ப்பாணம், நீர்கொழும்பு, மஜிஸ்ரிக் சிற்றி, கட்டுப்பெத்தை விடுமுறை வங்கி நிலையம், குருநாகல் ஆகிய கிளைகள் திறக்கப்பட்டிருக்கும்.

அத்துடன் 29 சுப்பர் மார்க்கட் வங்கிச் சேவை நிலையங்கள் என்பவற்றில் தீபாவளி தினத்தன்று சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 109.42 | 111.05 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 172.35 | 176.33 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 149.91 | 154.00 |
| சுவிஸ் பிராங் | 122.25 | 126.23 |
| கனேடிய டொலர் | 107.01 | 110.22 |
| அவுஸ்திரேலிய டொலர் | 111.03 | 114.69 |
| சிங்கப்பூர் டொலர் | 85.08 | 87.52 |
| ஜப்பான் யென் | 1.41 | 1.45 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.21 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.00 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி




இந்தியாவின் மூன்றாவது பெரிய தனியார் துறை வங்கியான ஆக்சிஸ் வங்கி நேற்றுமுன்தினம் இலங்கையில் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், இந்திய தூதுவர் அசோக் கே காந்தா மற்றும் ஆக்சிஸ் வங்கியின் தலைவர் ஆதர்ஷ் கிஷோர் மற்றும் வங்கியின் உயர் அதிகாரிகளையும் படத்தில் காணலாம்.

ஆக்சிஸ் வங்கி சிங்கப்பூர், ஹொங்காங், ஷாங்காய் மற்றும் டுபாய் போன்ற இடங்களில் தனது இருப்பைக் தற்போது கொண்டுள்ளது. அத்துடன் மேலும் சர்வதேச ரீதியாக தன்னை விஸ்தரிக்கும் நடவடிக்கையிலும் கவனம் செலுத்தியுள்ளதென வங்கியின் தலைவர் குறிப்பிட்டார்.

மும்பையில் தலைமையகத்தைக் கொண்டுள்ள ஆக்சிஸ் வங்கி இந்தியா முழுவதும் 1250 க்கும் மேற்பட்ட கிளைகளையும் 6250 இற்கும் மேற்பட்ட ஏரிஎம்களையும் கொண்டிருக்கிறது.

## சணச வங்கியின் புதிய சேமிப்பு க/கு

சணச அபிவிருத்தி வங்கியானது ஆயோஜனா எனும் புதிய சேமிப்புத் திட்டம் ஒன்றினை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இது தொடர்பான நிகழ்வு வங்கியின் தலைவர் கலாநிதி பி.ஏ.கிரிவந்தெனிய தலைமையில் இடம்பெற்றது.

வங்கியின் உயரதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். இத்திட்டத்தின் கீழ் வாடிக்கையாளர் ஒருவர் மொத்தமாக சேமிப்பதற்கு எதிர்பார்க்கும் தொகையினை மாதாந்த அடிப்படையில் வைப்புச் செய்யும் வசதி காணப்படுகின்றது. ஒருவருடம் முதல் 5 வருட கால எல்லைகளைக் கொண்ட சேமிப்புத் திட்டங்களை இதற்கெனத் தெரிவு செய்ய முடியும்.




## 'இம்பல்ஸ்' என்ற பெயரில் முதல் 'ஹீரோ' பைக் அறிமுகம்

ஹீரோ மோட்டோகார்ப் தனி நிறுவனமாக உருவான பிறகு தயாரிக்கபட்டுள்ள முதல் ஹீரோ பிராண்ட் பைக் விலை இந்திய மதிப்பில் ரூ.66ஆயிரத்து 800 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

Hero MotoCorp




ஹீரோ ஹோண்டாவில் இருந்து ஹோண்டா நிறுவனம் தனியாகப் பிரிந்தது. அதன்பிறகு ஹீரோ மோட்டோ கார்ப் என்று பெயரிடப்பட்டது.

அது ஹீரோ பிராண்டில் தனது முதலாவது 150சிசி பைக்கை தயாரித்துள்ளது. அதன் விற்பனை விரைவில் தொடங் கவுள்ளது.

இப்போது நடந்துவரும் இந்தியா-இங்கிலாந்து கிரிக்கெட் தொடரை விளம்பரத்திற்கு முக்கிய களமாக ஹீரோ மோட்டோகார்ப் பயன்படுத்திவருகிறது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6549.91 | 6356.94 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 5878.33 | 5674.86 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 4,407.57 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** இன்பிறாசக்சர்(36.50),எஸ்.எம்.பி.லீசிங(0.80), சிஜ.ரி(318.90),செலிங்கோ இன்சுரன்ஸ்(357.90),பிப்ள்ஸ் பைன்(21.50),

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** செரன்டீப்( லான்ட்(1500.00), கல்மசு (2000.00), மிரமா்(202.10),எஸ .எம்பி லீசிங்(0.30),ச க லங்கா(163.80).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## ஜி-20 நாடுகளின் கான்னஸ் உச்சி மாநாடு: ஆசியா-பசுபிக் நாடுகளின் பார்வை

ஆசியா மற்றும் பசுபிக்கிற்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார சமூக ஆணைக்குழுவின் இலங்கை உட்பட 28 உறுப்புநாடுகளின் பிரதிநிதிகள் நவம்பர் 3 மற்றும் 4-ம் திகதிகளில் பிரான்சின் கான்னஸில் நடைபெறவுள்ள ஜி20 நாடுகளின் உச்சி மாநாட்டின் நிகழ்ச்சிநிரல் தொடர்பாக ஆசிய -பசுபிக் நாடுகளின் பார்வை பற்றி கலந்துரையாடுவதற்காக ஒக்டோபர் 11 மற்றும் 12-ம் திகதிகளில் கூடினர்.

இலங்கைக் குழுவிற்கு தலைமை வகித்த இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இவ் உயர்மட்ட ஆலோசனைக் குழுவில், ஆசிய பசுபிக் நாடுகளுக்கான ஐக்கிய நாடுகளின் பொருள்தார சமூக ஆணைக்குழுவின் நிறைவேற்று செயலாளர் திருமதி நொயலின் கெய்ஷர் தலைமையிலான கூட்டத்தில் முக்கிய உரையாற்றினார்.

உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியில் வலுவான வளர்ச்சியும், அபிவிருத்தியும் என்ற விடயம் பற்றிய முதலாவது ஆலோசனைக் கூட்டத்திற்கு ஆளுநர் கப்ரால் தலைவராக பணியாற்றினார்.

உயர்மட்ட ஆலோசனைகளின் முடிவில் தலைவரினால் பெறப்பட்ட தொகுப்புகளின் பொழிப்பு, ஜி20 நாடுகளினால் பரிசீலனையில் கொள்ளப்பட வேண்டிய பின்வரும் நடவடிக்கைகத் திட்டங்களை முன்மொழிந்திருக்கிறது.

அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை எங்கும் ஊக்குவித்த வலுப்படுத்துவதற்கு காணப்படும் யூரோ-வல்ய படுகடன் நெருக்கடிக்கு பரந்தளவிலானதும் நீடித்ததுமான தீர்வினை காண்பதற்கு உயர்ந்தளவு முன்னுரிமையை வழங்கல்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் வேளாண்மை உற்பத்திகளை அதிகரிக்கும் விதத்தில் வடக்கு, தெற்கு, தெற்கு -தெற்கு மற்றும் முக்கோண ஒத்துழைப்பு என்பவற்றின் ஊடாக அறிவினையும் தொழில்நுட்பத்தினையும் மாற்றல் செய்தல்.

வேளாண்மை உற்பத்திகளின் விலை வீச்சுக்களையும் குறுங்கால விலைத் தளம்பல்களையும் குறைப்பதற்காக பண்டங்களின் எதிர்காலம் மற்றும் பெறுமதிகளின் சந்தைகளை சிறந்தமுறையில் ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்யும் விதத்தில் பொருத்தமான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல்,

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு நிதி உதவிகளை வழங்குவதற்கு புத்தம் புதிய நிதியிடல் பொறிமுறைகளை பயன்படுத்தும் விதத்தில் ஜி20 நாடுகளின் சியோல் உச்சி மாநாடு மற்றும் ஜி நாடுகளின் எடுத்துரைப்புக்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தற்போது உள்ள பல்படை மற்றும் இருபுடை அபிவிருத்தி முயற்சிகளை நடைமுறைப்படுத்தல்

அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்களின் வளர்ச்சியை பிரதிபலிக்கின்ற விதத்தில் பன்னாட்டு நிதியம் மற்றும் உலக வங்கிகளின் ஆளுகையில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கும் ஜனநாயக ரீதியில் கூடியளவு பிரதிநிதித்துவத்தினை வழங்கல் போன்ற யோசனைகள் முன்மொழியப்பட்டன.

இதேவேளை பிரதிநித்துவம் செய்யும் நாடுகளின் நோக்கில் ஆசியா மற்றும் பசுபிக்கிற்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார, சமூக ஆணைக்குழு நாடுகள் பின் வரும் வழிமுறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்ற துறைகளில் அவற்றின் உள்நாட்டு செலவிடலை அதிகரிப்பதன் மூலம் முக்கியமான அபிவிருத்தித் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தொடர்ந்தும் முயற்சித்தல் வேண்டும்.

பிராந்தியத்தில் பொருத்தமான பிராந்திய ரீதியிலான நிதியியல் கட்டமைப்பு ஒன்றினை அபிவிருத்தி செய்வதன் ஊடாக பிராந்தியத்திற்குள்ளே அவர்களது பாரிய வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகளில் ஒரு பங்கினை முதலீடு செய்ய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# விரிவான அபிவிருத்தி வேலைத்திட்டம் அடுத்த வரவு- செலவு திட்டத்தில் அமுல்

## ஜனாதிபதி தெரிவிப்பு

மிகவும் விரிவான அபிவிருத்தி வேலைத்திட்டமொன்றை அடுத்த வரவு- செலவுத் திட்டத்தில் நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பல்வேறு தடைகள் ஏற்பட்ட போதிலும் கடந்த 2010 ஆம் மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை 8 வீதத்தில்நிலையானமட்டத்தில்பேணமுடிந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்திற்காக தனிப்பட்ட கருத்துக்கள் மற்றும் யோசனைகளை பெற்றுக் கொள்ளும் வகையில் அலரிமாளிகையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

2010 மற்றும் 2011 ஆண்டுக்கான பணவீக்கம் 11 வீதத்திலிருந்து 5.7 வீதமாக குறைக்க முடிந்தமையானது இலங்கை அரசாங்கத்திற்கு கிடைத்த வெற்றி எனவும் ஜனாதிபதி மஹிந்த கூறியுள்ளார்.

மீனவத் துறையின் முன்னேற்றத்திற்காக தற்போது கைவிடப்பட்டுள்ள இறால் வளர்ப்பு நிலங்கள், வேறு பயிர்கள், மீன் வளர்ப்பிற்காக விசேட வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பான நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்க்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

பாடசாலை வசதிகள், விளையாட்டு நடவடிக்கைகள் மற்றும் ஆசிரியர் குறைபாடு ஆகியன தொடர்பாக இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் தொல்பொருள் இடங்களைப் பாதுகாப்பது தொடர்பான திட்டமொன்றை உருவாக்குவது பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (4-2)

# இலங்கைக்கு ஒத்துழைக்காவிட்டால் உடன்படிக்கை இரத்து செய்யப்படும்

## சீனாவை எச்சரிக்கிறார் பஷில்

(கொழும்பு)

இலங்கை அரசின் நிபந்தனைகளுக்கு இணங்காது போனால் கொழும்பில் சுற்றுலா விடுதி, வணிக மற்றும் பொழுதுபோக்கு வளாகம் ஆகியவற்றை அமைப்பதற்காக சீன அரச நிறுவனத்துடன் செய்து கொண்ட 500 மில்லியன் டொலர் உடன்பாட்டை கைவிட நேரிடும் என்று இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

இவற்றை அமைப்பதற்காக நிலத்தை விற்பதா நீண்டகால அடிப்படையில் குத்தகைக்கு விடுவதா என்று இலங்கை அரசுக்குள் கருத்து வேறுபாடுகள் தோன்றியிருப்பதால் இந்தப் பாரிய முதலீட்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

500 மில்லியன் டொலர் பெறுமதியான இந்த உடன்பாட்டைச் செய்து கொண்ட சீனாவின் தேசிய வான் பொறியியல் இறக்குமதி, ஏற்றுமதி கூட்டுத்தாபனம் இலங்கை அரசின் நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டும் என்றும் அவ்வாறு இணங்காது போனால் உடன்பாட்டை கைவிட நேரிடும் என்றும் பசில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

காலி முகத்திடலில் உள்ள நிலத்தை சீன அரச நிறுவனத்துக்கு விற்பனை செய்ய கடந்த ஜனவரி மாதம் இலங்கை அமைச்சரவை அனுமதி வழங்கியது.

ஆனால், கடந்த ஜூலை மாதம் நிலத்தை விற்பதற்குப் பதிலாக குத்தகைக்கு வழங்கும் வகையில் உடன்பாட்டை மீளாய்வு செய்யுமாறு ஜனாதிபதி கூறியதாக தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையிலேயே இலங்கை அரசின் நிபந்தனைக்கு இணங்காது போனால் சீன நிறுவனத்தின் உடன்பாட்டை கைவிடும் நிலை ஏற்படும் என்று பசில் ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

இராணுவ மைதான மற்றும் அதனை அண்டிய இந்த நிலத்தின் ஒரு பகுதியில் ஏற்கனவே சங்கிரிலா நிறுவனமும் ஆடம்பர விடுதி ஒன்றை அமைத்து வருகின்றது. (4-2)

# வலிகாமம் வடக்குப் பகுதியை உரியவர்களிடம் வழங்காதது ஏன்

## கேள்வி எழுப்புகிறார் ரணில்

1983 ஆம் ஆண்டு யாழ் வலி. காமம் வடக்கு பகுதி அதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட போது அவை உரிமையாளர்களுக்கு மீள வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

யுத்தம் நிறைவுற்ற போதிலும் உறுதி மொழி நிறைவேற்றப்படாதது ஏன்? என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க சபையில் கேள்வி எழுப்பினார்.

எனவே வடக்கு- கிழக்கில் காணிப்பதிவுகளை மேற்கொள்ளும் போது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களது ஒத்துழைப்பையும் அரசு பெறவேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படும் அத்துமீறிய இனப்பரம்பலைக் குறைக்கும் குடியேற்றங்கள் காணி பதிவு நடவடிக்கை உள்ளிட்ட தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா. சம்பந்தன் கொண்டு வந்த ஒத்திவைப்பு நேரப் பிரேரணை மீது உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். (4-2)

# 2011.10 23 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ கி.மு 4004-அங்கிலிக்கப் பேராயர் ஜேம்ஸ் உச்சரின் கணிப்பின்படி அகிலம் படைக்கப்பட்டது.

★ கி.மு 42-மார்க் அந்தோனி ஆகுஸ்டஸ் ரோமப் பேரரசன் புரூட்டசின் இராணுவத்தை தோற்கடித்தனர். இறுதியில் புரூட்டஸ் தற்கொலை செய்து கொண்டான்.

★ 425-மூன்றாம் வலன்டீனியன் ஆறாவது அகவையில் ரோமப் பேரரசன் ஆனான்.

★ 1707-பெரிய பிரித்தானியாவின் முதல் நாடாளுமன்றம் கூடியது.

★ 1739-பிரித்தானியப் பிரதமர் ரொபேர்ட் வால்போல் ஸ்பெயின் மீது போரை அறிவித்தார்.

★ 1870-பிரான்சின் மெட்ஸ் என்ற இடத்தில் இடம்பெற்ற இறுதிப் போரில் ரஷ்யா வெற்றியடைந்தது.

★ 1906-அல்பேர்ட்டோ சாண்டோஸ்-டுமொண்ட் பாரிஸ் நகரில் ஐரோப்பாவின் முதலாவது காற்றை விடப் பாரமான வானூர்தியைப் பறக்க விட்டார்.

★ 1911-முதற்தடவையாக வானூர்தி ஒன்று போரில் பாவிக்கப்பட்டது. இத்தாலிய வானோடி லிபியாவில் இருந்து புறப்பட்டு துருக்கிய இராணுவ நிலைகளை அவதானித்தான்.

★ 1912-முதலாம் பால்க்கன் போர்: சேர்பியாவுக்கும் ஒட்டோமான் பேரரசுக்கும் இடையில் போர் ஆரம்பமானது.

★ 1915-நியூயோர்க் நகரில் 25 ஆயிரம் முதல் 33 ஆயிரம் பெண்கள் வாக்குரிமை கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

★ 1917-லெனின் ஒக்டோபர் புரட்சிக்கு அழைப்பு விடுத்தார்.

★ 1941-உக்ரேனின் ஒடேசா நகரில் 19 ஆயிரம் யூதர்கள் ருமேனிய இராணுவ அதிகாரி நிக்கலாய் டெலியானு தலைமையில் ருமேனியா மற்றும் ஜேர்மன் படையினரால் உயிருடன் எரிக்கப்பட்டனர். அடுத்த நாள் மேலும் 10 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 1946-ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் முதலாவது கூட்டத் தொடர் நியூயோர்க் நகரில் ஆரம்பமாகியது.

★ 1956-ஹங்கேரியப் புரட்சி 1956 ஹங்கேரியில் பல்லாயிரக்கணக்கானோர் அரசுக்கு எதிராகவும் சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் போராட்டம் நடத்தினர். ஹங்கேரியப் புரட்சி நவம்பர் 4 இல் நசுக்கப்பட்டது.

★ 1958-நோவா ஸ்கோசியாவில் சுரங்கம் ஒன்றில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 174 நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் சிக்கினர். இவர்களில் 100 பேர் மட்டும் நவம்பர் 1 வரையில் மீட்கப்பட்டனர்.

★ 1973-சிரியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் இடம்பெற்ற யோம் கிப்பூர் போர் ஐ.நா.வின் தலையீட்டை அடுத்து முடிவுக்கு வந்தது.

★ 1989-கம்யூனிச ஹங்கேரியன் மக்கள் குடியரசு ஹங்கேரியன் குடியரசு எனப் பெயர் மாற்றப்பட்டது.

★ 1998-இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெட்டனியாகு மற்றும் பாலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்துக்கும் இடையில் அமைதிக்காக நிலம் என்ற உடன்பாடு எட்டப்பட்டது.

★ 2001-வட அயர்லாந்தில் இடம்பெற்ற அமைதிப் பேச்சுக்களின் பின்னர் ஐரிஷ் குடியரசு இராணுவம் ஆயுதக் களைவில் ஈடுபட்டது.

★ 2001-அப்பிள் நிறுவனத்தின் ஐப்பொட் வெளியிடப்பட்டது.

★ 2004-பிரேசில் VSB-30 என்ற தனது முதலாவது விண்கப்பலை விண்ணுக்கு ஏவியது.

★ 2006-இலங்கை சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

### பிறப்புக்கள்

★ 1920-ஃவுஜித்தா, ஜப்பானிய வானிலை அறிஞர் (இ.1998)

★ 1948-எம்.எச்.எம்.அஷ்ரப், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தாபகர் (இ.2000)

★ 1974-அரவிந்த் அடிகா, இந்தியப் புதின எழுத்தாளர்

### இறப்புக்கள்

★ கி.மு42-மார்க்கஸ் புரூட்டஸ், ரோமப் பேரரசின் படைத் தலைவன் (பி.கி.மு.85)

★ 1986-எட்வேர்ட் அடெல்பேர்ட் டொய்சி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்(பி.1893)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### நட்பு

பல கலையும் கற்று
பாரினில் உயர்வதற்காய்
அலைந்து திரிந்தோம்
இறுதியாய் கிடைத்தது
நமக்கு ஓர் நல் இடம்
தென்னங்கீற்றின் இதமான
சலசலப்பின் நடுவே
சின்னதாய் ஒரு வகுப்பறை
அதன் நடுவிலோர் வட்டமேசை
இதனைச் சுற்றியிருந்தே பரிமாறினோம்
கடந்தகாலம் நமக்குத்தந்த
ரணமரன வேதனைகளை
இன்பம் துன்பம் என இரண்டையும்
இடமாற்றம் செய்தோம்
நம் நட்பின்மீது பொறாமை கொண்ட காலமோ
நம் நட்பைக் குலைப்பதற்காய் சதிசெய்தது
உயர்தர பரீட்சை எழுதுவதற்காய்
அனைவரும் திசைமாறி
சிதறிச் சென்றுவிட்டோம்
அழகாய் இருந்த நம்நட்புக்கூடு
சுக்குநூறாய் குலைந்துவிட்டது
திசை தெரியாத பறவைகளாய் நாம்
என்றோ ஓர் நாள் ஒன்றாவோம்
எனும் உறுதியான நம்பிக்கையுடன்

நா.துஷி
வள்ளிபுனம்.

### என்னருகில்

தூக்கம் என்னைவிட்டு
தூர விலகிச் செல்கிறது
உன் பசுமையான நினைவுகள்
எப்போதும் என்னருகில்
விழித்துக் கொண்டிருப்பதனால்

கு.நித்தியா,மடத்தடி.

### வீதியில் விதி முடிந்தது

கடலோடு வானம்
உறவாடும் நேரம்
காற்றோடு மலர்கள்
இசைபாடும் நேரம்
கனவோடு நானும்
உலா வரும்நேரம்
பூவோடு வந்தாய்
புதுவாழ்வு தந்தாய்
மனநிறைவோடு நாமும்
வாழ்ந்திருந்த வேளை
விதி செய்த கொடுமை
வீதி விபத்தில்
விபரீதம் ஆனதுவோ?

செல்வமலர்
சிறுவர் இல்லம், திருநெல்வேலி

### தோல்வி

தோற்றுக் கொண்டிருக்கின்றேன்
ஒவ்வொரு நொடிகளிலும்- நீ
மறந்துவிடச்சொன்ன
உன்னை மறக்கமுடியாமல்...

பா.பொன்நிலவன்,மீசாலை.

### அவரவர் பார்வையில்

சந்தேகம்
மனிதனைப் படைக்கும் போது
இறைவன் கொடுத்த
குறைகளில் இதுவும் ஒன்று
மலர்
ஒரு நாளில் பூத்து உதிர்ந்தாலும்
வஞ்சனையற்ற - அழகு உள்ளம்
காதல்
ஒரு ஜீவன் மீது
இன்னொரு ஜீவன்
கொள்ளும் நிஜமான அன்பு
உதடு
எப்போதுமே உண்மையை
பிரதிபலிக்கும் பிம்பம்

கி.சுபாஜினி
குமரன்புலம், மூளாய்

பெயர்
இத்தமிழ்ப் பூமியில்
உனக்கான ஓர் அறிமுகம்
தந்தை
எம்மைக் காக்கும்
நடமாடும் தெய்வம்
பேனா
மனம் என்னும் திரையில்
உதித்ததை-காகிதம்
என்னும் கல்லறையில்
பொறிப்பது

பொ.இளவரசி
பருத்தித்துறை.

### கலியும் கல்கியும்

கந்தபுராணக் கலாசாரம்
கட்டுக்கோப்பாய் பேணிய- நம்
பார் போற்றும் பண்பாட்டுச் சமுதாயம்
பார்வையற்று பாதையிழந்து அலைவதேனோ?
சீர்மிகு இளஞ்சந்ததி
சினிமாக் கலாசாரத்தின் வரவால்
சீரழிந்து சிந்தனைகளை
சிதறடித்து சீர் கெட்டதேனோ?
குப்பைத் தொட்டியிலே பெற்ற
குழந்தையை பாசமின்றி வீசுவதும்
நாகரிகம் எனும் பெயரில் கடற்புலத்திலும்
நவீனமாய் ஆலயச் சூழலிலும் களியாட்டங்கள்
சிந்தனை மாற்றங்களும் சீரழிவுகளும்
நிந்தனை செய்யும் கலியின் கொடுமையா?
ஈரேழு அண்டங்களிலும்-ஓர்
கல்கி அவதார்ம் அவசியம் தேவையடா...?

வா.ஜெயப்பிரசன்னா
யா/ஹாட்லிக் கல்லூரி

### மீண்டும் ஒரு தடவை

உடைந்து விட்ட என் இதயத்தை
உரசிவிட்டு சென்றது
உன் புன்னகை
புதைந்துவிட்ட என் கனவுகளை
புலரவைத்தது உன்
ஓரப்பார்வை
சிதைந்துவிட்ட என் நினைவை
சிறைவைத்தது உன் நினைவுகள்
மரணித்த என் நிமிடங்கள்
மரணிக்க மறுக்கின்றது
மீண்டும் ஒரு தடவை
வாழ்ந்துபார் என்று...!

என்.ஜலா, கரவெட்டி

### இமயம் தொட...

உன்தேசத்தை அடையாளப்படுத்தும்
அடையாளச் சின்னங்களை
அழிய விடாதே
உனக்கு உன் தந்தையின்
முதல் எழுத்து எவ்வளவு முக்கியமோ
அவ்வளவு முக்கியமே
நம் தேசத்திற்கும்
அதன் அடையாளச் சின்னங்கள்
புதுமை பெறுவதற்கு
பழமை வழிசெய்யும்

மாவை நா.கஜேந்திரன்

### நட்பின் பிரிவு

வாலிபத்தின் வசந்தகாலத்தில்
வந்து போனாய் என் நட்பு
வாய்விட்டுப் புன்னகைக்க உன்
நேசப்பார்வையும் நேரிய சிந்தனைகளும்
எந்தன் இதயத்தில் நட்புப்பூக்கள்
மலர வைத்தது
இந்த நிமிடம் இப்படியே நீளாதா
என நினைத்திருந்த போது
பிரிவோம் சந்திப்போம் என்று
கண்கள் பனிக்க நின்றாய் கடைசி நேரம்
கையசைத்து புன்னகைத்து
கனவாகிப்போனாய்
என்றாவது உன் நினைவலைகள்
என்னை மீட்டபோது நான்
உயிரோடு இருந்தால் என்
மனக்கதவுகள் திறந்தேயிருக்கும்
உன் நட்புக்காய்

பா.கங்கா
வண்ணார்பண்ணை.



## மௌனத்தின் தேடல் - 93

### வறுமைக்கோடு

பாசமும் நேசமும் நேர்மையுடன்
புன்னகை தவழும் வதனங்கள்
வாகனமீதே யேனமர்ந்தீர்
வறுமைக்கோட்டின் காரணமோ

சு.தமிழ்மாறன்

### கவனம்

வீரமிக்க சிறுவனே
வீதிக்கு வந்தால் வில்லங்கம்
காக்கிச் சட்டை கவனம்

அ.புவனா
வடவரணி

### முயற்சி

போராட்ட பூமியில்
தந்தையை இழந்ததால்
விளையாடப்போகாது
உழைக்கவா முயற்சி
சிரித்திருக்கும் பூக்கள்
பொறுத்திருங்கள்
வளரும் வரை

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### விடுதலை

அகதி முகாம்களில்
தஞ்சமடைந்து...
குடும்பங்கள்..., சிறுவர்கள்...
விடுதலையாகிப் போகும்
இந்த நேரத்தில்-இவர்களின்
வீடுகள்..., பாடசாலைகள்...
நிலையாக இருக்குமா?
கடந்த காலத்தின்
வசந்தம் வீசுமா?

அ.கிருசாந்தினி, கொம்மாந்தறை.

### ஏதுனக்கு?

பள்ளி செல்லவேண்டிய
பட்டாம் பூச்சியே-நீ
பண்த்திற்காய்
பாதையோரத்தில்
பாடுபடக் கற்றுத்தந்தது
பாசம் என்னும் நேசமோ?

சூ.யூட்டினேஸ்
யாழ். பல்கலைக்கழகம்

### பாடம்

வறுமை நிலை புரிந்தபோது
வண்டியோட
கற்றுக் கொண்டோம்

மருதங்கேணியூர்
வே.வே.அகிலேஸ்வரன்

### பயணம்

மெல்ல மெல்ல திரியும் வாகனத்தில்
துள்ளித் துள்ளித் திரியும் சிறுவர்கள்
போட்டி நிறைந்த உலகை
காணச் செல்கிறார்களோ

யோ.யாழவன்
யா.நெல்லியடி.ம.ம.வி

### யாரிவர்கள்?

பற்கள் தெரிய சிரிக்குமிவர்கள்
புற்களற்ற கற்களுள்ள வீதியில்
நிற்கும் குழந்தைத் தொழிலாளிகளா?
அன்றில், தாமிழந்த கல்வியை
தேடியலையும் நாளைய
விடிவெள்ளிகளா?

வி.கே.அமுதபூரீ, இமையாணன்

### மகிழ்ச்சி

கொண்டுவந்தார் புதிய ட்றாக்ரர்
கொண்டாட்டம் எங்களுக்கு
கண்டு மகிழ வாருங்கோ
நீண்ட பயணமும் போய்வருவோம்

மானந்தன்
அல்வை

### சிந்தியுங்கள்

பாடசாலை சென்று
படிப்பில் நாட்டமின்றி
கட்டுப்பாடுமின்றி
கண்டவருடன் கூடி
கெட்டுப்போகும் இளைய
சமுதாயமே சிந்தியுங்கள்

ஆராதனா, மட்டுவில்

### தற்காலிகம்

சிறுவர்களே
மனித வாழ்வில்
சோகங்களும்- இந்த
இடம்பெயர்வுகளும்
என்றுமே நிரந்தரமில்லை

சு.ஜெயரூபன்.
பருத்தித்துறை

### கல்விச் செல்வம்

தேடமுடியாத செல்வம்
கல்விச் செல்வம்-அதை
உரிய பருவத்தில் பெற்றால்
உயர்வினை தந்து காக்கும்
காலம் கடந்து போனால்
அதை மீளப்பெறமுடியாது

துரை,
தென்மட்டுவில்

### சுமைகள்

துள்ளித் திரியும்
பள்ளிப் பருவமிதில்
உழைக்க முயலுகின்றோம்- நம்
வீட்டின் உலை
கொதிப்பதற்காய்

வ.வாமணன்
பருத்தித்துறை

### ஏங்கும் மனம்

கள்ளம் கபடம் இன்றி
மகிழ்ச்சியாய் வாழும் வயது
துன்பம் என்னவென்று புரியாது
துள்ளித்திரியும் வயது–நீ
வளர்ந்து எந்நிலையில் இருந்தாலும்
மனம் இந்த மகிழ்ச்சிக்காகவே ஏங்கும்

நெய்தல், தேன்மொழி.

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் - 94

அன்பு வாசகர்களே !



உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 28.10.2011 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# இருப்பாய் தமிழா நெருப்பாய்!

13

தமிழருவி மணியனின் அதிரடித் தொடர்






## மேல்துண்டை இலவசமாக பெறுவதற்காக இடுப்பு வேட்டியையும் இழந்துள்ள தமிழன்

உழைப்பின்றி வரும் எதையும் திருட்டுக்குச் சமம் என்றது காந்தியம். உழைக்காமல் உண்பது பாவம் என்கிறது பகவத்கீதை.

தன் உடலில் இருந்து வழியும் வியர்வையின் விளைச்சலில் பசியாறுவதற்குப் பெயர்தான் சுய மரியாதை. இலவசங்கள் மூலம் ஏழ்மையைப் போக்க முயல்வது ஓட்டைப் பாத்திரத்தில் தண்ணீர் சேகரிப்பதற்கு ஒப்பானது.

நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் வேலைவாய்ப்பற்றவர்களுக்கு அரசு இலவசமாக வழங்குவதாக வைத்துக்கொள்வோம்.

ஒரு கோடி மக்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒரு ரூபாய் என்று ஓராண்டு முழுவதும் வழங்கினால் 365 கோடி ரூபாய் ஆகும். இந்த இலவசம் ஐந்து ஆண்டுகள் நீடித்தால் ஆயிரத்து 825 கோடி ரூபாய் அரசு மானியமாக ஒதுக்க நேரும். இதற்கு மாறாக, கிராமக் கைத்தொழில்களுக்கு ஆண்டுக்கு 500 கோடி ஒதுக்கீடு செய்தால் கிராமப் புறங்களில் உருப்படியான வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றார் காந்தியவாதி ஸ்ரீமன் நாராயண்.

விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரித்து, தொழில்துறையில் வேலை வாய்ப்பைப் பெருக்கி, மக்களின் வாங்கும் சக்தியை உயர்த்தினால் அரசிடம் யாரும் கையேந்தும் அவசியம் எழாது.

ஆட்சியாளர்களுக்கு சரியாகத் திட்டமிடும் திறன் இல்லாததனால்தான் இந்தியாவில் இன்னமும் வறுமை வாழ்கிறது.

விவசாய வளர்ச்சியும் பல்தொழில் பெருக்கமும் சிறக்காத சூழலில் ஏழ்மை எப்படி ஒழியும்? கார் தொழிற்சாலைகளும் கணனி சேவை மையங்களும் கிராமங்களின் வறுமையைக் களைந்துவிடுமா?

மத்திய அரசு மக்களின் வறுமையை நீக்க ஆண்டுக்கு 80 ஆயிரம் கோடி செலவழித்தும் பயனில்லை. மாநில அரசு இலவசத் திட்டங்களுக்கு மட்டும் இந்த நிதியாண்டில் 10 ஆயிரம் கோடிக்குமேல் ஒதுக்கியிருக்கிறது.

வறுமைப் பள்ளத்தில் எழ முடியாமல் விழுந்து கிடக்கும் அடித்தட்டு மக்களுக்கு ஆடுமாடுகள் வழங்கப்படுவதும், மாணவர்களுக்கு லப்டொப் தருவதும் பாராட்டுக்குரியவை.

வறுமைக் கோட்டின் கீழ் வாடும் வாழ்வாதாரமற்றவர்களுக்கு வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டுவது ஒரு சமூகப் பொறுப்பு மிக்க அரசின் முக்கியமான கடமை என்பதில் இரண்டு கருத்துக்களுக்கு இடமில்லை.

ஆனால், வாக்கு வங்கியை வளர்த்தெடுக்க அனைவருக்கும் இலவசம் என்ற வலையை விரிப்பது தான விபரீதமானது.

வங்கத்தில் ஆட்சியைக் கைப்பற்ற மம்தாபானர்ஜி இலவசங்களை அறிவிக்கவில்லை. பின்தங்கிய பீகாரில் பொருளாதார மாற்றத்திற்குப் புதிய பாதை வகுத்த நிதிஷ் குமார் இலவசத் திட்டங்களில் இறங்கவில்லை. குஜராத்தின் வளர்ச்சியை வேகப்படுத்திய மோடி இலவசங்களை நம்பவில்லை.

நேற்றுவரை மானவுணர்வோடு வாழ்ந்த நாம், இன்று எல்லாவற்றையும் அரசு இலவசமாக வழங்கினால் நல்லது என்ற எதிர்பார்ப்புடன் கையேந்தி நிற்கிறோம். நம் மனோபாவத்தையே ஆட்சியாளர்கள் மாற்றிவிட்டார்கள்.

இலவசங்களை அள்ளிவிடுவதற்கு வேண்டிய நிதி அரசுக்கு எங்கிருந்து வருகிறது என்று நாம் சிந்திக்கிறோமா? டாஸ்மாக் மதுக்கடைகளின் மூலம் தமிழக அரசுக்கு ஆண்டுக்கு 14 ஆயிரம் கோடி வருவாய் வருகிறது.

தமிழ்ப் பெருங்குடி மக்கள் ஆண்டுக்கு 28 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் மதுக்கடைகளில் கொண்டு போய் கொட்டினால்தான் அரசுக்கு எக்சைஸ், விற்பனை வரிமூலம் இவ்வளவு வருவாய் வரக் கூடும்.

மிகக் குறைந்த ஊதியம் பெறும் கூலித் தொழிலாளர்கள் குடித்து உடலைக் கெடுத்துக் கொள்வதுடன், குடும்பத்தையும் வறுமை நெருப்பில் பொசுக்கிவிடுகின்றனர்.

இந்திய தேசிய காங்கிரஸைத் தோற்றுவித்த வெள்ளையர் க்யூம் குடிபோதை குற்றங்களைத் தூண்டுகிறது. மதுவின் மூலம் வரும் வருவாய் பாவத்தின் கூலி அரசுக்கு இதில் ஒரு ரூபாய் வருவாயாக வந்தால், இதன்மூலம் உண்டாகும் குற்றங்களைத் தடுக்க இரண்டு ரூபாய் செலவழிக்க நேரும் என்று சொன்னதில் ஆழ்ந்த அர்த்தம் உள்ளது.

மதுவெள்ளத்தில் மிதக்கும் மண்ணில் பிறந்த வெள்ளையருக்குப் புரிந்த உண்மை மகாத்மாவின் வாரிசுகளுக்கும் அண்ணாவின் வழித்தோன்றல்களுக்கும் புரியாமல் போய்விட்டதே!

மது அருந்துவது பாவங்கள் அனைத்துக்கும் தாயாகும் என்றார் நபிகளார். பண்பாட்டுச் சரிவில் மக்கள் பயணப்பட மாநில அரசே பாதை போட்டுத் தருவது எந்த வகையில் நியாயம்? குஜராத்தில் மதுக்கடை வருவாய் இல்லாததால் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டு வளர்ச்சியின் வேகம் தடைப்பட்டுவிட்டதா? இருபது வயதுக்குள் குடிக்கப் பழகிவிட்டால் இறக்கும்வரை அதன் கோரப்பிடியில் இருந்து விடுபட முடியாது என்கிறது ஓர் ஆய்வு. அதனால்தான், மகாராஷ்டிரத்தில் 25 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு மது வழங்கக்கூடாது என்று ஆணை பிறப்பித்திருக்கிறது அரசு. இதைச் செய்யும் உள்ளம்கூட நம் அரசுக்கு இல்லையே!

அரசுக் கருவூலம் நிரம்புவதற்கு, நம் மண்ணின் மரபார்ந்த ஒழுக்கங்களை இழக்கச் சம்மதிப்பது சரியா? இலவசமாக அரிசியைப் பெறும் ஏழை பீர்புட்டியை 70 ரூபாய்க்கு வாங்கிக் குடித்தால் வறுமை ஒழியுமா? ஒன்றைப் பெறு வதற்காக ஒன்றை இழப்பதுதான் நியதி. அதற்காக மேல் துண்டை இலவசமாகப் பெறும் ஆசையில் எம் தமிழர் இடுப்பு வேட்டியை இழந்து நிற்பது தகுமா?

(ஞாயிறு பொறிபறக்கும்)

# தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகள் பாவிப்பதை உடன் நிறுத்த வேண்டும்

## யாழ்.அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் மற்றும் தென்னிலங்கை மீனவர்களின் தொழில் நடவடிக்கைகளால் யாழ். மாவட்ட மீனவர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் சார்பாக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் நேற்று மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. அந்த மகஜரில்,

இந்திய இழுவைப் படகுகள் எமது கடற்பரப்பினுள் அத்துமீறி தொடர்ந்தும் தொழிலில் ஈடுபட்டு வருவதனால் எமது தொழிலாளர்கள் நிம்மதியாக தொழில் செய்ய முடியாதுள்ளது.

இது தவிர தென்னிலங்கை மீனவர்கள் எமது பிரதேச கடல்களில் தொழில் புரிந்து வருவதனால் எமது பிரதேச மீனவர்கள் தொழிலின்றி துன்பகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இலங்கை அரசின் கடற்தொழில் அமைச்சினால் தடை செய்யப்பட்ட தொழில்கள் எமது கடற்பரப்பில் தாராளமாக எவ்வித தடையுமின்றிமேற்கொள்ளப்பட்டு வருகின்றமை விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

எமது மீனவ மக்கள் பல விதமாக துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அந்த நிலையிலிருந்து எம்மவர்கள் மீண்டெழத் தாங்கள் உரிய வழி வகைகளை மேற்கொண்டு மீனவர்களின் வாழ்வாதாரம் உயர்வடைய உதவிபுரிய வேண்டும்.

இந்திய இழுவைப் படகுகள் மீண்டும் எமது கடற்பரப்பினுள் ஊடுருவி தொழில் நடைமுறையில் ஈடுபடுவதால் தொழிலாளர்கள் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் எமது தொழிலாளர்களின் வலைகளை வெட்டியும் கொண்டு சென்று விடுகின்றனர்.

தலா ஒவ்வொரு மீனவரும் இரண்டு இலட்சம் முதல் மூன்றரை இலட்சம் வரையான மூலதனத்தை இழந்துள்ளார்கள்.

இத்தகைய நடவடிக்கைகளால் எம் மீனவர்கள் விரக்தியடைந்துள்ளனர். இந்நிலை தொடருமானால் எமது மீனவர்களின் நிலை என்னவாகும்?

சட்டத்தை மீனவர்கள் கையில் எடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். கடந்த போர்க் காலங்களில் எல்லாம் இழந்த நாம் தொடர்ந்து இழப்பீடுகளை சந்திக்க முடியாது.

மேலும் தென்னிலங்கை மீனவர்கள் அரசின் அனுமதியுடன் எமது பிரதேச கடற்கரைகளிலும் வீடுகளிலும் வாடிகள் அமைத்து படகுகளை வாடகைக்கு அமர்த்தி எமது கடற் பிரதேச நிலத்தடி வளங்களான சங்கு, அட்டை என்பனவற்றை பிடித்து செல்வதனால் எமது கடலில் மீன் வளம் அருகி வருகின்றது.

இதன் காரணமாக எமது எதிர்கால சந்ததி கடற்தொழில் செய்யும் வாய்ப்பை இழந்து விடும் ஆபத்தான சூழல் உருவாகி வருகின்றது. அது மட்டுமல்ல இப்போதைய சூழலில் வாழ்பவர்கள் கூட மீனைப் பிடிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது. கடல் வளம் காப்பாற்றப்பட வேண்டும். மீனவர் சமுதாயம் வாழ வழி வகைகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என அதில் மேலும் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-6)

# பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சுப்பையா கலையரங்கில் பாடசாலையின் முதல்வர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கண்சிகிச்சை பிரிவின் வைத்தியரும் பழைய மாணவியுமான செல்வி மகேஸ்வரி தேவி சரவணமுத்து,சிறப்பு விருந்தினராக வேள்ட்விசன் நிறுவனத்தின் திட்டமிடல் மீளாய்வு இணைப்பாளர்,ஜே.பி.கோல்டன் கொமரா, சாவகச்சேரி கோட்டக்கல்வி பணிப்பாளர் குமாரசாமி சிவானந்தம்,கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் இராஜக்கோன் குழந்தைவேலு மற்றும் ஓய்வு பெற்ற ஆசிரியர் நாகம்பை தம்பிரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அத்தோடு நினைவுப் பேருரையினை கிழக்கு மாகாண கல்வியமைச்சு ஆலோசகரும் ஆறுதல் நிறுவன இயக்குநருமான சுந்தரம் டிவகலாலாவும் ஆசியுரையினை தென்மராட்சி கல்விவலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஆகியோரும் வழங்கவுள்ளனர். (4-2)

# வேலைக்காக ஆட்களை அனுப்புவதற்கு இத்தாலியும் இலங்கையும் ஒப்பந்தம்

வருடாந்தம் சுமார் மூவாயிரத்து 500 பயிற்றப்பட்ட இலங்கை பணியாளர்களை இத்தாலிக்கு அனுப்புவதற்குரிய உடன்படிக்கையில் இரண்டு நாடுகளினதும் அதிகாரிகள் கைச்சாத்திட்டுள்ளனர்.

இதன் கீழ் பணிவிடையாளர்கள், சாரதிகள், வீட்டு பராமரிப்பாளர்கள் போன்ற தொழில்களுக்காகவும் விவசாயத்துறையில் பயிற்றப்பட்டவர்களையும் அனுப்புவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் குறிப்பிடுகின்றது.

2013 ஆம் ஆண்டு முதல் பயிற்றப்பட்ட பணியாளர்களை இத்தாலி அனுப்புவதற்கான வாய்ப்பு கிட்டியுள்ளதாக பணியகம் தெரிவிக்கின்றது. அத்துடன் இதற்கான பயிற்சிகள் அடுத்த வருடம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (4-2)

# பாரதவுடன் வந்தவர்களிடம் ஆயுதம் எதுவும் இருக்கவில்லை

## நேரில் கண்டவர் சாட்சியம்

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர மற்றும் அவரது ஆதரவாளர்கள் மூவரும் துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஏற்பட்ட பலத்தகாயம் காரணமாகவே உயிரிழந்துள்ளனர் என நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான சாட்சி விசாரணைகளின் பின்னரே கொழும்பு மேலதிக நீதிவான் பிரசன்ன டி.அல்விஸ் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டார். இதுவொரு ஆட்கொலை சம்பவம் எனவும் நீதிவான் கூறினார்.

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர தவிர இந்த சம்பவத்தில் ஜலால்தீன் மொஹமட் ஆஷிர், தர்ஷண ஜயதிலக்க, மனுவேல் குமாரசுவாமி ஆகியோருமே உயிரிழந்தனர்.

இவர்கள் சம்பவத்தின் போது பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவுடன் சமுகமளிக்காதவர்கள் என சாட்சிகளின் மூலம் தெரியவந்துள்ளது. இந்த சம்பவத்தில் உயிரிழந்த அனைவரும் துப்பாக்கிப் பிரயோகத்தினால் படுகாயமடைந்ததாக நீதிமன்றத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரின் நெறிப்படுத்தலில் நீதிமன்றத்தில் சாட்சியமளித்த சம்பவத்தை நேரில் கண்டவரான சாம் விஜேசிங்க சம்பவ தினத்தன்று பாரத லக்ஸ்மன் உள்ளிட்ட குழுவினர் இரண்டு வாகனங்களில் வந்திருந்ததாக கூறினார்.

மற்றுமொரு வாகனத் தொடரணியில் வந்த துமிந்த சில்வா வழிமறித்ததாகவும் இதனையடுத்து வாகனத்தை விட்டு பாரத லக்ஸ்மன் இறங்கியதும் துமிந்த சில்வா அவரை காலால் உதைத்ததாகவும் சாட்சியாளர் குறிப்பிட்டார்.

ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுடன் வந்தவர்களிடம் துப்பாக்கிகள் இருந்ததாகவும் பாரத லக்ஸ்மனுடன் வந்தவர்களிடம் ஆயுதங்கள் எதுவும் இருக்கவில்லை எனவும் சாட்சியாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுடன் வந்தவர்கள் வான் நோக்கி துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாகவும் அவர்களில் ஒருவர் பாரத மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதை தாம் கண்டதாகவும் அந்த சாட்சியாளர் குறிப்பிட்டுள்ளார்.இந்த வழக்கின் மேலதிக விசாரணைகள் நாளை திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (4-2)

# மாணவர்களின் இடைவிலகலை தடுக்க மக்களின் பூரண ஒத்துழைப்பு வேண்டும்

## கல்வி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களின் இடை விலகலை தடுப்பதற்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதிகளவிலான மாணவர்கள் க.பொ. த சா/த பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னதாகவே பாடசாலைகளில் இருந்து இடைவிலகி விடுகின்றனர்.இதன் காரணமாக க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றும் வாய்ப்பை இழந்து விடுவதாக அமைச்சு குறிப்பிடுகின்றது.

வருமானம் குறைந்த குடும்பங்களை சேர்ந்த பிள்ளைகள் மற்றும் தாய் மற்றும் தந்தையை இழந்த பிள்ளைகள் போன்றோரே பாடசாலைக்கல்வியை இடை நடுவில் விடுவதாக ஆய்வுகளில் தெரியவந்துள்ளதாக கல்வியமைச்சு தெரிவிக்கின்றது. (4-2)





தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ். பொது நூலகத்தில் தொடர்ந்து மூன்று நாட்கள் புத்தகக் கண்காட்சி நடைபெற்று வருகிறது. இக் கண்காட்சியை நேற்று முன்தினம் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா நாடாவெட்டி திறந்து வைப்பதையும் விருந்தினர்கள் கண்காட்சியை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

# விளை நிலங்களை மேட்டு நிலங்களாக மாற்றுவோருக்கு எதிராக நடவடிக்கை

## பிரதமர் சபையில் தெரிவிப்பு

விளை நிலங்களாகவுள்ள விவசாயக் காணிகளை மேட்டு நிலங்களாக மாற்றி கட்டடங்களை அமைப்பவர்கள், அவர்களுக்கு துணை போகும் அரச அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதமர் தி.மு.ஜயரட்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற கமநல அபிவிருத்தி திருத்த சட்ட மூல விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கடந்த 2000 ஆம் ஆண்டு நான் விவசாய அமைச்சராக இருந்த போது குத்தகை விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்தேன். இதன்படி காணி குத்தகை விவசாயிக்கோ அல்லது காணி உரிமையாளருக்கோ இருவரில் ஒருவருக்கோ கிடைக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. ஒரு தரப்பினருக்கு நியாயமான தொகையை வழங்கி காணியை பெறும் வகையில் சட்டம் திருத்தப்பட்டது.

முழுமையான உரிமையை ஒரு தரப்பினருக்கு வழங்குவதன் மூலம் பிரச்சினை தீர்க்கப்பட்டு பயன் கிடைக்கும். ஆனால், குத்தகை விவசாயிக்கு பண வசதி இல்லாததால் அவர்களுக்கு வங்கிக் கடன் வழங்கும் முறை ஆரம்பிக்கப்பட்டது.

குத்தகை விவசாயிக்கும் காணி உரிமையாளருக்கும் இடையிலான பிரச்சினை தொடர்பில் ஆயிரக்கணக்கான வழக்குகள் குவிந்திருந்தன. 2000 ஆம் ஆண்டில் நிலைவேற்றப்பட்ட சட்டம் செயற்படுத்தப் படாததால் முன்னரை விட நிலைமை மோசமாக இருக்கின்றது.

குத்தகை விவசாயியை பாதுகாக்கும் வகையில் புதிய சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. பிரதான உணவான அரிசியினை உற்பத்தி செய்யும் விவசாய நிலங்கள் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காண்பதன் மூலம் கூடுதலான உற்பத்தி செய்யப்படும் அரிசியை ஏற்றுமதி செய்ய முடியும். (4-2)

# இலங்கைக்கு மீண்டும் ஜி.எஸ்.பி.வரிச் சலுகை

இலங்கைக்கு மீண்டும் அமெரிக்காவின் ஜி.எஸ்.பி.வரிச்சலுகையை வழங்குவதற்கான ஆவணத்தில் ஜனாதிபதி பராக் ஒபாமா கையொப்பமிட்டுள்ளார்.

இதற்கமைய அடுத்த மாதம் ஐந்தாம் திகதி தொடக்கம் இலங்கைக்கு ஜி.எஸ்:பி.வரிச்சலுகை கிடைக்குமென கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் கடந்த காலத்திற்கு செல்லுபடியாகும் வகையில் இந்த சலுகையை வழங்கவும் அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரை இந்த வரிச் சலுகை அமுலில் இருக்குமென கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் குறிப்பிட்டுள்ளது. கடந்த 1976 ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா அமுல்படுத்தி வரும் ஜி.எஸ்.பி. திட்டத்தின் ஊடாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதார மேம்பாட்டுக்காக வரிச்சலுகை வழங்கப்படுகின்றது.

இலங்கை உள்ளிட்ட 129 நாடுகளுக்கு நான்காயிரத்து 400 பொருட்களுக்கு ஜி.எஸ்.பி. வரிச்சலுகை கிடைத்துள்ளது. கடந்த 2010 ஆம் ஆண்டுக்காக மாத்திரம் அமெரிக்காவின் ஜி.எஸ்.பி. திட்டத்தின் மூலம் ஏற்றுமதி பொருட்களுக்காக இலங்கைக்கு 147 மில்லியன் டொலர் வரிச் சலுகை கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-2)

# காரைநகர் அபிவிருத்திச் சபை அங்கத்தவர் விண்ணப்பம்

காரைநகர் அபிவிருத்திச்சபை புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அங்கத்தவர்களாக இணைய விரும்புபவர்கள் காரைநகரில் உள்ள அபிவிருத்திச்சபை அலுவலகத்திலோ அல்லது தற்போதைய நிர்வாக அங்கத்தவர்களிடம் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி வருடாந்தச் சந்தா எனின் இருநூற்று நாற்பது ரூபாவும் (240/-) ஆயுள் சந்தா எனின் மூவாயிரம் ரூபாவும் (3000/-) செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவும்.

காரைநகர் அபிவிருத்தியில் ஆர்வம் உள்ள அனைவரையும் அங்கத்துவத்தில் இணையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புது வீதி,
காரைநகர்.

க.சோமசேகரம்,
தலைவர்,
காரைநகர் அபிவிருத்திச் சபை.

(சி-4792)

## 20 ஆவது ஆண்டு நினைவாக

### திருமதி திலகவதி லோகநாதன்

திதி:- 11.10.2011

வானமது இரவில் பகலவனை இழந்து
இருளில் தவிப்பது போல்
நிதம் உனை எண்ணி உன் பிரிவால்
தவிக்குது நம் குடும்பம்
இதய நதியில் ஓடமாய் உன் நினைவுகள்
என்றும் ஓடிக்கொண்டிருக்கும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திலகாலயம்
மலையந்தோட்டம்,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

உங்கள் பிரிவால் வருந்தும்
கி.லோகநாதன் குடும்பத்தினர்.

(6627)

## முன்பள்ளிக் கல்வி-டிப்ளோமா பயிற்சிக்கான விண்ணப்பப் படிவம்

வடமாகாண கல்வியமைச்சின் வழிகாட்டல் ஆலோசனையுடனும் சிறுவர் அபிவிருத்தி பெண்கள் விவகார அமைச்சின் அனுமதியுடனும் எமது நிறுவனத்தினால் நடத்தப்படும் மேற்படி கற்கை நெறி (ஆண்டு 2011/2012)க்கான விண்ணப்பங்கள் முன்பள்ளி ஆசிரியர்களிடமிருந்து 14.11.2011 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பப்படிவங்களை அலுவலக நேரத்தில் 25.10.2011ஆம் திகதியிலிருந்து 07.11.2011 வரை வலய ஆரம்பப்பிள்ளை அபிவிருத்தி உதவிக்கல்விப்பணிப்பாளரிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

சுந்தரம் டிவகலாலா
நிறைவேற்றுப்பணிப்பாளர், ஆறுதல்-இலங்கை.

(சி-4756)



ஜெய்குருதேவ்

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி அவர்களின்

THE ART OF LIVING

## வாழும் கலைப்பயிற்சி

மூச்சுப்பயிற்சி, பிராணாயாமம், சுதர்சன கிரியா, தியானம், யோகா

### பயிற்சியின் பலன்கள்

- அழுத்தமற்ற அமைதியான மனம், ஆரோக்கியமான உடல்
- பேரானந்தம், ஆர்வம், உத்வேகம்.
- தன்னை உணர்தலும், வாழ்வில் மறுமலர்ச்சியும்.
- கவலை, படபடப்பு இவற்றிலிருந்து விடுதலை, சுகமான உறக்கம்.
- வீட்டிலும், வேலைத்தளத்திலும் சுமூக உறவு.
- மற்றவரிடத்தில் பழகும் விதத்தில் மேம்பாடு.
- உடலிலும் மனதிலும் சக்தி அதிகரித்தல்.
- படைப்பாற்றல், தெளிவான சிந்தனை.
- கல்வியிலும் வேலையிலும் கவனம் அதிகரிக்கும்.
- நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பு.

(6661)

காலம்:- 24.10.2011 திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு (அறிமுகவுரை)
பயிற்சிகள்:- 25.10.2011 செவ்வாய்க்கிழமை தொடக்கம்

| | | |
|---|---|---|
| நேரம்:- காலை | 6.00 மணிமுதல் | 8.30 மணிவரை |
| | 10.00 மணிமுதல் | 12.30 மணிவரை |
| மாலை | 2.00 மணிமுதல் | 4.30 மணிவரை |
| | 5.00 மணிமுதல் | 7.30 மணிவரை |

இடம்:- மகேஸ்வரன் மணிமண்டபம்.
நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதி.
தொ.பே: 0770474757, 0777740593

குறிப்பு:- ஏற்கனவே பயிற்சி பெற்றவர்களுக்கான சுதர்சனக் கிரியா வகுப்பு இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணிமுதல் 12.30 மணிவரை மகேஸ்வரன் மணிமண்டபத்தில் நடைபெறும்.



# நுளம்பு பெருக்கத்திற்கு ஏதுவான வழிகளை கட்டுப்படுத்துவோம்

யாழ்ப்பாணத்திலே மாரிகாலம் ஆரம்பமாகிவிட்டது. விவசாயிகள் விதைப்பிலே ஆர்வம் காட்டத்தொடங்கிவிட்டார்கள். வற்றிக்கிடந்த கிணறுகள் நிறையத் தொடங்குகின்றன. காய்ந்து வெடித்துக் கிடந்த நிலங்கள் பசுமை போர்க்கத் தொடங்குகின்றன. தாவரங்கள் தலை குளித்து தூய்மையாகித் தலை நிமிரத் தொடங்குகின்றன. இவ்வாறு யாவுமே நல்ல படியாக நடந்தேறத், தொடங்குகின்ற போது மூளையின் ஒரு மூலையில் பொறிதட்டுகிறது. வெள்ளம் தேங்கப் போகிறதே, நுளம்புகள் பெருகப் போகிறன்றனவே, அவற்றால் நோய்கள் பரவப்போகின்றனேவே என்பதே அவ் எச்சரிக்கையாகும்.

கடந்த சில சகாப்தங்களாக பல்வேறு இன்னல்களுக்கு மூகம் கொடுத்துவந்த குடாநாட்டு மக்களை நுளம்பால் பரவும் நோய்களும் விட்டுவைக்கவில்லை. இரண்டாயிரத்து நான்கிலே சிக்குன்குனியா எனும் வைரஸ் நோய் ஈடிஸ் இன பெண் நுளம்பால் பரப்பப்பட்டு குடாநாடு முழுவதையுமே குனிய வைத்தது. மலேரியா எனும் அனோபிலிஸ் இன நுளம்பால் பரப்பப்படும் நோய் 1994-1995 இலும் 1997-1999 குடாநாட்டிலும் பாரிய தாக்கங்களை உண்டுபண்ணியது. ஆனால் சுகாதாரப்பிரிவினரின் குறிப்பாக மலேரியா தடுப்பியக்கத்தின் அயராத முயற்சியால் இந்நோய் தற்பொழுது கட்டுப்பாட்டில் உள்ளது. கியூலெக்ஸ் இன பெண் நுளம்புகளால் பரப்பப்படும் யானைக்கால் நோயின் தாக்கம் குடாநாட்டில் இல்லை எனலாம். ஆனால் உயிராபத்தை விளைவிக்கக் கூடிய டெங்கு நோயின் தாக்கம் கடந்த சில ஆண்டுகளாகக் குடாநாட்டில் அதிகரித்து வருகின்றமை கவலையளிப்பதாக உள்ளது.

மேல் காணும் அட்டவணையானது 2010 மற்றும் 2011 இல் இலங்கை முழுவதுமாக இனம் காணப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையையும் அதனால் ஏற்பட்ட இறப்புகளையும் யாழ்.குடாநாட்டுடன் ஒப்பிடுகிறது.

கொழும்பு, கம்பஹா போன்ற மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் டெங்கின் தாக்கம் யாழ்.மாவட்டத்தில் குறைவாக இருந்தபோதும் தாக்கம் பாரியதே. இலங்கை முழுவதுமே டெங்கு நோயின் தாக்கம் 2010 இல் பாரியதாக இருந்துள்ளது. பல்வேறு தரப்பினரின் முயற்சியால் இந்தவருடம் (2011) நோய் தொற்றியவரின் எண்ணிக்கையும் இறப்பும் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளன.


| | 2010 | | 2011 (புரட்டாதி 2011 வரை) | |
|---|---|---|---|---|
| | டெங்கு நோயாளிகள் | இறப்பு | டெங்கு நோயாளிகள் | இறப்பு |
| யாழ்.மாவட்டம் | 3007 | 30 | 271 | 04 |
| இலங்கை | 34105 | 246 | 19372 | 140 |

கீழ் காணும் அட்டவணையானது 2010 இல் யாழ்.குாநாட்டில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக இனம்காணப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையைக் குறிக்கின்றது.

| சுகாதார வைத்திய அதிகாரி (MOH) பிரிவு | டெங்கு நோயாளிகள் (2010) |
|---|---|
| சாவகச்சேரி | 137 |
| ஊர்காவற்றுறை | 96 |
| கோப்பாய் | 256 |
| மானிப்பாய் | 0 |
| மாநகரசபை யாழ்ப்பாணம் | 633 |
| பருத்தித்துறை | 184 |
| தெல்லிப்பழை | 125 |
| நல்லூர் | 327 |
| உடுவில் | 308 |
| சங்கானை | 178 |
| சண்டிலிப்பாய் | 371 |
| கரவெட்டி | 380 |
| மொத்தம் | 2931 |

குறிப்பாக மக்கள் செறிவாக வாழும் யாழ். மாநகர சபை பிரதேசத்திலேயே தாக்கம் அதிகம் காணப்பட்டுள்ளது. ஈடிஸ் இன பெண் நுளம்புகள் மனிதக்குருதியையே அதிகம் விரும்பிக் குடிப்பதால் சன நெரிசலான இடங்களில் அதிகம் காணப்படும். மேலும் மாநகரசபை பிரதேசத்தில் அரச மற்றும் பொது நிறுவனங்கள் அதிகமாகக் காணப்படுவதால் சுகாதாரப் பகுதியினர் மற்றும் மாநகரசபை ஊழியர்கள் நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான காரணிகளை அகற்றுவதில் அதிக சிரமங்களை எதிர்நோக்கியிருப்பர் என்பதில் ஐயமில்லை. ஆனாலும் 2011 இலே நோயாளர்களின் எண்ணிக்கையும் இறப்பும் பெருமளவு குறைக்கப்பட்டமை அவர்களது கடின உழைப்பையும் அர்ப்பணிப்பான செயற்பாட்டையுமே எடுத்துக் காட்டுகின்றது.

கீழ்காணும் வரைபானது யாழ்.மாவட்டத்திலே டெங்கு நோயாள்ர்களின் எண்ணிக்கையானது ஒவ்வொரு மாதமும் எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.மேலும் 2004 முதல் 2010 வரை நோயாளர்களின் எண்ணிக்கையையும் ஒப்பிடுகிறது.ஏனைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டே (2010) அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர். இங்கு முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது யாதெனில் கார்த்திகை மாதத்தினை தொடர்ந்து அதிகரித்த நோயின் தாக்கம் தை மற்றும் மாசி மாதங்களில் உச்சமடைந்து பங்குனி, சித்திரையில் குறைவடைந்து செல்கிறது. மீண்டும் வைகாசி மாதத்தில் தாக்கம் அதிகரித்து ஆனி, ஆடியில் உயர் நிலையில் காணப்பட்டு மீண்டும் ஐப்பசி மாதம் வரை குறைவடைகின்றது. மீண்டும் எண்ணிக்கையில் உயாரத் தொடங்குகின்றது.




மேலும் வருடத்தில் இரண்டு உயர்ச்சிகள் காணப்படுகின்றன. அதிகூடிய உயர்ச்சி மார்கழி, மாசி வரையானது ஏனைய சிறிய உயர்ச்சி வைகாசி,ஆவணி வரையானது. இரண்டுமே பருவகால மழையைத் தொடர்ந்த ஏற்படும் நுளம்புப் பெருக்கத்தால் ஏற்படுவது கண்கூடு.

வட கீழ் பருவ மழை தொடங்கிவிட்டது. எனவே குடாநாட்டு மக்களாகிய நாம் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த எமது வீட்டிலும் சுற்றுப்புறத்திலும் நுளம்பு பெருக ஏதுவான நீர் தேங்கி நிற்கும் அனைத்து வழிகளையும் இல்லாதொழிக்க வேண்டும்.

பற்றைகள், புல் பூண்டுகளை அழித்தல் பொதுவான சுகாதாரத்திற்கு நல்லதுதான். ஆனால் அதனை மட்டும் செய்து விட்டால் நுளம்புகள் அழியா என்பது பெரும்பாலான குடாநாட்டு மக்களுக்கு நன்கு தெரியும். நீர் தேங்காது தடுத்தாலே மிக முக்கியமானதாகும்.

இறுதியாக சுகாதாரப் பகுதியினரோ, கிராம சேவையாளரோ, படையினரோ, மாணவர்களோ, மேற்படி நடவடிக்கைகளில் வலிந்தெம்மை ஈடுபடுத்த முன்னர் நாம் முன்வந்து செய்தல் சாலச் சிறந்ததாகும்.

**Dr. எஸ்.கண்ணதாசன்**

## தாய்லாந்தில் வெள்ளப்பெருக்கு 34 இலங்கையர் நாடு திரும்பினர்

தாய்லாந்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மேலும் 34 இலங்கையர்கள் இன்று நாடுதிரும்பவுள்ளனர்.

பெத்தும்தானி பிரதேசத்தில் அமைந்துள்ள ஆசிய தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்வி கற்றுவந்த மாணவர்கள் சிலரே இன்று நாடு திரும்பவுள்ளதாக தாய்லாந்துக்கான இலங்கைத் தூதுவர் ஜெனரல் ஷாந்த கோட்டேகொட தெரிவித்தார்.

குறித்த கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த 51 மாணவர்கள் ஏற்கனவே நாடு திரும்பியுள்ளதாக அவர் தெரிவிக்கிறார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு தேவையான வசதிகள் பெங்கொக் நகரில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக பெங்கொக்கில் உள்ள இலங்கையின் வர்த்தகர்கள் ஒத்துழைப்பை வழங்கியதாகவும் தாய்லாந்துக்கான இலங்கை தூதுவர் தெரிவித்துள்ளார்.

பெங்கொக் நகரில் வடபகுதி செல்ல எதிர்பார்த்துள்ள இலங்கையர்கள் தாய்லாந்தில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை குறித்து கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என அவர் சுட்டிக்காட்டினார்.

நாடு திரும்பும் மாணவர்கள் பெங்கொக் நகரின் நிலைமை வழமைக்கு திரும்பியதன் பின்னர் கல்வி நடவடிக்கைகளுக்காக மீண்டும் தாய்லாந்துக்கு வருவார்கள் எனவும் ஜெனரல் ஷாந்த கோட்டேகொட தெரிவித்துள்ளார்.(4-2)

## யாழ்ப்பாண விவசாயபீடத்தின் அறிமுக நிகழ்வும் விரிவுரைகளும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கு 2010/2011 கல்வியாண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு விவசாய பீட பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 14ஆம் திகதி திங்கட்கிழமை இரண்டாம் வருடம் முதலாம் அரையாண்டு, இரண்டாம் வருடம் இரண்டாம் அரையாண்டு, மூன்றாம் வருடம் இரண் டாம் அரையாண்டுகளில் கல்வி பயிலும் ஏனைய விவசாய பீட மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ள தாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதில் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (4-12)

## பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. முக்கியமான பல விடயங்கள் கலந்துரையாடப் [illegible] உள்ளதனால் அனைத்து பழைய மாணவர்க [illegible] ம் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலையின் அதி [illegible] அ.பங்கயற்செல்வன் அறிவித்துள்ளா [illegible]. (4-9)

## விசேட தேவையுள்ளோருக்கு மெய்வல்லுநர் போட்டி

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விசேட தேவையுள்ள மாண்வர்களுக்கான மெய்வல்நனர் போட்டி எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்வி வலயத்திலிருந்து [illegible] கொள்ளும் மாண்வர்கள் பிறப்புச் சான்றிதழ், அஞ்சல் அறிமுக அட்டை, மருத்துவ சான் றிதழ், அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட புகை ப்படம், மாணவர் குறிப்பிட்ட பாடசாலையில் கல்வி பயில்வதை உறுதிப்படுத்தும் கடிதம் ஆகியவற்றுடன் சமுகம் தரும்படி துணு க்காய் கல்விவலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா கேட்டுள்ளார். (4-3-15)

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் ஆனைக்கோட்டை பொது நூலகத்தில் நூற் கண்காட்சி கடந்த 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியினை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் ஆரம்பித்து வைத்துள்ளதோடு நேற்று வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4-12)

பேச்சு அதிகம் வேண்டாம். அனைத்திற்கும் சுருக்கமான பதில், உங்கள் காரியங்களை செய்து முடிப்பதுதான். - ஜார்ஜ் ஹெர்பெர்ட்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அமெரிக்காவின் அழைப்பை அர்த்தமுள்ளதாக்குங்கள்

ஈழத் தமிழ் இனத்தின் தோல்விகளுக்கு பல காரணங்கள் உண்டு. அதில் எதனையும் திட்டமிட்டு அதனை எழுத்துமூல ஆவணமாக்கி கொள்ளும் திறன் இன்மை முக்கிய காரணமாகும்.

எங்களிடம் பலவீனங்களை வைத்துக் கொண்டு - அதனை உணராமல் ஓடித்திரிவதால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை.

இனப்பிரச்சினை தொடர்பில், இலங்கைக்கும் கூடவே வடபுலத்திற்கும் வந்து சென்ற வெளிநாட்டுத் தூதுவர்கள்,விசேட பிரதிநிதிகள் ஏராளம்.

இருந்தும் அவர்களுக்கு எங்கள் பிரச்சினைகளை எடுத்தியம்பத் தவறிவிட்டோம்.

இதன் காரணமாக அவர்களின் வருகையால் எங்கள் பிரச்சினைகள் தொடர்பில் எந்த முடிவும் கிடைக்காமல் போயிற்று.

வடபுலத்து தமிழ் மக்கள் பெரும் துன்பப்பட்டுள்ளார்கள் என்ற நினைப்போடு இங்கு வருகை தந்த இராஜதந்திரிகளை, மேளதாளத்தோடு மலர்மாலை, பொன்னாடை அணிவித்து அழைத்துச் சென்று அவர்களின் மனநிலையை மாற்றி வடபுலத்து தமிழ் மக்களின் பிரச்சினை அவ்வளவு கடுமையல்ல;

அவர்கள் நன்றாக இருக்கிறார்கள் என்ற நினைப்பை ஏற்படுத்தி எங்கள் தலையில் நாங்களே மண்ணை அள்ளிக் கொட்டிக் கொண்டோம்.

இதுதவிர, எங்கள் பிரச்சினைகளை சொல்வதற்கென்றே ஒரு சிலர் பிறப்பெடுத்துள்ளனர்.

அவர்கள் வலிகாமத்தில் மீள்குடியமர்வு, கடலில் மீன்பிடிப்பு, இப்படியான பிரச்சினைகளை முன்வைத்தமையால் வந்தவர்களால் எங்கள் உரிமைப் பிரச்சினை பற்றி அறிய முடியாமல் போயிற்று.

எத்தனை உயிரழிவு, எத்தனை கொடூரம், எத்தனை அட்டூழியம், இப்படியெல்லாம் பெரும் பிரச்சினை இருக்கும்போது அவற்றில் கை வைக்காது தங்கள்தங்கள் ஊர்ப் பிரச்சினையைக் கூறி எல்லாவற்றையும் குழப்பிக் கொண்டனர்.

இதேபோன்று வெளிநாடுகளுக்குச் சென்ற தமிழ் அரசியல் தலைமைகளும் யாழ்ப்பாணத்தில் ஒரு தடவையேனும் கூடி நிலைமைகளை ஆராயாமல், டில்லியில் போய் அங்கு வாய்த்தர்க்கம் புரிந்து அறிக்கை தயாரிக்கத் தெரியாமல் போன சம்பவங்களும் தாராளம்.

இந்தக் கசப்பான உண்மைகளை தமிழ் அரசியல் தலைமைகள் ஆழமான அனுபவமாகக் கொள்வது அவசியம்.

அமெரிக்காவின் அழைப்பின் பேரில் அங்கு செல்லும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தேவையற்ற விடயங்களை கதைக்காமல் தேவையுள்ள எங்கள் பிரச்சினையில் - அமெரிக்காவை தலையிட வைக்கக்கூடிய விடயங்களைக் கூற வேண்டும்.

இதற்காக இங்குள்ள புத்திஜீவிகளை அழைத்து அவர்களோடு கருத்துப் பரிமாற்றம் செய்து அதில் செழுமைப்படுத்தப்பட்ட கருத்துக்களை அறிக்கைப்படுத்தி அதனை திரும்பத் திரும்பப் படித்து அதை அமெரிக்காவிடம் எடுத்துக் கூறவேண்டும்.

இதைவிடுத்து எல்லாம் எனக்குத் தெரியும் என்று நினைத்தால், மறதிகளும், மாறாட்டங்களும் எங்களுக்கான அரிய சந்தர்ப்பத்தை நாசமறுத்துவிடும்.

# அனல் மின் நிலையத்திற்குரிய காணி எடுக்கப்பட்ட பின் சம்பூரில் மீள்குடியமர்வு

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

சம்பூரில் அனல் மின் நிலையத்துக்குத் தேவையான காணிகள் எடுக்கப்பட்ட பின்னர் எஞ்சிய இடங்களில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படு வர் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையின் மீது உரையாற்றிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன், சம்பூரில் மக்கள் மீளக் குடியமர அனுமதி மறுக்கப்படுவது குறித்து குற்றம் சாட்டியிருந்தார்.

அதற்குப் பதிலளித்துப் பேசிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ;

சம்பூரில் அனல் மின் நிலையத்துக்கு தேவையான காணிகள் எடுக்கப்பட்ட பின்னர் எஞ்சிய இடங்களில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவர். அதுவரை அவர்கள் தற்போது தங்கியுள்ள இடங்களிலேயே குடியிருக்கலாம்.

சம்பூரில் மட்டுமன்றி கரவலப்பிட்டிய, கொத்மலை, நுரைச்சோலை மின் திட்டங்களை நடைமுறைப்படுத்திய போதும் காணிகள் எடுக்கப்பட்டன.

அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்ற சில வேளைகளில் தனியார் காணிகளை எடுக்க வேண்டியுள்ளது.

அவ்வாறு காணிகள் எடுக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடுகள் வழங்கப்படுகின்றன. சம்பூரில் காணிகள் எடுக்கப்படுவோருக்கும் நட்டஈடுகள் வழங்கப்படும் என்று அமைச்சர் பசில் ராஜபக்ஷ மேலும் கூறியுள்ளார். (பா-9)

# மாலைதீவில் சார்க் மாநாடு; பல நாடுகள் உதவி வழங்கவுள்ளன

(கொழும்பு)

அடுத்த மாதம் மாலைதீவில் இடம்பெறவுள்ள சார்க் மாநாட்டிற்கு பல நாடுகள் உதவி வழங்கவுள்ளன. இதற்கு பாதுகாப்பை வழங்குவதில் இலங்கையும் இணைந்து கொண்டுள்ளது.

இதில் விசேட அதிரடிப்படைப் பிரிவு வருகை தரும் இராஜதந்திரிகளுக்கு பாதுகாப்பு வழங்கவுள்ளது.

அத்தோடு பயங்கரவாதத்தை தோற்கடிப்பதில் பெற்றுக் கொள்ளப்பட்ட விசேட பயிற்சி காரணமாக விசேட அதிரடிப்படை இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே சார்க் அரச தலைவர்கள் மாநாடு எதிர்வரும் நவம்பர் 10,11 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பல நாடுகள் மாலைதீவு அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி உள்ளன.

இதற்கு சீனப்பாதுகாப்பு புகைப்பட கட்டமைப்பு பொருத்தப்படவுள்ளது. அத்தோடு இராஜதந்திரிகள் பயணிக்கும் வாகனங்களுக்கு தேவையான ஏனைய உபகரணங்கள் சீன அரசாங்கத்தினால் விநியோகிக்கப்படவுள்ளன.

இதன்போது இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் பொலிஸ் அதிகாரிகளை அனுப்பி வைப்பதுடன் றக் வாகனங்களையும் வழங்கவுள்ளன. இதேவேளை இருபது வயதிற்குட்பட்ட சார்க் கிரிக்கெட்போட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 7ஆம் திகதி வரை மாலைதீவில் இடம் பெறவுள்ளது. இதன்மூலம் தெற்காசியாவில் உயர்தரமான கிரிக்கெட் துறை திறமைகளை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளன என்று மாலைதீவு ஜனாதிபதி முகமத் நஷீப் தெரிவித்துள்ளார். (4)

# கல்விமாணி பாராட்டு நிகழ்வு

கல்வி நிறுவகப் பிராந்திய நிலையத்தில் தமது கல்வி மாணிப் பட்டப்படிப்பை பூர்த்திசெய்து வெளியேறுகின்ற முதலாம் அணி மாணவர்களின் ஒன்றுகூடலும் பாராட்டு வைபவமும் சி.பவளகுமாரன் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனும், சிறப்பு விருந்தினராக தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர்.(பா)

# உள் நோக்கமின்றிப் பிறருடன் உரையாட உறவாட எம்மை உருமாற்றுவோம்.

## பரமபிதா காட்டிய பாதை

**ம. பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர, பத்திரிகையாளர்.**

இன்றைய நற்செய்தியில் இயேசுவின் எதிரிகளாகக் காட்டப்படுவோர் பரிசேயர் சதுசேயர் ஆவர் .இவர்களுள் சதுசேயர் என்போர் பெரும்பாலும் எருசலேம் நகரில் வாழ்ந்த ஆளும் வர்க்கத்தினர் .இவர்கள் விவிலியத்தில் முதல் ஐந்து நூல்களை மட்டுமே அதிகாரபூர்வமான ஏடுகளாக ஏற்றனர். அந்நூல்களில் கூறப்பட்டவற்றை அப்படியே கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர்கள் மரபுகளில் வழங்கப்பட்ட சட்ட விளக்கங்கள் விவிலியத்தில் முதல் ஐந்து நூல்களின் போதனையிலிருந்து மாறுபட்டால் அவற்றை புறக்கணிக்க வேண்டும் என்றும் அவர்கள் கருதினார்கள்.

தங்களோடு கருத்து வேறுபட்ட சதுசேயரை இயேசு முறியடித்தார் என்பதை பரிசேயர் கேள்விப்பட்டு ஒரு விதத்தில் மகிழ்ந்தனர்.அத்துடன்பரிசேயரும் இயேசுவை சோதிக்கும் நோக்குடன் அவரை அணுகி வருகின்றனர்.

இயேசுவின் காலத்தில் வாழ்ந்த பரிசேயர்களும் திருச்சட்டத்தை நன்கு அறிந்து அதன் நுணுக்கங்களையும் தெரிந்து வைத்திருந்தார்கள். திருச்சட்டத்தில் அடங்கிய 613 கட்டளைகளையும் அவை பற்றிய யூத சமய அறிஞர்கள் வழங்கிய விளக்கங்களையும் பரிசேயர் கற்றிருந்தார்கள். தங்களைப் போன்று இயேசுவும் சமய அறிவில் சிறந்தவரா என்று சோதிக் கும் நோக்கில் அவர்களுள் திருச்சட்ட அறிஞர் ஒருவர் இயேசுவிடம் திருச்சட்ட நூலின்தலை சிறந்த கட்டளை எது? என்னும் கேள்வியைக் கேட்கிறார்.

இன்று நற்செய்தியில் இயேசு அக்கேள்விக்கு அளித்த பதிலில் பெரிய விளக்கங்கள் இல்லை .மிகவும் எளிய முறையில் கடவுள் தந்த கட்டளைகளின் உள் ஆழம் எதில் அடங்கியிருக்கிறது என்பதை எடுத்துரைக்கிறார். அன்பு செய்க என்பதே திருச்சட்டத்தின் சுருக்கம் என இயேசு போதிக்கிறார். கடவுளை அன்பு செய்வது, மற்றையது பிறரை அன்பு செய்வது என்னும் இரு பக்கம் கொண்டது தான் இந்த அன்புக் கட்டளை. இங்கு பழைய ஏற்பாட்டு திருச்சட்டத்தில் காணப்பட்ட அன்புக் கட்டளையில் இரு பக்கங்களை இணைக்கிறார் இயேசு.

இணைச்சட்ட நூலில் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூறுவாயாக (இச 6:5)என்னும் சட்டமும் லேவியர் நூலில் உன் மீது அன்பு கூறுவது போல உனக்கு அடுத்து இருப்பவர் மீதும் அன்பு கூறுவாயாக (லேவி 19:18) என்னும் சட்டமும் தனித்தனியாக காணப்பட்டாலும் இயேசுவின் போதனையில் அவை இரண்டும் பின்னிப்பிணைந்த விதத்தில் உள்ளன.

திருச்சட்ட நூலின் முழுமைக்கும் இறை வாக்குகளுக்கும் இவ்விரு கட்டளைகளே அடிப்படையாக அமைகின்றன. அன்புக்கட்டளையை இயேசு தம் வாழ் வில் முழுமையாக கடைப்பிடித்தார். கடவுளை முழுமையாக அன்பு செய்த அவர் நமக்காக சிலுவையில் உயிர் துறந்தார் .நம்மை இறுதி வரை அன்பு செய்ததை செயல் முறையில் காட்டினார்.அதே அன்பு நம்மில் துலங்க வேண்டும்.


திருச்சட்டத்தில் மட்டுமன்றி இயேசுவின் போதனையிலும் சாதனையிலும் அன்புக் கட்டளையே மைய இடம் பெறுவதில் வியப்பில்லை. கடவுள் முதன் முதலில் நம்மை அன்பு செய்தார். எனவே நாமும் அவரால் அன்பு செய்யப்படுகின்ற மனிதரை அன்பு செய்ய அழைக்கப்படுகின்றோம். கடவுளின் அன்பில் நாம் ஆழ வேரூன்ற வேண்டும் என்றால் முதலில் நாம் அவரை



நம்ப வேண்டும். அவருடைய வாக்குறுதி நிறைவேறும் என ஏற்க வேண்டும். நம்பிக்கையும் எதிர்நோக்கும் நம்மில் வளரும் போதுஅன்பும் வளரும்.அன்பு நம்பில் சிறக்கும் போது கடவுள் மட்டில் நாம் கொள்கின்ற நம்பிக்கையும் உறுதிப்படும். அவர் வாக்களிக்கின்ற நன்மைகளை நாம் பெறுவோம் என்னும் எதிர்நோக்கு உறுதியாகும். இன்று நாம் மற்றவரோடு உரையாடும் போது நமது கேள்விகளும் மன நிலைகளும் எப்படி இருக்கின்றன.

சிலவேளைகளில் நலம் விசாரி க்கும் தோற்றத்தில் பிறரை குத்தி இகழ் ந்த நகைப்புக்குள்ளாவதில்லையா? ஆறுதல் சொல்லும் தோற்றத்தில் புண்படுத்துவதில்லையா? ஆலோசனை சொல்லும் போக்கில் அவதூறு செய்வதில்லையா? எனவே நமது கேள்விகளுக்குப் பின் ஒளிந்திருக்கும் மன நிலையை நோக்கத்தை ஆய்வு செய்வோம். நேர்மையாக சிந்திக்கவும் பேசவும் எம் மனதிலும் நாவிலும் தூய்மையைத் ஏற்படுத்துவோம். உள் நோக்கமின்றிப் பிறருடன் உரையாட, உறவாட எம்மை உருமாற்றுவோம்.

# கடாபியை அடக்கம் செய்ய மிஸ்ரட்டா நகர் மக்கள் எதிர்ப்பு



லிபிய ஜனாதிபதி கடாபி கடந்த 20 ஆம் திகதி சிர்த் நகரில் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது உடலை புரட்சி படை வீரர்கள் தெருவில் இழுத்து சென்றனர் என்ற தகவல் தற்போது வெளியாகியுள்ளது. ஆனால் அந்த சர்ச்சையை பிரதமர் மக்மூத் ஷிப்ரிசஸ் மறுத்துள்ளார். கடாபியை காரில் அழைத்து சென்ற போது புரட்சி படைக்கும் கடாபி ஆதரவு படைக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது. அப்போது எங்கேயோ இருந்து பாய்ந்து வந்த குண்டு அவரது தலையில் பாய்ந்ததால் அவர் உயிரிழந்தார். இந்தக் குண்டு புரட்சிப்படை சுட்டதா? அல்லது கடாபி ஆதரவு இராணுவம் சுட்டதா? என தெரியவில்லை. இதற்கிடையே கொல்லப்பட் கடாபியின் உடலை எங்கே அடக்கம் செய்வது என்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. தற்போது அவரது உடல் மிஸ்ரட்டா நகருக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்தது. ஆனால் அதற்கு அந்த நகர மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.


எனவே, அவரது உடல் மிஸ்ரட்டா நகரில் உள்ள பழைய இறைச்சி கடையில் பத்திரமாக வைக்கப்பட்டுள்ளது. உடல் ஒரு பெட்டியில் வைக்கப்பட்டு அது ஒரு குளிர் சாதனப் பெட்டியில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அவரது உடலை எங்கு எப்போது அடக்கம் செய்வது என்பது குறித்து இடைக்கால அரசின் பிரதிநிதிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

இறுதியில் அவரது உடலை இரகசிய இடத்தில் அடக்கம் செய்வது என முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது கடாபியின் மனைவி மற்றும் மகள் ஆயிஷா, 2 மகன்கள் அயல் நாடான அல்ஜீரியாவில் தஞ்சம் அடைந்துள்ளனர். கடாபி அவரது மகன் முட்டாசிம் ஆகியோரின் உடல்களை தங்களிடம் ஒப்படைக்கும்படி கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் அவர்களின் உடலை சிர்த் நகரில் இஸ்லாமிய முறைப்படி அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் என லிபியாவின் இடைக்கால அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த தகவலை சிரியாவில் இருந்து ஒளிபரப்பாகும் கடாபி ஆதரவு தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது. இது குறித்து நடவடிக்கை எடுக்கும்படி ஐ.நா. சபை மற்றும் சர்வதேச இஸ்லாமிய அமைப்புக்களை நாட இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். கடாபி கொல்லப்பட்ட சம்பவமும் அவரது புகைப்படமும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. அதை அல்ஜீரியா தொலைக்காட்சியில் பார்த்த கடாபியின் மகள் ஆயிஷா மயக்கம் அடைந்தார். இதை தொடர்ந்து அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (4-2)

# ஈராக் போர் முடிவுக்கு வந்தது அமெ.படைகள் வாபஸ் பெறப்படும்

## பராக் ஒபாமா தெரிவிப்பு



(வோஷிங்டன்)

கடந்த 8 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வந்த ஈராக் போர் தற்போது முடிவுக்கு வந்துள்ளதாகவும் இதனையடுத்து இந்தாண்டின் இறுதிக்குள்ளாக ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் வாபஸ் பெறப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

ஈராக் பிரதமர் நூரி அல்மாலிகி உடனான வீடியோ கான்பரன்சிங்கிங்கிற்கு பின்னர் வெள்ளை மாளிகையில் பத்திரிகையாளர்களை ஜனாதிபதி ஒபாமா சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது, ஈராக்கில் முன்னாள் ஜனாதிபதி சதாம் உசேன் மறைவின் போதிலிருந்து அங்கே அமைதி திரும்ப ஆரம்பித்து விட்டது. ஆனால், ஈரான் மற்றும் பல்வேறு வெளிநாட்டு அமைப்புகளால் ஈராக்கிற்கு அச்சுறுத்தல் தொடர்ந்த வண்ணம் இருந்தது. அதற்காகவே அமெரிக்கப் படைகள் அங்கு தங்கியிருந்தது. தற்போது அங்கு இயல்புநிலை திரும்பியுள்ளது. மேலும் பொருளாதாரத்தில் சிறந்த ஸ்திரத்தன்மையும் உருவாகும் நிலை ஏற்பட்டது. இதன்மூலம் ஈராக் புத்துயிர் பெறும் என்று தங்களுக்கு நம்பிக்கை வந்ததையடுத்து அங்கிருந்து படைகள் வாபஸ் பெற முடிவு செய்யப்பட்டது. அமெரிக்காவின் இந்த முடிவுக்கு ஈராக் பிரதமர் மாலிகியும் சம்மதம் தெரிவித்துள்ளார்.

அடுத்த 2 மாதங்களுக்குள் ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படையினர் தாயகம் திரும்ப உள்ளனர். அவர்களின் முகத்தில் வெற்றிக்களிப்பு தற்போதே தெரிவதாகவும் விரைவில் அவர்களின் குடும்பத்தினரும் இந்த வெற்றியை கொண்டாட இருப்பதாக அவர் தெரிவித்தார். (4-2)

# தனி தெலுங்கானா விவகாரம் சோனியாவுக்கு எதிராக வழக்கு

(நகரி)

ஆந்திர மாநிலம் ஐதராபாத்தைச் சேர்ந்த சட்டத்தரணி அருண்குமார் என்பவர் டில்லி பாட்டியாலாவில் உள்ள நீதிமன்றில் தனித் தெலுங்கானா விவகாரத்தில் சோனியாகாந்தி மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்யக்கோரி மனு ஒன்றை தாக்கல் செய்தார். அவர் அதில் கூறியிருப்பதாவது,

ஆந்திராவை இரண்டாகப் பிரித்து தெலுங்கானா தனி மாநிலம் அமைக்கக்கோரி பல ஆண்டுகளாகப் போராட்டம் நடந்து வருகிறது. இந்நிலையில் கடந்த ஆண்டு டிசெம்பர் 9 ஆம் திகதி காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, ப.சிதம்பரம்மூலம் ஒரு அறிக்கை வெளியிடச் செய்தார். அதில் தெலுங்கானா தனி மாநிலம் அமைக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பின் சோனியா காந்தி தெலுங்கானா தனி மாநிலம் அமைக்கவில்லை. இதனால் மனம் உடைந்த 600 இற்கும் மேற்பட்ட தெலுங்கான ஆதரவாளர்கள் தற்கொலை செய்து கொண்டனர். இதற்கு காரணமான சோனியாகாந்தி மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்ய பொலிஸாருக்கு உத்தர விட வேண்டும் என அவர் அதில் குறிப்பிட்டிருந்தார்.

இம்மனுவை நீதிபதி சுதேஷ் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டார். பின்னர் அவர் சட்டத்தரணி அருண்குமாரிடம் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்குள் சோனியா காந்தி தனி மாநில அறிவிப்பை வெளியிட்டதற்கான ஆதாரங்களை தாக்கல் செய்யும்படி உத்தர விட்டார். (4-2)

# கடாபியின் கொலை குறித்து விசாரணை நடத்த உத்தரவு

## ஐ.நா. மனித உரிமைப் பேரவை வலியுறுத்து

லிபியாவின் முன்னாள் தலைவர் கேணல் முவம்பர் கடாபியின் படுகொலை தொடர்பில் விசாரணை நடத்துமாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை வலியுறுத்தியுள்ளது.

கடாபியின் சொந்த இடமான சிர்த்தில் கிளர்ச்சியாளர்களால் அவர் உயிருடன் பிடிக்கப்பட்ட போதிலும் பின்னர் இரத்தக்கறைகளுடனான அவரது சடலமே ஊடகங்களுக்கு காண்பிக்கப்பட்டது. இந்நிலையில் விசாரணைகளை நடத்துவதற்கான தேவை ஏற்பட்டுள்ளதாக மனித உரிமைகள் பேரவைக்கான ஐ.நா.வின் உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார்.

மோதல்களின்போது கடாபி கொல்லப்பட்டாரா அல்லது உயிருடன் பிடிக்கப்பட்டதன் பின்னர் படுகொலை செய்யப்பட்டாரா,என்பது தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் அவசியமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடாபியின் மரணம் தொடர்பில் வெளியாகியுள்ள காணொளிகள் முரணானவையாக இருப்பதாக ஜெனீவாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மனித உரிமைகள் பேரவைக்கான ஐ.நா.வின் உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முவம்பர் கடாபியின் சடலத்தை அடக்கம் செய்வதற்கான நடவடிக்கை பிற்போடப்பட்டுள்ளதாக லிபியத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. கடாபியின் மரணம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னரே அடக்கம் செய்வதற்கான திகதி தீர்மானிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை லிபியாவில் இடம்பெறும் வன்முறைகள் தொடர்பில் ஆராய்வதற்காக இந்த வருட ஆரம்பத்தில் மனித உரிமைகள் பேரவையால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு கடாபியின் கொலை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில் இந்தக் கொலை தொடர்பில் நியாயமான விசாரணைகள் முன்னெடுக்கப்படுமென மனித உரிமைகள் பேரவைக்கான ஐ.நா.வின் உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டியுள்ளார். (4-2)

# ஜெயா. மீதான சொத்துக்குவிப்பு வழக்கு நவம்பர் வரை ஒத்துவைப்பு

## 8 ஆம் திகதி ஆஜராக உத்தரவு



தமிழக முதல்வர் ஜெயலலிதாவிடம் விசாரணை முடிவடையாததால் எதிர்வரும் நவம்பர் மாதம் 8ஆம் திகதி மீண்டும் அவர் ஆஜராக வேண்டும் என்று பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி மல்லிகார்ஜுனய்யா உத்தரவிட்டுள்ளார். நகை மற்றும் பொருட்களை மறு மதிப்பீடு செய்யவேண்டும் என்று நீதிபதியிடம் ஜெயலலிதா கேட்டுக்கொண்டுள்ளார்.

சொத்துக்குவிப்புக் குறித்து நீதிபதி மல்லிகார்ஜுனய்யா ஜெயலலிதாவிடம் சரமாரியாக கேள்விகளைக் கேட்டார். இரண்டாவது நாள் விசாரணையில் 187 கேள்விகள் கேட்டார் நீதிபதி.

ஒரு ரூபாய் ஊதியம் பெற்றவருக்கு ஏராளமான புடைவைகள்,நகைகள் வந்தது எப்படி என்ற கேள்விக்கு அவை தனது பாரம்பரிய சொத்து என விளக்கம் அளித்தார் ஜெயலலிதா. இதுபோன்று பல கேள்விகளுக்கு ஜெயலலிதா பதிலளித்துள்ளார்.

சொத்துக்குவிப்புக் குறித்து மொத்தம் ஆயிரத்து 339 கேள்விகள் கேட்கப்போவதாக நீதிபதி திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த 2 நாட்கள் விசாரணையில் ஜெயலலிதாவிடம் 567 கேள்விகள் கேட்கப்பட்டது. மேலும் 772 கேள்விகள் கேட்பதற்காக எதிர்வரும் நவம்பர் மாதம் 4ஆம் திகதி வருமாறு கூறினர். அன்றைய தினமும் இயலாது என்று தெரிவித்தோம். இரண்டு தரப்பையும் கலந்தாலோசித்து எதிர்வரும் 8ஆம் திகதி அடுத்த விசாரணை நடக்கும். அன்றையதினம் ஜெயலலிதா ஆஜராக வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

விசாரணை முடியாததால் உச்சநீதிமன்றம் சென்று எங்கள் தரப்பு நியாயத்தை எடுத்துரைப்போம். விரைவில் உச்சநீதிமன்றம் செல்லவுள்ளோம். கண்டிப்பாக நீதிமன்றில் ஆஜராகவேண்டும் என்று கூறினால் சிறப்பு நீதிமன்றத்திற்கும் வருவோம் என்று பதிலளித்துள்ளார்.

அரசு தரப்பில் ஆச்சார்யா, சந்தேசவுட்டா மற்றும் மூன்று வழக்கறிஞர்கள் ஜெயலலிதா தரப்பில் வழக்கறிஞர்கள் குமார், கந்தசாமி, அசோக், செந்தில், சரவணகுமார், ராஜன் ஆகியோர் ஆஜராகினர். (4-2)

# கனிமொழி, ராசா மீது நம்பிக்கை துரோக மோசடி என்ற புதிய வழக்குத் தாக்கல்

2ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் முன்னாள் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் ஆ.ராசா, தி.மு.க.எம்.பி. கனிமொழி ஆகியோர் மீது இந்திய குற்றவியல் சட்டம் 409 இன் கீழ் நம்பிக்கை துரோக வழக்கை நீதிமன்றம் பதிவு செய்துள்ளது.


இந்த வழக்கில் கடந்த மாதம் 26 ஆம் திகதி இந்தியத்தண்டனைச்சட்டம்409ஆம் பிரிவின் கீழ் நம்பிக்கை துரோகம் மோசடி என்ற புதிய குற்றச்சாட்டை இந்த 17 பேர் மீதும் சி.பி.ஐ. பதிவு செய்தது. இதில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம். இதனால் சி.பி.ஐ.யின் இந்த புதிய குற்றச்சாட்டுக்கு 17 பேரும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்நிலையில் நேற்று இது தொடர்பாக நீதிபதி ஓ.பி. சைனி உத்தரவு பிறப்பித்தார். குற்றம் சாட்டப்பட்ட ராசா, கனிமொழி உள்ளிட்ட 14 பேர் மீதும் ரிலையன்ஸ் டெலிகொம், ஸ்வான் டெலிகொம் மற்றும் யூனி டெக் வயர் லெஸ்-தமிழ் நாடு ஆகிய தொலைத்தொடர்பு நிறுவனங்கள் மீதும் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 120 இன் கீழ் கிரிமினல் சதி குற்றச்சாட்டுக்களை பதிவு செய்ய நீதிபதி உத்தரவிட்டார்.

அதேநேரத்தில் ராசா, கனிமொழி ஆகியோர் மீது நம்பிக்கைத் துரோக மோசடி குற்றச்சாட்டை பதிவு செய்யவும் உத்தர விட்டார். அனைவரும் சிறையிலிருந்து நேற்றைய தினம் நீதிமன்றத்துக்கு அழைத்து செல்லப்பட்டிருந்தனர். நீதிபதி உத்தரவு பிறப்பித்த பின் சி.பி.ஐ. பதிவு செய்துள்ள குற்றச்சாட்டை படித்துப் பார்த்த பின்னரே இந்த உத்தரவு நகலில் கையெழுத்திட முடியும் என குற்றம் சாட்டப்பட்டவர்கள் கூறினர். இதையடுத்து மாலை வரை நீதிமன்றத்திலேயே இருந்து படித்துப் பார்த்துவிட்டு மாலையில் சிறைக்குச் செல்லுமாறு நீதிபதி உத்தரவிட்டார். (4-2)

# இரட்டைச் சதம் குவித்தார் சங்கக்காரா

## முதலாவது டெஸ்ட் சமனிலையில் முடிவு



இலங்கை-பாகிஸ்தான் அணிகளுக் கிடையில் அபுதாபியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிபுற்றுள்ளது.

இப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி 197 ஓட்டங்களைப்பெற, பாகிஸ்தான் அணி 6 விக்கெட் இழப்புக்கு 511 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

போட்டியின் 4ஆவது நாளான நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவின்போது இலங்கை அணி 5 விக்கெட் இழப்பிற்கு 298 ஓட்டங் களைப் பெற்றிருந்தது.

இந் நிலையில் 5ஆம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 483 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் குமார் சங்கங்கார 211 ஓட்டங் களைப் பெற்றார். இது டெஸ்ட் போட்டிகளில் குமார் சங்கக்கார பெற்ற 8ஆவது இரட்டைச் சதமாகும். பிரசன்ன ஜெயவர்த்தன 120 ஓட் டங்களைப்பெற்றார். டெஸ்ட் போட்டிகளில் பிரசன்ன ஜெயவர்த்தன பெற்ற 4ஆவது சதம் இதுவாகும்

வெற்றி பெறுவதற்கு 170 ஓட்டங்கள் தேவையான நிலையில் பாகிஸ்தான் அணி நேற்று மாலை இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. அவ்வணி ஒரு விக்கெட் இழப் பிற்கு 21 ஓட்டங்கள் பெற்ற நிலையில் போட்டி முடிபுக்கு வந்தது. குமார் சங்கக்கார போட்டி யின் சிறப்பாட்டக்காரராக தெரிவானார்.

# நான்காவது போட்டியில் இன்று இந்தியா - இங்கிலாந்து மோதல்

(மும்பை)

இந்தியா – இங்கிலாந்து அணிகள் மோதும் நான்காவது ஒருநாள் போட்டி இன்று நடக்கிறது. ஏற்கெனவே தொடரை வென்றி ருந்தாலும் இன்றும் இந்திய அணியின் வெற்றி தொடரும் என்று நம்பப்படுகிறது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள இங்கிலாந்து அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கிறது. இதன் முதல் மூன்று போட்டிகளில் அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்திய அணி 3:0 என முன் னிலை பெற்று தொடரை வென்றது. இரு அணிகள் இடையிலான நான்காவது போட்டி மும்பை வன்கடே மைதானத்தில் பகலிரவு போட்டியாக இன்று நடக்கிறது.

### ஆதிக்கம் தொடரும்

உலகக்கிண்ண தொடருக்கு பின் முன் னணி வீரர்கள் இல்லாமல் இங்கிலாந்தில் இந்திய அணி ஒரு போட்டியில் கூட வெல்லா மல் திரும்பியது. தற்போதைய தொடரில் ஹட்ரிக் வெற்றியுடன் தொடரை வென்ற உற்சாகத்தில் தோனி அணியினர் களம் காணுகின்றனர்.

### துடுப்பாட்ட முன்னேற்றம்

முதல் போட்டியில் மோசமான ஆட்டத்தை கொடுத்த இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்கள் அதன் பின் ஒவ்வொரு போட்டியிலும் முன் னேற்றம் அடைந்து வருவது அணி நிர்வாகத் துக்கு நம்பிக்கை அளித்துள்ளது.

திரோட், கீஸ்வேட்டர், பீற்றர்சன், சமித் பட்டேல் ஆகியோர் இன்றும் உறுதியான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் வெற்றி பெறலாம்.

### புதிய வியூகம்

ஆடுகளம் இங்கிலாந்து பந்து வீச்சாளர் களுக்கு ஒத்துழைக்காத நிலையில் இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர்களை வீழ்த்த அணித்தலைவர் குக் புதிய வியூகம் அமைக்க வேண்டும். தவிர களத்தடுப்பிலும் நல்ல முன் னேற்றம் தேவை. இந்த தவறுகளை திருத்திக் கொண்டால் இன்றைய போட்டியில் எழுச்சி பெறலாம்.

மொத்தத்தில் தொடர் வெற்றியை தொடர இந்திய அணியும் முதல் வெற்றியை பதிவு செய்ய இங்கிலாந்து அணியும் போராடும் என்பதால் இன்றைய போட்டி அதிக எதிர் பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஐ.நா.செயலாளரை...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது,

அமெரிக்கா,கனடா ஆகிய நாடுகளுக்கு எதிர்வரும் 25-ம் திகதி பயணத்தை மேற் கொள்ளவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற குழுவினர் நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூனைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இதன்போது வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஐ.நா. செயலாளருக்கு எடுத்துக் கூறப்படும்.

குறிப்பாக மீள்குடியேற்றம், உயர் பாது காப்பு வலயங்களாக உள்ள வாழ்விடங்கள், அரசின் நில அபகரிப்பு நடவடிக்கை உட்பட்ட பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்படும்.

அத்துடன் அரசு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்குவதில் அக்கறை காட்ட வில்லை என்பது எடுத்துரைக்கப்பட்டு ஐ.நாவின் அழுத்தம் அவசியம் என வலி யுறுத்தப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரிய நேத்திரன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டனைச் சந்திப் பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்திகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனிடம் வினவப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர், அவ்வாறான தடை குறித்து தமது கட்சிக்கு உத்தியோக பூர்வமான அறிவித்தல்கள் எதுவும் விடுக்கப் படவில்லை எனத் தெரிவித்தார். (பா)

# கடாபி மரணம்...


என சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்திருந்த நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் அதுதொடர்பில்வலியுறுத்தி யுள்ளார்.

அதேவேளை, கேணல் கடாபியின் மரணம் தொடர்பில் வெளிப்படைத்தன்மையுடன் கூடிய முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அமெரிக்காவும் தெரிவித்துள்ளது. (பா)

# மரண அறிவித்தல்கள்

## சண்முகம் காங்கேசன்

(Mechanical Engineer,UK)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிட மாகவும், யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி கற்று லண்டனைத் தொழில் இடமாகவும் கொண்ட சண்முகம் காங்கேசன் 21-ம் திகதி வெள்ளிக் கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண் முகம், பாக்கியரத்தினத்தின் அன்பு மகனும், தெல்லிப்பழை கொமிஷனர் சங்கரப்பிள்ளை செல்லமுத்துவின் அருமை மருமகனும், மலைமகளின் பாசமிகு அன்புக் கணவரும் ஆவார்.

இராஜகோபால் குணவதி, காலஞ்சென்ற Dr.சிவநேசன், பரமேஸ்வரன்,குமரேசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், த.இராஜ கோபால், ச.சற்குணராஜா, ச.லோகராஜா, ச.ஏகாம்பரநாதன்(UK), ச.தில்லைநாதன்(UK), திருமதி திருமகள் தயாளசீலன்(UK) ஆகியோரின் மைத்துனரும், ப.கலா(மலேசியா), Dr. சண்முகராஜா (மலேசியா), சி.சித்திராங்கி(கீதா) (இந்தியா), பா.யசோதா (இந்தியா) ஆகியோரின் சிறிய தகப்பனாரும்,

குகனின் மாமாவும் ஐங்கரன், கவிதா, ராம், ஹரிஸ், ஐஸ்வரியா ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 23.10.2011 ஞாயிற்றுக்கிழமை(இன்று) 12 மணியளவில் வட்டு தெற்கு, வட்டுக்கோட்டையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: திருமதி கா.மலைமகள் (மனைவி)**
7 BRENDON CONS
NEW BURY PARK
IG2T.J.P. UK
02085972822

**இராஜகோபால் குகன்**
**(மருமகன்)**
**0779123670**

(சி-4801)

## தம்பிஜயா கமலேஸ்வரன்



சாயி பக்தரும் இணுவில் செகராசசேக ரப் பிள்ளையார் கோவிலடியை பிறப் பிடமாகவும் 'ஈஸ்வரி இல்லம்' இணுவில் மேற்கை வசிப்பிடமாக கொண்டவரும் ஓய்வுபெற்ற தபாலதிபருமாகிய (சுழிபுரம்) தம்பிஜயா கமலேஸ்வரன் அவர்கள் 22.10.2011 சனிக்கிழமை அன்று இறை பதம் அடைந்தார்.

அன்னார் ஜெயராணியின் அன்புக் கணவரும் பானுரேகா (சுவிஸ்), மோகன காந்தன் (அவுஸ்திரேலியா), கமலகாந்தன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மற்றும் காலஞ்சென்ற தம்பிஜயா, செல்லம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற க.சி.செல்லப்பா (தாமோதரா ஸ்ரோர்ஸ் மன்னார்), பூமணி தம்பதியரின் மூத்த மருமகனும், பஞ்சலிங்கம் ஜெயசீலன் (சுவிஸ்), கோகிலா (அவுஸ் திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அக்ஸ்சராவின் (அவுஸ்திரேலியா) அருமைப் பேரனும், திருமதி கமலேஸ்வரி சின்னத்துரை (கொழும்பு), பரமேஸ்வரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), அமரர் ரவீந்திரன் (ஆசிரியர்), நகுலேஸ்வரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), கமலாகரன், திருமதி ரஜனிதேவி (கொழும்பு), மனோகரன் (நூலகர், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை கோப் பாய்), பாஸ்கரன்(இலண்டன்) ஆகியோரின் ஆருயிர் சகோதரரும் தளையசிங்கம் (கனடா), ஜெயராசா (கனடா), ஜெகதீஸ்வரன் (கனடா), ஜெகதீஸ்வரி (வசந்தா), ஜெயகுமாரன் (குகன்-கனடா), ஜெயக்குமாரி(மலர்), சின்னத்துரை, சிவேஸ்வரி, சரோஜினிதேவி, அமரர் தங்கேஸ்வரி, அமரர் குணசேகரம் (கொழும்பு) மற்றும் சந்திரகலா, சறோஜாதேவி, சசிவதனி ஆகியோரின் நேசமிகு மைத்துனரும், சத்தியபாமா (கனடா), இராமநாதன் யாழ்.மாநகர சபை), சிவகுமாரன் (ஆசிரிய வள நிலைய முகாமையாளர், வலிகாமம் கல்வி வலயம்), லீலா (கனடா), வாசுகி(கனடா), கலா(கனடா) ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.10.2011 திங்கட்கிழமை பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**'ஈஸ்வரி இல்லம்'**
**அளவோடை வீதி**
**பரராசசேகரப்பிள்ளையார் கோவிலடி,**
**இணுவில் மேற்கு, இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(சி-4802)

உல்லாசம் உங்கள் கண்முன்னே...

**TILKO JAFFNA CITY HOTEL**

No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969



web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com



# இடமாற்றம்

இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த

**நியூ லலீதாஸ் ஜுவல்லறீ** ஸ்தாபனம்

10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு : 021 222 4134




## ஹேக் நீதிமன்ற...

தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் இது சர்வதேச ரீதியாக தாக்கத்தை ஏற்படுத்தும் என்று வாஷிங்டன் போஸ்ட் சுட்டிக் காட்டியுள்ளது.

விடுதலைப் புலிகள் இந்த நீதிமன்றத்தின் அறிவிப்பு அடிப்படையில் தம் மீதான தடைகளை நீக்கிக் கொள்ள முயற்சி செய்யலாம் எனவும் வாஷிங்டன் போஸ்ட் தெரிவித்துள்ளது. (பா)

## ஜனாதிபதி...

வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் இந்த மாநாட்டில் பொது நலவாய நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் கொள்கைகள் தொடர்பில் அறிவுறுத்தும் நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

இம்முறை மாநாட்டில் நாடுகளின் சுயாதீனத் தன்மையை பாதுகாத்துக் கொள்வது தொடர்பில் ஆராயப்படவுள்ளது. (பா)


**வரணி மிசன் பாம்**

இறைச்சிக் கோழி (Broiler)
முட்டை (Egg)
மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0773435719
விற்பனை நிலையம்,
வரணி மிசன்பாம்,
வரணி.
(6641)



**After A/L? விசேட கலந்துரையாடல்**
24.10.2011. 9AM-11AM

**CIMA-UK**
Batch I : Sat 7.30-2PM
Batch II : Sun 2-5 PM
Batch III : Mon - Fri 8.30 AM - 2 PM

**Engineering-USA**
Software / Network
Government Schol.

**BIT** University of Colombo
Batch I : Sat & Sun 8 - 12PM
Batch II : Sat & Sun 2 - 6PM
Batch III : Mon- Thu 4.30-5.30 PM

கற்கை நெறி ஒன்றைப் பயிலும் மாணவர்கள் BCS - UK , IELTS, TOEFL, CISCO-CCNA,Oracle Java, ICDL, கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.

Qualified Lectures Panel, Passing Guarantee,12 Years Experience

**MCS**
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Parameswara Junction

**Free5** Course fee*
Diploma Courses..
*MsOffice, AutoCAD, *Web Designing *Hardware *Accounting *DTP *English

தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம். உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்



**அறிவித்தல்**

**மகேஸ்வரி நிதியம் – அலுவலகம் இடமாற்றம்**

இலக்கம் 110, 4ம் குறுக்குத்தெருவில் அமைந்திருக்கும் மகேஸ்வரி நிதியத்தின் வடமாகாண தலைமைக் காரியாலயம் எதிர்வரும் 24.10.2011 (திங்கட்கிழமை) இல் இருந்து இல. 70, கோவில் வீதி, யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரி வீதிக்கு அருகாமையில்) என்னும் முகவரியில் தனது பணிகளை மேற்கொள்ளும்.

♦ மணல் பெறும் பயனாளிகளும் மேற் கண்ட புதிய அலுவலகத்திலேயே பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

த. றஜீவ்
செயற்திட்ட இணைப்பாளர்
மகேஸ்வரி நிதியம்
(சி-4778)



# ESOL Diploma in English

City & Guilds Approved Centre

City & Guilds a Royal Chartered Institution is one of the world's leading vacational qualification awarding bodies. எமது கல்லூரி City & Guilds Rayal Charter இனதும் Cambridge பல்கலைக் கழகத்தினதும் பதிவு செய்த நிலையமாகும்.



Our Lecturers
1. Mr.K.NAGARAJAN. B.A (cey)
M.A (Kelaniya) TKT (Cambridge. UK)
a. 15 வருடங்கள் கிழக்குப் பல்கலைக்கழக ELTU வில் போதனாசிரியராக இருந்தவர்.
b. 20 வருடங்களுக்கு மேலாகத் திறந்த பல்கலைக்கழக வருகை தரு ENGLISH Tutor ஆக இருப்பவர்.
c. Served as a tutor for the promotion of the Quality Improvement of Teachers by Secretary for Education chaired by the State Secretary for Education.
2. Mr.J.Sahayathasan
M.A (English Language) University of Sydney
M.A (English Litterature) University of Sydney

Why City & Guilds English Qualifications?
Recognized by UK Universities and UK Border Agency
Directly Linked to the Common European Framework
Certificate for Lifetime

A/L முடித்த மாணவர்கள் அதிஉயர்ந்த English அறிவைப் பெற City & Guilds இன் B1, B2 மட்டங்களில் அடிப்படையில் இருந்து ஆங்கிலத்தை படிக்க முடியும்.
B2 , C1 , மட்டங்களில் பல மாணவர்கள் எமது கல்லூரில் பரீட்சையில் சித்தியடைந்து City & Guilds இன் சான்றிதழ்களையும் பெற்று வெளிநாடுகளிற்கு சென்றுள்ளனர்.
பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

IELTS புதிய வகுப்புக்கள் 05.11.2011ல் ஆரம்பமாகும்.
Sat & Sunday - 8.30 am - 11.30 am

**U.K. வீஸாவுக்கான A1,A2 English Courses**

திருமணம் செய்த இல்லத்தரசிகள் அல்லது British பிரஜைகளை திருமணம் செய்ய இருக்கும் அனைவரும் கட்டாயமாக ஆங்கிலத்தில் தேர்ச்சியடைய வேண்டும். UK Border Agency அங்கீகரிக்கும் பாடநெறி City & Guilds இன் Diploma in English (A1, A2) மட்டுமே எல்லா மட்டங்களிலும் பூரண கல்வியை பெற்று எமது கல்லூரியில் பரீட்சையை எழுத முடியும்.

| Course Schedule | Mon -Tue-Wed-Thu-Fri | Sat & Sun |
|---|---|---|
| Duration | 2 Months (100 hours) | 3 Months (100 hours) |
| Time | 8.30.10.30 a.m 10.30.12.30 p.m | 2.00 p.m 5.00 p.m |
| Commencement | 07.11.2011 | 07.11.2011 |

(C-4780)

**Registration : Rs 500/= Course Fee :100 /= per hour**

**வகுப்புகள் 07.11.2011 ஆரம்பம்**

**CITY COLLEGE OF ENGLISH**
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)
143, Adiyapatham Road, Thirunelvely. T.P: 0213216027 - 0778803887



PCH Benchmark ICT

# பதவி வெற்றிடம்

இலங்கையில் கணனி விற்பனையில் முன்னணியாக திகழ்வதுடன் தொழில்நுட்ப வல்லுநர்களையும் கொண்ட PC house நிறுவனத்தினால் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

➤ அலுவலக இணைப்பாளர் (Office Cordinator-Jaffna (Female)
கணனி அறிவு (MS Office), ஆங்கில அறிவு- எழுத, வாசிக்க.

➤ சாரதி-கொழும்பு (Driver-Colombo)
பாரவூர்தி (Lorry) வயது 25-45
சம்பளம்:- ரூ. 20,000.00 தங்குமிட வசதி
மேலதிக படிகள் தினம்:- 350/-
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

(5206)

**24.10.2011 திங்கட்கிழமை முதல் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.**

கீழ்க்கண்ட முகவரியில் நேரிலோ அல்லது தபால், மின்னஞ்சல் ஊடாகவும் விண்ணப்பிக்கலாம் .

PC House PLC
1K, Stanley Road, Jaffna.
T.P: +94 21 4920572 Fax:- +94 21 2226671
Mobile:- +94 77 7555855 E-mail:- u_shukoor@pch.lk



சிங்கப்பூரில் புகழ் பெற்ற AJ Systems நிறுவனத்தினரால் இப்போது யாழ்ப்பாணத்தில் Super Market, Jewellery Shop மற்றும் அலுவலகங்களுக்கு ஏற்ற வகையில் சிங்கப்பூர் தொழிநுட்பவியர்களினால் CC TV கமரா பொருத்தித் தரப்படும்.

"உங்கள் பாதுகாப்பை நீங்களே உறுதிப்படுத்தி கொள்ளுங்கள்"

தொடர்புகளுக்கு
AJ Systems i (Pvt) Ltd
24 Hours call 0776237546
(6662)







இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.